தென்மொழி

தனித்தமிழ்
இலக்கியத்திங்களிதழ்



பொங்கலும் வேண்டுமோ

மொழியுங் கவலாய்; உரிமையுங் காவா
அடிமையுற்ருய்!
விழியுந் திறவாய்; செவியுந் திறவாய்;
உளந்திறவாய்;
பிழியுங் கரும்பின் நறவொடு பால்தேன்
பயந்து, சுவை
பொழியும் நறுமணப் பொங்கலும் வேன்
போக்கிலியே! [டுமே

—*—

தை-தி. பி. 1995.

50 காசு

தென்மொழி
இலக்கிய இதழ்

சிறப்பாசிரியர்
புலவ, பண்டித
ஞா. தேவநேயப் பாவாணர்

பொறுப்பாசிரியர்
பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்
ம. இலெ. தங்கப்பா
மு. சாத்தையா
செம்பியன்

'கெஞ்சுவதில்லை பிறர்பால! அவர்செய் கேடடினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

கடலூர் - 2

சுவடி 1. | தை–தி. பி. 1995 (1964 சனவரி) | ஓலை 12.

சக்ளாவின் செருக்குரை.

குலச் செருக்கு, சமயச் செருக்கு, செல்வச் செருக்கு, அறிவுச் செருக்கு முதலியன போல், இக்கால் அரசியல் செருக்கும் ஆணைச் செருக்கும் மிகுந்துள்ளன. இவற்றொடு நாகரிகச் செருக்கையும் இணைத்துக் கொள்ளலாம். பெரும்பாலும் இத்தனை வகைச் செருக்குகளுக்கும் இக்கால் இந்தியாவே நிலைக்களனாக உள்ளது எனவும் கூறலாம். ஒருவர்க் கொருவர் தம்மை மேற் குலமாகக் கருதி யொழுகுகின்ற குலச் செருக்கும், 'தீக்குறளை சென்றோதோம்' என்ற திருப்பாவை அடிகட்குத் 'திருக்குறளைச் சென்று படியோம்' என்று வாய் கொன்னிப் பேசித் திரிகின்ற சமயச் செருக்கும், தம்மை நிலக்கிழார், இலக்கத்தார், கோடியர் என்று கூறித் திரிகின்ற செல்வச் செருக்கும், பொறி, புலன், பூத, உள்ள, உடல் முதலிய தோற்றப் பொருள்களைப்பற்றியும், அவையடி முகிழ்த்த தேற்றப் பொருள்களைப்பற்றியும் அறியாமல் இறை மறுப்புக் கொள்கை ஒன்றே பற்றிப் பகுத்தறிவு என்ற ஒரு சொல்லுக்கு உரியவர் தாங்களே என்றும், பிறரெல்லாரும் தொகுத்தறிவு படைத்தாரே என்றும் அரற்றித்திரிகின்ற அறிவுச் செருக்கும், பேராயக் கட்சி ஒன்றே ஆளுந் தகுதி வாய்ந்தது; அக்கட்சியிலேயே அறிவு சான்ற ஆளுமை வல்லார் உளர் என்று பிதற்றித் திரிகின்ற நம்நாட்டு அரசியல் செருக்கும்போல் உலகில் வேறு எங்கணும் காண்பது அரிது. பொதுவாக மேற்

உரிமை, வெளியீடு
தாமரை, உலக முதல்வி

முத்திரா அச்சகம்
திருப்பாதிரிப்புலியூர்

தனி இதழ்
50 காசு

கூறிய எவ்வகைச் செருக்குற்றோரும் தம் வாயைத் திறந்து கொண்டு பிறர் வாயை அடைக்கின்றவராகவும், தம் கண் காது களை மூடிக்கொண்டு பிறரின் கண் காதுகளை இடிப்பவராகவுமே இருப்பர். இவையிற்றிடை அரசியல் செருக்கால் தலையெடுத்த ஒரு சிலர் இக்கால் ஆணைச் செருக்கும் படைத்துப் புடைத் தெழுந்து நிற்கின்றனர். அவருள் நம் நடுவணரசவைக் கல்வி யமைச்சர் திரு. எம். சி. சக்ளாவும் ஒருவராவர் அவர் அமைச் சவைக்குள் பூனை போல் நுழைந்து, மக்களவைக்குள் புலிப் பாய்ச்சல் காட்டியுள்ளதைக்கண்டு நாம் வியக்காமல் இல்லை.

அண்மையில் திரு. சக்ளா பேசிய கூட்டமொன்றில், ''தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக ஆக்குவதே என் முதல் வேலை; அஃதை எவ்வகையிலும் செயல்படுத்தியே தீர்வேன்'' என்று செருக்குரை கூறியுள்ளார். இவர் தம் அறிவாற்றல் திறம்பற்றி நாம் ஒருவாறு அறிவோம் எனினும், உள்ளே காழ்த்துக் கொண்டிருக்கும் தன்னுண்மைத் திறர்பற்றி இப்பொழுதே அறிய வந்தோம். அவர் கூறியதுபோல் தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக ஆக்குவதுதான் அவ ருடைய முதல் வேலை என்றால், அதுவே அவருடைய முடிவான வேலையாகவும், முடிவுறாத வேலையாகவும் இருக்கும் என்பதை அமைச்சர் இப்பொழுதே சிவப்பு மையால் எழுதி வைத்துக் கொள்ளலாம். இத்தகைய செருக்குரையைச் செயலாற்றி விட திரு. சக்ளா வலிந்தாருமல்லர்; தமிழர் மெலிந்தாருமல்லர். பேராயக் கட்சித் தலைமையை ஒரு தமிழர்க்குக் கொடுத்ததற்கே இத்தகைய அரசியல் விரகுதான் அடிப்படைக் காரணமாகும் என்பதை இங்குள்ள பேதைத் தமிழர் இனியேனும் புரிந்து கொள்வர் என்று கருதுகின்றோம். இந்நிலையில் அமைச் சர்க்கும் மக்கட்கும் இன்னொன்றை நினைவுபடுத்த விரும்பு கின்றோம்.

வெள்ளையன் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஆக்கி முந்நூறாண்டு ஆண்டதற்கும் அவன் போய்ப் பல்லாண்டாகியும் அவன் மொழியான ஆங்கிலத்தை மக்கள் இன்னமும் விரும்பிப் பயின்று வருவதற்கும், ஒரு காலத்தில் ஆங்கிலத்தை வலுக் கட்டாயமாக ஆட்சி மொழியாக்கிக். கல்வித்துறையில் முதன் மொழியாகச் செய்து வைத்தது தான் காரணம் என்று பேசப்படு மானால் அதைவிட அறியாமை வேறொன்றும் இருத்தல் முடியாது. ஆங்கிலேயன் தன் ஆட்சி வலுவாலேயே ஆங்கி லத்தை முதன் மொழியாக்கினான் என்பதைத் தவறாகப் புரிந்து கொண்டே, புலியைக்கண்டு பூனையும் சூடிட்டுக் கொண்ட பேதைமைபோல் இந்தி வெறியரும் இக்கால் இந்தியை வலுக் கட்டாயமாகப் பயிலச் செய்ய முயல்கின்றனர். தொடக்கத்தில் ஆங்கிலத்தை வேண்டா வெறுப்பாகக் கற்றாலும் அதில் இருக்

கின்ற அறிவியல் பரப்பே அதனை மக்கள் விரும்பிப் பயின்றமைக்குக் காரணமாகும். இன்னுஞ்சொன்னால் அவன் பிறமொழிகளுக்கும் கொடுத்து வந்த மொழியுரிமையாலேயே ஆங்கில மொழியின்பால் மக்கட்குக் கசப்பும் வெறுப்பும்ஏற்படாமல் இருந்தன. பிற்காலும் அதன்பால் வெறுபபுற்றோ கசப்புற்றோ காந்தியடிகள் உள்ளிட்ட பிறரும் அதை விரட்டப் பாடுபடவில்லை. அதன் வளர்ச்சி ஒரெல்லை யுட்பட்டே இயங்காமற் போமாயின் மக்கட்கு நாட்டுணர்வு மலராமற் போகலாம் என்ற கருத்துப் பற்றியே அவ்வாறு செய்தனர். அதற்கெனச் சில பொய்யுரைகளையும் புகல நேர்ந்தது.

அமைச்சர் திரு. சக்ளாவின் கூற்றுக்குப்பின்னைத் தமிழக முதலமைச்சர் திரு. பக்தவத்சலத்தின் குரலும் மாறுபட்டு ஒலிக்கத் தொடங்கியுள்ளது. 'இந்தியை எதிர்ப்பவர்கள், நாட்டு ஒற்றுமையின் பகைவர்கள்'என்று அண்மையில்முதல்அமைச்சர் முழங்கி யிருக்கின்றார். இந்தி மொழி ஒன்றால்தான் நாட்டு ஒற்றுமை ஏற்படவியலும் என்பது, குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்வது போலும், கொள்ளிக் கட்டையால் தலையைச் சொறிந்து கொள்வது போலும் ஆன அறியாமைக் கூற்றும். பொதுவாக ஆட்சியாளர்தம் ஆணைவலியால் எதையும் தம் விருப்பம்போல் நிலைநாட்டிவிடல் கூடும் என்று கனவு கண்டு வருகின்றனர். இவர்கள் கொள்கை பரப்பும் முறை, சீனரின் கொள்கை பரப்பு முறைக்கு எள்முனையும் தாழ்ந்ததில்லை. புதுக் காசுகளை முதன்முதல் மக்கள் புழக்கத்திற்குக் கொண்டு வருகையில் எதிர்ப்பு இருந்தது போலும், புதுவகையான நிறுத்தல், நீட்டல், கொள்ளல் அளவைகளை அறிவித்தக்கால் ஏற்பட்ட சலசலப்புப்போலும் இந்தியை நுழைக்கையிலும் அதை விரும்பாதவர்கள் கூடி ஒரு முகமாக எதிர்ப்பது எதிர்பார்த்ததுதான் என்றும், காலப்போக்கில் இவ்வெதிர்ப்புச் சரிப்பட்டுப் போகும் என்றும் அரசியல் ஆண்டகைகள் கருதி உள்ளனர் போலும்! இதற்கொப்புதலாகக் குத்துக் கோலில் கொழுப்பைத் தடவுவது போல் அண்மையில் தமிழ்நாடு வந்த நடுவணரசுப் பொதுநலத் துறை அமைச்சர், திருவாட்டி. சுசீலா நய்யார், இந்தி வெறியர்கள் உடனடியாகத் தென்னாட்டார் இந்தி கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுதல் தவறு என்றும், அதற்குக் காலம் வேண்டும் என்றும், மற்ற மொழிகளைக் கற்றுக்கொள்வதில் திறமை மிக்கவர்கள் தென்னாட்டார் என்றும், இந்தியை அவர்கள் மிக எளிதில் கற்றுக் கொள்வார்கள் என்றும், வட இந்தியர்களை விஞ்சும் அளவுக்குத் தென் இந்திய மக்கள் இந்தியைக் கற்றுக் கொள்ளும் நாள் மிக விரைவில் வரவிருக்கின்றது என்றும், தென்னாட்டு அடிமைகளின் முதுகைச் சொறிந்து விட்டிருக்கின்றார். இவ்வகையிலேனும் அம்மையாரின் மருத்துவப் பணி பாராட்டுதற்குரியது!

நம் ஐந்தாண்டுத் திட்டங்களில் சில தோல்வி அடைந்து வருவதற்குக் கடந்த பல ஆண்டுக் காலமாக நடைபெற்று வரும் இவ்விந்தி நுழைப்பிற்கு நாட்டு நலம் பேண வந்த அரசவை அமைச்சர்கள் துணையாக நின்று இவ்வாறு இந்திப் பரப்புநர்களாக இருந்து வருவதும், ஒரு காரணமாகும். அமைச்சர்க்கும், அரசவை உறுப்பினர்கட்கும் ஏற்பட்ட ஆட்சிக் காலமான ஐந்தாண்டுக் காலத்தில், முதல் ஓராண்டு தமக்குக் கிடைத்த வெற்றி விழாவைக் கொண்டாடுவதிலும், அடுத்த ஓராண்டு;தாம் தேர்தல் கவருட்டத்தில் இழந்த தொகையை ஈடு செய்வதிலும், மூன்றுமாண்டு தம் உற்றார் உறவினர்கட்கு எற்றென்று இரங்கி ஏமங்கள்பல புரிவதிலும், நான்காமாண்டு தத்தமக்குக் கிடைத்து வருகின்ற மாலை மயக்குகளிலும், செல்வச் சீர்மைகளிலும் ஈடுபட்டு வாழ்வை நுகர்வதிலும், ஐந்தாமாண்டு அடுத்து வருந் தேர்தலில் முன் ஆட்சிக் காலத்துத் தாம் ஈட்டிய பொருளையும் செல்வர்தம் அருளையும் வைத்து மீண்டும் அரசியல் கவருட்டத்தில் இடைத்துணியை இறுக்கிக்கொண்டு இறங்கி விடுவதிலும் அதற்கென அரசியற் பெருந்தலைகள் உவப்பால் ஆடவேண்டி அவர்தம் விழிக் குறிப்பும் வினைக் குறிப்பும் உளக் குறிப்பும் உணர்ந்து தம் வாயையும் கையையும் வீசுவதிலும் கழிந்து போகின்றன என்னின், மக்கள் தம்மை மதித்து அவர் பால் நெருங்கி அவர் கருத்துரைகட்குச் செவி சாய்ப்பதும் அவர் தமக்கு வேண்டுவது செய்யவும் இவர்கட்கு இயல்வதெங்ஙன்? இம்முறைக்குப் புறம்பான அமைச்சர்களும் ஆங்காங்கு ஓரிருவர் இல்லாமற் போகார். எனினும் சூழ்ச்சியம் (Engine) இழுத்த வழி ஒரு நூலும் தவறாது இருப்புப் பாதையில் இணங்கி யுருளும் தொடர்வண்டிபோல்,தலைமை இழுத்தவழி இயங்கும் அமைச்சர்களும் அரசவை உறுப்பினர்களுமே யாண்டு முளர். மரப்பாவை இயக்கம் போல் இயங்கி வரும் கட்சியின் ஆணை வழி இயங்க வேண்டும் எனும் கட்டுப்பாடு உள்ளவரை, எல்லா நாட்டு அமைச்சவைகளும் இவ்வாறுதான் இயங்கும் அங்கிருப்பார் இத்தகைய செருக்குரைகளைத்தாம் அவ்வப்பொழுது தருக்குவர்.

கல்வித் தலைமையின் பொறுப்பில் உள்ள வன்மையினால் இந்தி வெறியர்களின் மடியில் தலைசாய்க்கும் அமைச்சர் திரு. சக்ளாவிற்குத் தமிழர் தம் உள்ளுணர்வைப் புரிந்துகொள்ள வாய்ப்பளிக்கின்றோம். குடியேறிகள் என்று ஒடுக்கப்படும் ஈழத் தமிழர்களின் அவல நிலை போன்று தமிழர்களுக்கு ஒரு நிலை வாய்த்துவிடப் போவது இல்லை. இங்குள்ள ஒரு சிலரின் அடிமைத் தன்மையே தம் வெற்றுவாய்களுக்குக் கிடைத்த அவலாகக் கருதிக்கொண்டு சொற்களை அதக்கி மென்று கொண்டிருக்கும் ஆளும் பொறுப்பில் உள்ளார், உண்மைத் தமிழர்தம் உயிரிலும் மூச்சிலும் கனன்று கொண்டிருக்கும் அழற்பொறி

(தொடர்ச்சி 76-ஆம் பக்கம்)

சமற்கிருதவாக்கம்–இலக்கணம்

ஞா. தேவநேயப் பாவாணர், எம்.ஏ.

இலக்கணம் இலக்கியம் என்னும் இரண்டனுள் முந்தியது இலக்கியமே.

"இலக்கிய மின்றி இலக்கண மின்றே
எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்."

என்பது பேரகத்தியத்தைச் சேர்ந்ததாகக் காட்டப்பெறும் ஒரு பழைய மேற்கோள் நூற்பா.

இலக்கியம் என்னும் சொல்லில், 'இலக்கு' முதனிலை; 'இயம்' ஈறு. இலக்கு = குறி, குறிக்கோள். ஒரு குறித்த இடத்தை இலக்கு என்பர் நெல்லை நாட்டார். வாழ்க்கையின் சிறந்த குறிக்கோளை எடுத்துக்காட்டும் நூலே இலக்கியம்.

"அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்"

நாட்டி, அரசியல் பிழையாமை, கற்புடையாளைப் போற்றுதல், தீவினை செய்யாமை ஆகிய முக்குறிக்கோளை எடுத்துக் காட்டுவதே சிலப்பதிகாரத்தின் நோக்கமாயிருத்தல் காண்க.

ஆகவே, இலக்கைக் காட்டுவது இலக்கியம். அதுவும், சிறந்த அறிஞரால் செய்யப் பெறுவதால், அதன் நடையும் சிறந்ததாய் இருத்தல் வேண்டும். ஒரு மொழியில் உயர்ந்தோர் கையாளும் நடையைப் பிறரும் பின்பற்றுமாறு எடுத்துக் காட்டுவதே இலக்கண நூலின் நோக்கம். ஆகவே இலக்கணமும் ஒன்றைக் குறியாக அல்லது குறிக்கோளாகக் கொண்டதே. இலக்கணம் என்னும் சொல்லில், 'இலக்கு' முதனிலை; 'அணம்' ஈறு.

> "உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலன்எனக்
> கொள்ளும் என்ப குறியறிந் தோரே."

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் (993), இலக்கணம் குறி என்றே பெயர் பெற்றிருத்தலை நோக்குக இலக்கணம் இலக்கியம் இரண்டும் மொழி வாயிலாகவே அறிவிக்கப் பெறினும், முன்னது பண்பு என்றும் பின்னது பண்பி என்றும் வேறுபாடறிதல் வேண்டும்.

இலக்கு, இலக்கியம், இலக்கணம் என்னும் தென் சொற்கள் வடமொழியில், முறையே, லக்ஷ், லக்ஷ்ய, லக்ஷண என நிற்கும். லக்ஷண என்னும் வடசொல், குறி, இயல், இயல் வரையறை என்னும் பொருள்களைப் பொதுப்படக் குறிக்குமேயன்றி, இலக்கணம் (grammar) என்னும் பொருளைக் குறிக்காது. அங்ஙனமே, லக்ஷ்ய என்னும் வடசொல்லும், குறிப்பொருள், இயல் விளக்கப் பொருள், எடுத்துக் காட்டு என்னும் பொருள்களைப் பொதுப்படக் குறிக்குமேயன்றி, இலக்கியம் (Literature) என்னும் பொருளைத் தராது. இலக்கணத்தை வியாகரணம் (வ்யாகரண) என்றும், இலக்கியத்தைச் சாகித்தியம் (ஸாஹித்ய) என்றும் சொல்வர் வட நூலார். வியாகரணம் என்னும் சொல் கூறுபடுப்பது என்னும் பொருளது சாகித்தியம் என்பது தொடர்பு என்னும் பொருளது.

தமிழில், இலக்கணத்திற்கு அணங்கம் என்னும் பெயரும், இலக்கியத்திற்கு அணங்கியம் என்னும் பெயரும் உண்டு ஆயின், இவை வழக்கில் இல்லை. தொன்று தொட்டு இலக்கணம் இலக்கியம் என்னும் சொற்களே இருவகை வழக்கிலும் இருந்து வருகின்றன. அணங்குதல் = ஒலித்தல் அணங்கு = ஒலி, எழுத்து, சொல். அணங்கம் = இலக்கணம் (சொல்லிலக்கணம், மொழியிலக்கணம்). அணங்கத்தையுடையது அணங்கியம்.

ஒப்பு நோக்க: Gr. gramma (letter)–E. grammar.
L. littera (letter)–E. literature.

இலக்கணம் இலக்கியம் என்னும் சொற்கள், முறையே, இயல், இயலது என்னும் பொருளில் சிறப்பாக மொழிபற்றியே எழுந்தன வேனும், சிறுபான்மை பிறபொருள் பற்றியும் ஆளப் பெறும்.

இலக்கியம் என்பது, ஒரு சிறந்த இலக்கணத்தை ஒரு பொருளின் வாயிலாய் எடுத்துக்காட்டுவது, அல்லது விளங்க வைப்பது. எடுத்துக்காட்டைக் குறிக்கும் Illustration என்னும் ஆங்கிலச்சொல், ஒளியைக்குறிக்கும் சொல்லினின்று தோன்றியதாகும். Illustrate = L. il + lustrare (illumine). இலக்குதல்

என்னும் வினைச்சொல், குறித்தல் என்னும் வினைச்சொற்போல் எழுதுதலைக் குறித்தலோடு, இலங்குதல் என்பதன் பிறவினை யாய் விளங்கச் செய்தல் என்றும் பொருள் தருகின்றது. எழுத்து ஒலியின்குறி.

இலக்குதல் = வரைதல். ''இரேகை யிலக்குக'' (சைவசமய நெறி, பொது. 274).

இலங்கு – இலக்கு (பி. வி.).

உகரவீற்றுச் சொற்கள் இகரவீற்றவாய்த் திரிதல் இயல்பு.

எ. டு:	பெயர்	வினை	உரி
	குச்சு – குச்சி	நீடு – நீடி.	கடு – கடி
	பஞ்சு – பஞ்சி	நீட்டு – நீட்டி	

இம்முறையில் இலக்கு என்பது இலக்கி என்றும் ஆகும்.

இலக்கித்தல் = வரைதல், எழுதுதல்.

''இவ்வுருவு நெஞ்சென்னுங் கிழியின்மேலிருந்திலக்கித்து''
(சீவகசிந்தாமணி, 180).

இலங்கு என்பது இலகு என்பதன் இடைமிகை அல்லது விரித்தல். இலகுதல் விளங்குதல், எல்–இல்–இலகு.

''எல்லே யிலக்கம்'' (தொல், 754).

தமிழிலக்கணம் இயல் இசை நாடகம் என முத்திறப்பட்டு, கி. மு. பத்தாயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய தலைக்கழகத் திற்கு முன்பேமுழு நிறைவடைந்துவிட்டது.இயற்றமிழிலக்கணம் எழுத்து சொல் பொருள் என முப்பாலது. அற்றை நூலெல்லாம் செய்யுளாதலால், பொருளில் யாப்பும் அடங்கிற்று. அணியை ஒரு தனியிலக்கணப் பிரிவாக முதனூலார் கொண்டிலர். நல் லிசைப் புலவர் செய்யுளில் அணி தானுக அமையுமென்பதும், அதற்கொரு வரம்பில்லை யென்பதும் அவர் கருத்து. பொருளணி கட்கெல்லாம் தாயாகிய உவமை, பொருளை விளக்கும் முறைமை பற்றியே பொருளிலக்கணப் பகுதியாக உவமவியலிற் கூறப் பட்டது.

தலைக்கழகம் இருந்த தென்மதுரை, ஆத்திரேலியாவும் ஆப் பிரிக்காவும் நாவலந் தேயமும் ஒன்றுயிணைந்திருந்த குமரி மலை நாட்டில் அமைந்ததாதலால், ஆரியம் என்னும் பேரே உலகில் தோன்றுமுன், வரலாற்றிற் கெட்டாத முதுபழந் தொன்மைப் பட்டது. அன்று அகத்தியமுமில்லை; அகத்தியருமில்லை. அக் கால நூலெல்லாம் தமிழரே இயற்றிய தனித்தமிழ் நூலே. இறை யனரகப் பொருளுரையிலுள்ள முச்சங்க வரலாறு பிற்காலத்தில்

(கி. பி. 6-ஆம் 7-ஆம் நூற்றாண்டில்) எழுதப்பட்டதாதலால், தலைக்கழக நிலைமையை உண்மையாய் எடுத்துக் கூறவில்லை.

வேத ஆரியர் நாவலந்தீவிற்கு வந்த காலம் கி. மு. 2000-1500. அவர்க்கு அன்று எழுத்துமில்லை, இலக்கியமுமில்லை. அகத்தியர், நாரதர் போன்றவர் தென்னாட்டிற்குவந்து தமிழரொடு தொடர்புகொண்ட பின்னரே, தமிழைப் பின்பற்றி வடமொழியிலக்கணமும் எழுத்தும் அமைத்துக் கொண்டனர். வேதத்தில் தமிழ்ச்சொற்களும் தமிழெழுத்தொலிகளும் உள்ளமை முன்னரே கூறப்பட்டது. தமிழிலக்கணம் ஓர் உயிருள்ள முதுபெருந் தாய்மொழிக்கு வகுக்கப்பட்டதென்றும், வடமொழியிலக்கணம் ஒரு வழக்கற்ற நூன்மொழிக்கே வகுக்கப்பட்டதென்றும். வேறுபாடறிதல் வேண்டும்.

முதன் முதல் வேதமொழிக்கு வகுக்கப்பட்ட எழுத்தொலியிலக்கணம் சிட்சை (சிக்ஷை) எனபதாம். அது நால்வேதங்கட்கும் கிளைகள் போன்ற பாட வேறுபாட்டுத் தொகுதிகளான சாகைகளுள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி ஏற்பட்டிருந்ததனால் பிராதிசாக்கியம் (ப்ராதிசாக்ய) எனப்பட்டது. பொதுவெழுத்துகளைப் பொறுத்தமட்டில் வடவெழுத்துகளின் ஒலி, முறை, பிறப்பு, உருவம், மாத்திரை (அளபு) ஆகியவை தமிழிலக்கணத்தைத் தழுவியவே. எழுத்துகளை ஒலிப்பதற்குத் துணையாகக் கொள்ளப்பெறும் சாரியைகள், தமிழ் முதனூற்படி, குறிலுக்குக் கரமும் உயிர் நெடிலுக்குக் காரமும் ஐ ஔவிற்குக் கானும் ஆய்தத்திற்கு ஏனமும் ஆகும். ஆயின், வட நூலார் குறிலுக்குக் காரமும் கொண்டனர். அதைப் பிற்காலத் தமிழிலக்கணியர் பின்பற்றியதோடு குறிற்குக் கானும் வகுத்துவிட்டனர்.

இடையினம் வலிக்கும் மெலிக்கும் இடை நிகர்த்தா யொலிப்பதுபற்றித் தமிழில் அப்பெயர் பெற்றது. வட நூலார் அதை அந்தஸ்த (antastha-இடையில் நிற்பது) என மொழிபெயர்த்து, உயிருக்கும் மெய்க்கும் இடைப்பட்டு அரையுயிராய் (semi-vowels) இருப்பது என்று பொருட்கரணியங் காட்டுவர்.

சிட்சைக்குப்பின் எழுந்தது சந்தசு(சந்தஸ்) என்னும்யாப்பு நூல். அது வேத மந்திரங்களின் ஓசைவேறுபாட்டையும் அமைப்பையும் எடுத்துக்கூறுவது. சந்தசின் பின் எழுந்தது, எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் கூறும் வியாகரணம். இடைக்கழகத்திறுதியில் முதன்முதலாய்த் தென்னாட்டிற்குவந்து தமிழ் கற்ற வேதகாலப் பிராமணர் அல்லது ஆரியர், தமிழைப் பின்பற்றி ஆரியமொழிக்கு அமைத்துக்கொண்ட இலக்கணநூல்களுள் ஒன்று ஐந்திரம். அஃது இந்திரன் என்பவனாற் செய்யப்பட்டது. அது பாணினீயத்திற்கு மிகமுந்தியது. அது தோன்றியதும்

மறைந்ததும் தமிழ்நாட்டிலேயே. அதனால் அது வேறெங்கும் காணப்படவில்லை. பாணினியின் இலக்கணம் (அஷ்டாத்யாயீ) வழக்கிற்கு வந்தபின், ஐந்திரம் எங்கும் காணப் பெறுமையா லேயே,

"புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்
விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவிர்"
(சிலப். 11: 98, 99)

என்று கி. பி. 3–ஆம் நூற்றுண்டுத் தொடக்கத்தினனான மாங் காட்டு மறையோன், ஐந்திரத்தின் தொன்மையும் சிறப்பும் தோன்றக் கூறியதாக இளங்கோவடிகள் பாடியுள்ளார் ஒரு பொய்கைக் குளிப்பை ஐந்திர வியாகரண அறிவிற்கேதுவாய்ச் சொல்லியிருப்பதால், அப்பொய்கையில் அந்நூற்படிகளெல்லாம் பாணினீயத்தின் சிறப்பை மிகுத்தற்கு வேண்டுமென்றே அமிழ்த் தப்பட்டனவோவென்று ஐயுற நேர்கின்றது.

தொல்காப்பியர் காலத்திற் பாணினீயம் தோன்றவில்லை. அவர் கற்ற வடமொழி யிலக்கணம் ஐந்திரமே. அதனால்,

"மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றி"

எனப் பாடினர் பனம்பாரனர்.

தொல்காப்பியர் காலம் கி. மு. 7–ஆம் அல்லது 6–ஆம் நூற்றுண்டு. பாணினி காலம் கி. மு. 5–ஆம் நூற்றுண்டு. பாணி னீயத்திற்குப் பொழிப்புரை வரைந்த காத்தியாயனர் காலம் கி. மு. 4–ஆம் நூற்றுண்டு. அந்நூற்கு அகலவுரை வரைந்த பதஞ்சலியார் காலம் கி. மு. 3–ஆம் நூற்றுண்டு.

பாணினியும் காத்தியாயனரும் வடநாட்டினராகச் சொல்லப் பெறினும், பதஞ்சலியார் தமிழ் நாட்டினர்; அல்லது தமிழ் நாட்டில் நீண்ட காலம் வாழ்ந்தவர். அவர் வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவரொடு தில்லையில் வதிந்து, திருச்சிற் றம்பலத்திற் சிவபிரான் திருக்கூத்தைக் கண்டு களித்தவரென்று கோயிற் புராணங் கூறுகின்றது. கி. மு. 3-ஆம் நூற்றுண்டில் தில்லையில் வதிந்த ஒரு வடநூற் புலவர் மாணிக்கவாசகர்போல் ஒரு சிறந்த தமிழ்ப் புலவராயுமிருந்திருத்தல் வேண்டும். சிறந்த வேத நூற் புலவரும் சமற்கிருதப் பண்டிதரும் இன்றும் தென் னுட்டிலேயே உள்ளனர். கிறித்துவிற்குப் பிற்பட்ட தமிழ் வேந்தர் மூவரும், தம் அறியாமையால் தமிழைப் புறக்கணித்து வடமொழியையே பெரிதும் வளர்த்து வந்திருக்கின்றனர்.

பாணினீயம் நேரடியாகவோ வடநூல் வழியாகவோ தமிழிலக்கணத்தைத் தழுவிய தென்பது வெள்ளிடைமலையா

யிருப்பினும், அதன் உரையாசிரியர் தமிழ்ப் பழங்குடிப் பொது மக்களின் பேதைமையைப் பெரிதும் பயன்படுத்தி, உயிரையும் மெய்யையும் கூறும் அந்நூற் பதினன்கு நூற்பாக்களும் சிவ பெருமான் உடுக்கையிலிருந்து தோன்றினவென்றும், அதனால் மாகேசுவர சூத்திரமென்று பெயர் பெறுமென்றும், துணிந்து கூறி விட்டனர். பாணினியாரே சாக்கலியர், பாரத்துவாசர் முதலிய பல முனனூலாசிரியரைத் தம் நூலிற் குறித்திருக்கும்போது, பாணினீயம் முழு முதனூல் எனல் எங்ஙன் பொருந்தும்?

சில வடமொழி யிலக்கணக் குறியீடுகள் தமிழிலக்கணக் குறியீடுகளின் மொழிபெயர்ப்பாயுள்ளன.

எ. டு:	தமிழ்	வடமொழி
	பெயர்	நாமம்
	வினை	கிரியை (க்ரியா)
	வேற்றுமை	விபக்தி

சில வடநூற் குறியீடுகள் தமிழ்ச் சொற்களை ஒத்துள்ளன.

எ. டு:	தமிழ்	வடமொழி
	உத்தி	யுக்தி
	உவமை	உபமா

வடமொழியிற் பொருளிலக்கணமில்லை. வடமொழி யிலக்கணம் கிறித்துவிற்கு 1500 ஆண்டுகட்கு முன்தோன்றி 500 ஆண்டுகட்குள் வழக்கற்றுப்போன ஒரு நூன் மொழியை ஆராய்தற்கு எழுந்தது. தமிழ் இலக்கணமோ. கி. மு. இருபதினாயிரம் ஆண்டுகட்கு முன்பே முழு வளர்ச்சியடைந்த மொழியில், பத்தாயிரம் ஆண்டாகத் தோன்றி வந்த பல துறைப்பட்ட பன்னூற்றுக் கணக்கான நூற்பொருள்களை, அகம் புறமென்று இரு பாற்படுத்தி ஆராய்தற் பொருட்டெழுந்தது. தமிழின் தொன்மையையும் தன்மையையும் உண்மையாய் உணர்ந்தார்க்கு இஃது ஒரு சிறிதும் உயர்வு நவிற்சி யன்றென்பது தெற்றெனப் புலனும்.

கால்டுவெல் கண்காணியார், தமிழின் குமரி நாட்டுத் தோற்றத்தையும் தொல்காப்பியத்தையும் கழக நூலையும் அறியாதும், தமிழரும் தமிழும் இன்றுள்ள நிலையை எண்ணிக் கொண்டும், தமிழ் நாகரிகம் கொற்கையில் தோன்றியதென்றும், உயரிய கலைகளெல்லாம் ஆரியருடையவை யென்றும், தமிழ் நெடுங்கணக்கும் வேற்றுமையமைப்பும் சமற்கிருதத்தைப் பின்பற்றியவையென்றும், தவறாகக் கூறிவிட்டார்.

தமிழில், எட்டு வேற்றுமையும் இயற்கையாகவும் ஏரண முறைப்பட்டும் தனித்தனி வேறுபட்ட பொருளுடையனவாகவும்

இருக்கின்றன அஃதோடு, மூவேறு வகையில் பெயர் கொண்டும் உள்ளன. எண் வகையில், முதல் வேற்றுமை, 2-ஆம் வேற்றுமை, 3-ஆம் வேற்றுமை, 4-ஆம் வேற்றுமை, 5-ஆம் வேற்றுமை, 6-ஆம் வேற்றுமை, 7-ஆம் வேற்றுமை, 8-ஆம் வேற்றுமை என்றும்; பொருள் வகையில், எழுவாய் வேற்றுமை, செய்பொருள் வேற்றுமை, கருவி வேற்றுமை, கொடை வேற்றுமை. நீக்க வேற்றுமை, கிழமை வேற்றுமை, இட வேற்றுமை, விளி வேற்றுமை என்றும்; உருபு வகையில், பெயர் வேற்றுமை, ஐ வேற்றுமை, ஒடு வேற்றுமை, குவ்வேற்றுமை. இன் வேற்றுமை, அது வேற்றுமை; கண் வேற்றுமை, விளிப் பெயர் வேற்றுமை என்றும் பெயர் பெற்றிருத்தல் காண்க.

வடமொழியிலோ, ப்ரதமா விபக்தி, த்விதீயா விபக்தி, த்ருதீயா விபக்தி. சதுர்த்தீ விபக்தி, பஞ்சமீ விபக்தி, ஷஷ்டீ விபக்தி, ஸப்தமீ விபக்தி, ஸம்போதன ப்ரதமா விபக்தி என்று எண்பற்றியே எண் வேற்றுமையும் பெயர் பெற்றுள்ளன.

3-ஆம் வேற்றுமைப் பொருள்களான கருவி, வினை முதல் (கருத்தா), உடனிகழ்ச்சி ஆகிய மூன்றும் முரண்பட்டவை என்று கால்டுவெல் கண்காணியார் கருதுகின்றார். அம் மூன்றையும் ஆய்ந்து நோக்குவார்க்கு, அவற்றின் ஒற்றுமை தோன்றுமற் போகாது. வினை முதல் என்பது உயர்திணைக் கருவியாதலால், கருவியுள் அடங்கும் கருவியுள் உடனிகழ்ச்சியும் உடனிகழ்ச்சியிற் கருவியும் நுண்ணிதாய்க் கலந்து கிடப்பதை, நுழைபுலங் கொண்டும் வழக்கு நோக்கியும் உணர்ந்தே, இவ்விரண்டையும் ஒரு வேற்றுமைப் படுத்தினர் தமிழ் முதனூலாசிரியர். ஒரு கருவி கொண்டு ஒரு வினை செய்யும்போது அக்கருவி செய்வானுடனிருப்பதையும், ஒருவன் மற்றொருவனுடன் கூடி ஒரு வினை செய்யும்போது அம் மற்றொருவன் துணையாய் நின்று கருவிப்படுவதையும், கூர்ந்து நோக்குக. இனி, வழக்கு வருமாறு:-

ஆன (ஆல்) உருபு:

மண்ணான் இயன்ற குடம்-கருவி
ஊரான் ஒரு கோவில்-உடனிகழ்ச்சி

ஒடு உருபு:

ஊசியொடு குயின்ற தூசு-கருவி
நாயொடு நம்பி வந்தான்-உடனிகழ்ச்சி

ஆங்கிலத்திலும் இவ்வழக்கு ஒத்திருப்பது கவனிக்கத் தக்கது.

With (ஒடு): Write with a pen-கருவி
Went with him-உடனிகழ்ச்சி

By (ஆல்) Live by bread–கருவி
Stand by him–உடனிகழ்ச்சி

இங்ஙனமே, 5-ஆம் வேற்றுமைக்குரிய நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது என்னும் நான்கும் நீக்கப் பொருள் வேறுபாடுகளே. இங்கு ஒப்பு என்றது உறழ் பொருவை (Comparative Degree). இவற்றை விரிப்பிற்பெருகும். என் தமிழ் வரலாற்றிற் கண்டு கொள்க.

3ஆம் வேற்றுமைக்குக் கருவிப் பொருளுடன் உடனிகழ்ச்சிப் பொருள் வடமொழியிலுமுள்ளது. இஃதை, "இனிச் சகார்த் தமாய் வந்த திருதியைச் சகார்த்தத் திருதியை என்றும், சகார்த்தமென்றும், ... கூறுவர்" என்னும் பிரயோக விவேக உரையாலும் (பக்கம், 11), "புத்ரை: ஸஹ க்ராமம் கச்சதி ஹரி." என்னும் சொற்றொடர் பற்றி, "ஸஹ governs the instrumental" என்று இராமக்கிருட்டிண கோபால பந்தர்க்கார் தம் சமற்கிருத முதற் புத்தகத்தில் (பக். 24) எழுதியிருக்கும் அடிக் குறிப்பாலும், அறிக.

இனி, தமிழில் எத்தனை உருபோ அத்தனை வேற்றுமை என்று கால்டுவெல் கண்காணியார் கூறியிருப்பது, கண் கால் கடை யிடை முதலிய இடப்பொருளுருபுகள் பற்றியோ பல்வேறு வேற்றுமை பற்றிவரும் சொல்லுருபுகள் பற்றியோ, அறிகிலம். எதுபற்றியதாயினும் அவர் கூற்று பொருளற்றதென்பது தெளிவாம். பொருள்களினிடைப்பட்ட உறவு வேறுபாடு எட்டே வகைப்படுமென்பது, இலக்கண முறையாலன்றி ஏரண முறையாலும் தெளிந்ததே எட்டிற்குமேற்பட்டவையெல்லாம் கூட்டும் கலவையுமாயிருக்குமே யன்றித் தனிப்பட்டவையாயிரா.

இனி, ஒரு சார் வட நூல்வழித் தமிழாசிரியர், "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்னும் பனம்பாரனார் கூற்றையும்,

"ஏழியன் முறைய ததெிர்முக வேற்றுமை
வேறென விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனு முளனொரு வகையால்
இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றனன்"

என்னும் (பேரகத்திய நூற்பாவாகக் காட்டப்பெறும்) ஒரு பழைய உரையாசிரியர் மேற்கோளையும்,

"வேற்றுமை தாமே ஏழெனமொழிப." (546)
"விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே" (547)

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களையும், ஒருங்கு நோக்கி, தொல்காப்பியத்திற்கு முதல் நூல் ஐந்திரமெனக் கூறித் தமிழ்

(தொடர்ச்சி 75-ஆம் பக்கம்)



எண்சுவை எண்பது.

7. உவகை.

கண்டாள்; கனிந்தாள்; கழன்றாள் நாண்; காதற்றேன்
உண்டாள்; உவந்தாள்; ஒருவனுள்ளந் தன்னுள்ளமாய்க்
கொண்டாள்; மணந்தாள், குழல்! (1)

---

7. உவகை.

வேற்றூர் சென்று மணந்த மகள் பாலும், மகள் மணவாளன் பாலும் கொண்ட சினம் தணிதலும், தாய்மை காரணமாக இரக்கம் பூத்து, அன்பாகக் காய்த்து, அருளாகக் கனிந்து, உவகையாக இனித்த தென்க.

முற்கூறிய சினம் மாறிய பின்னை, அச்சினத்தால் தான் முனிந்து கூறிய வற்றிற்குத் தணிவு கூறித் தன் அன்பிற்குக் காரணம் காட்ட வேண்டியிருப்பதால், தன் மகள் அவ்வாறு போய் மணந்தது குற்றமில்லை என்கின்றாள் என்க.

இவ்வியலின் கண் வந்துற்ற பாடல்கள் முன்னியலின் பாடல்களோடு பொருத்தி மகிழ்தற் குரியன.

1. 'மகள் தான் ஒருவனைக் கண்டதும் இயல்பே; அவன் அழகிலும், அன்பிலும் உளங்கனிந்ததும் இயல்பே;

துரை-மாணிக்கம்

காந்தளிளங் கையாளோர் கைபற்றிக் கோதுகுழல்
போந்தலையுஞ் செங்கழுத்திற் பூண்டாளோர் தாலியினி
ஏந்திழையாட் கேதிங் கிழிவு? (2)

அடிமகளே! வாயிங் ககிற்புகைநன் கூட்டு!
மடிமேற் குழல்கிடத்தி! மற்றீர் பேன் மாய்ப்பல்!
முடிமேற் செருகிம் மலர். (3)

அதனுல் பிறரிடம் காட்டவேண்டிய நாணமெனும் நற்பண்பைக் கைவிட்டதும் இயல்பே; அதன்விளைவால் அவனிடம் இளமை நலம் உண்டதும், உளம் உவந்ததும், பின் இருவரும் கூடி ஒருவர் உளம் பிறிதொருவர் உளமாய்க் கொண்டு, கலந்து, மணந்து கொண்ட செயல்களும் இயல்பே. இவற்றில் என்ன குற்றம்? என்று தன் சினத்திற்குத் தணிவு கூறினுள். இக்கூற்று, தான் கொண்ட அன்பினுலன்றி வேறு வகையாகக் கூறுதல் இயலாதாகலின் இஃது அன்பொடு பொருந்தி உவகையோடுள்ளிட்டது. 'தீக்கை மலர்க்கையால் தேர்ந்தாயோ?' என்றும், 'மால்விழுந்தாய்' என்றும், பலவாருக முனிந்து கூறிய கூற்றுக்கெல்லாம் இது தணிவாதல் காண்க.

2. கோதுகுழல் போந்தலையும் செங்கழுத்து கோதாநின்ற குழல் போய் அலைகின்ற செங்கழுத்து.

தன் கையால் பிறன் கை பற்றிக் கொள்ளலும், கழுத்தில் தாலி ஏற்றுக் கொள்ளலுமே மண நிகழ்ச்சிகள் ஆகலின், இருவரும் அவ்வாறு செய்ததில் இழிவு இல்லை' என்கின்ருள். **சீர் கொட்டி ஏற்ருயோ சிற்ருலி'** என்று முனிந்தவள் அதற்குத் தணிவு கூறி முன்னுக்குப் பின் முரண்படப் பேசுதல் அன்பு பற்றியாம் என்க. பிழை பொறுத்தலினும் அதனை மறத்தலே சிறப்பென அறிஞர் கொண்டாராகையால், மகள் செய்த பிழையைப் பொறுத்துக் கொண்டவள், அதை மறுப்பான் வேண்டி, அது குற்றமில்லை என்று தணிகின்ருள். இவ்வாறு கொள்ளாது, அது குற்றமெனக் கருதியிருந்தால், அதை மறத்தற்கியலா தென்னும் மனவியல்பற்றி இது கூறப்பட்டதாம்

3. இனி முன் நடந்த பிழை முழுதும் மறந்த தாய், தன் மகள்பாற் காட்டும் அன்புச் செயல்களைக் கீழ்வரும் பாடல்கள் உணர்த்தா நிற்கின்றன. அன்பின் கனிவு உவகை எனக் கொள்க.

முன்னைப் போ லில்லை நீ! முல்லைச் சிறுபல்லி!
அன்னைசொற் கேட்டி! அசையுங் கொடியேய்க்கும்
பொன்னிடைதாங் காது புனல். (4)

தாயணி யிஃதெந் தனிமகளே! தாலியொடு
நீயணி; நுந்தைதன் நற்றாய் எனக்கீந்த
சேயணி யிஃதுன் செவிக்கு. (5)

மகளை விளித்து, அகிற்புகையைக் குழலுக்கு ஊட்டு என்றலும், மடிமேல் குழலைக் கிடத்து, யான் ஈர், பேன் களைவல் என்பதும். அவ்வாறு புனைந்த முடிமேல் இம் மலரைச் சூட்டிக் கொள் என்றலும், தாய் தன் மகளை அழகு செயப் புகுந்த அன்பினைக் காட்டிற்றும்.

4. இது குடமெடுத்துப் புனல் கொள்ளப் புறப்படும் மகட்குத் தாய் கூறியது முன்னைப் போலில்லை —என்றது நீ ஈண்டு மணமான நங்கை என்றலும், அதனால் நலிவு ஏற்காதே என்றலும் ஆம். அன்னை சொற் கேட்டி —என்றது நீ அன்னையின் சொல்லை முன்கேட்டிலை; ஈண்டாவது கேட்பா யாக என்று நினைவு காட்டுவான் வேண்டி. இஃது அன்பால் இட்ட வேண்டுகோளாம்.

5 இஃது அவட்குத் தான் அணியாது வைத்திருந்த அணிமணிகள் பூணக் கொடுத்ததாம்.

தாயணி—என்தாய் எனக்குக் கொடுத்த அணி.

தாலியொடு நீயணி —என்றது, நீயாகவே ஏற்றுக் கொண்ட தாலியொடு, இதனையும் அணி; இஃது ஒன்றுவது நான் அணியச் சொல்லி, நீ அணிந்து கொண்டதாக விருக் [கட்டும்
என்று குறிப்புக் காட்டியபடி.

நுந்தை தன் நற்றாய் — தாய் தன் கணவன் தாய்.

தாய்க்கு மாமியும், மகட்குப் பாட்டியும் ஆம். தன் தாய் தனக்கு அணிந்ததும், தன் மாமி தனக்கு அணிந்ததும் தன் மகளை அணிந்து கொள் என்றாள்.

'முதலென்றேன் கீழ்க் கடையை' என்று முன் சினந் ததனால், தனக்குத் தன் முன்னோர் தந்த அணிமணிகளைத் தந்து தன் மகளுக்கு இழிவு துடைத்தாள் என்றபடி.

சேயணி—சிவந்த அணி.

மடிமேற் கிடத்தி மகனொருவன்! நுந்தை
மடிமேற் கிடத்தி மகளொருத்தி! மற்றைக்
குடிமேன் நடத்தி குடி. (6)

பாடியான் கேட்பல்! படிவக்கால் தூக்கி நீ
ஆடியான் பார்ப்பல்! அழுகண்ணு மூக்குமாய்த்
தேடியான் பெற்ற திரு. (7)

உண்கண் இவண்வா! உனக்கிது! நீயருந்து!
கொண்கன் தனக்கிது; கொண்டுகொடு! பேரின்பம்
மண்கண் எனக்கில்லை மற்று! (8)

---

6. இது மகள் குடி நீள வேண்டுமென்றது; மணத்தின்போது, தான் வாழ்த்த வாய்ப்பிழந்தாள் ஆகையான் ஈண்டு இதை வாழ்த்தாகக் கூறினுள் என்க.

மடிமேல் கிடத்தி மகன் ஒருவன்-என்றது தனக்குப் பெயரன் வேண்டும் என்பதையும், **நுந்தை மடிமேல் கிடத்தி மகள் ஒருத்தி** என்றது தன் கணவர்க்குப் பெயர்த்தி வேண்டும் என்பதையும் காட்டிற்று. இனி, தனக்கு மகள் ஒருத்தியே என்றும், மகன் இல்லையாதலால், தன் மகளுக் காவது முதலில் மகன் பிறக்க வேண்டும் என்றும் கருதி, முதலில் '**மடிமேல் கிடத்தி** மகன்' என்ருள் என்க மற இயலில் **மணி வயிறு தாங்கும்** மகன என்றதும் நோக்குக. ஆக ஒரு மகனையும், ஒரு மகளையும் பெற்றெடுத்த பின்னை, அவள் குடிமேல் நடத்தி குடி' என்றது, 'என் பெருமை பொருந்திய குடியை மேற்கொண்டு நீ நடத்து' என்றபடி.

இனி, நீ இல்லறம் பேணி நடத்துங்கால், குழந்தைகளை நாங்கள் காத்துக் கொள்வோம்; ஆகையால் உனக்கு அக் கவலை வேண்டா என்றவாறும் கொள்க.

7. தன் மகள் பாடியும், ஆடியும் மகிழ்ந்தும், மகிழ்வித்தும் இருக்க வேண்டியதைக் கூறியதாகு மிது. **யான் கேட்பல், யான் பார்ப்பல்** என்றன அன்பு குறித்தன. **அழுகண்ணு மூக்குமாய்த் தேடி** – என்றது தான் அவள் பிரிவின் காலுற்ற துயரை விளக்கிற்று.

தேடி யான் பெற்ற திரு–என்றது, தன் மகளன்றித் தனக்கு வேறு ஒரு செல்வமும் இல்லையாகலான், அவளையே தனக்குற்ற செல்வம் என்ருள் என்க.

8. **உண்கண்**-மை உண்ட கண். இங்கு ஆகு பெயராய் மகளைக் குறித்தது.

அற்றைச் சிறுபேதை! அன்னுன்தோள் பற்றிப்போய்
ஒற்றைத் தனிவழியில் ஊழ்த்தநாண் மீண்டும்
இற்றையெவன் பெற்ருள், இவள்? (9)

என்பால் ஒருசொல் இவளுரைப்பாள்; உள்ளத்தே
தன்பால் அவர்கொண்ட தன்னேரில் அன்பெண்ணி
முன்போல் அவண்நிற்பாள் முன். (10)

தன் மகளுக்கும், அவள் மணவாளனுக்கும் உண்ணக் கொடுத்து மகிழ்கின்ற அன்பை விளக்குவது இது.

கொண்டு கொடு-என்றதால் தன் மகள் முன்னே உண்டு, பின்னே அவள் மணவாளனுக்குக் கொண்டுபோய்க் கொடு வென்றபடி.

9. இவ்வாறு கூறிய தாயிடம் நாணிய தன் மகளின் முன்னைத் திறம் காட்டித் தன்னுள் பேசி உவந்தது இது.

அற்றைச் சிறு பேதை-அன்று புறம்போன சிறு பேதைத் தன்மையள். பேதையினும் சிறு பேதை என்றது அறியாப் பேதை என்றதால்.

அவனுடைய தோளைப் பற்றிப் போயின ஞான்றை, ஒற்றைத் தனி வழியிலேயே வீழ்த்திவிட்ட நாணத்தை மீண்டும் எவ்வாறு பெற்ருள் இவள்?-என்பதாம்.

ஊழ்த்த நாண் மீண்டும்-என்றதால் முன்னிருந்து, வீழ்த்தி மீண்டும் பெற்ருள் என்றபடி. இது தன் மகளும், தானும் முன்போல் இருந்த நிலையுற்றனர் என்பது குறிக்கக் கூறியதென்க. தன் மகளை, வெட்டிப் பேசியவள் ஈண்டு ஒட்டிப் பேசுவாளாயினுள் ஆக, இஃது அன்பைக்கூறியது.

10. தன் மகள் தனக்கு ஒரு சொல் சொல்லி, மறு நொடி அவள் கணவன் முன் நிற்பாள் என்று, அவனுக்கும் அவளுக்கும் உள்ள அன்பினைத் தன் அன்புள்ளத்தால் வியந்து கூறியது. என்பால் உரைப்பள்...அவன்கொண்ட அன்பு எண்ணி அவன் முன் நிற்பள்-என்றது, தான் காட்டும் அன்பினுல் தன் பாலும், அதேபோல் அவன் காட்டும் அன்பினுல் அவன்பாலும் மாறி மாறிப் பேசி மகிழ்வடைகின்ருள் என்று கருதியபடி இது தன் மருகனையும் நினைந்து அவன் அன்பை யும், வியந்தவாறு என்க. இஃது அடுத்த நகை இயலுக்கு பாக அமைந்தது.

*

திருக்குறள் நல்லுரை ஆய்வு

வடநூற் கொள்கை மறுப்பு.

* * * * * * * * * * * *

(பேராசிரியர், கு. சுந்தரமூர்த்தி, செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.)

தமிழர்களுக்கு எய்ப்பினில் வைப்பாய் இருப்பது திருக்குறளாகும். தமிழன்னையின் நற்றவமே உருவெடுத்தாற்போல் விளங்குகின்றது அந்நூல். அதனோடு ஒத்த நூல் உலக இலக்கியங்கள் அனைத்திலுமே இதுவரை எழுந்ததில்லை வட நூலை முதன் நூலாகக் கொண்டோ, அன்றி அந்நூல் கருத்துகளைத் தழுவியோ திருக்குறள் யாக்கப் படவில்லை. எனினும் உரையாசிரியர்களில் தலைசிறந்த பரிமேலழகர், மநு முதலிய வடநூற் கருத்துகளைத் தழுவியே திருக்குறள் செய்யப்பெற்றது என்று வலிந்து கருதுவர். இவ்வெண்ணத்தால் வட நூற்கருத்தொடு திருக்குறள் முற்றிலும் மாறுபட்டுச் செல்லுமிடத்தும் அம்மாறுபாட்டை ஏற்றுக்கொள்ளாது அதற்கு அமைதி காணவும் முயன்றனர். அங்ஙனம் அமைதி காண இயலாத பொழுது இரு நூல்களுக்குமுள்ள மாறுபாட்டை ஒரோவழி ஒத்துக்கொள்ளவும் செய்தனர். ''இன்றியமையாச் சிறப்பினவாயினும்'' (961) என்னும் குறட்பாவிற்கு அவர் எழுதியவுரை காண்க

வட நூற்கருத்தோடு முற்றிலும் மாறுபட்டுச் செல்லும் ஓரிடத்தில், அவர் கூறும் அமைதியையும், அது பொருந்து மாற்றையும் ஈண்டுக் காண்போம்:

> **''நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்**
> **கொன்றாகும் ஆக்கம் கடை''**

இக்குறள் கொல்லாமை என்னும் அதிகாரத்தில் உள்ளது. ''கொல்லுதலினால் நன்மை தரத்தக்க பெருஞ்செல்வம் வரும் என்று ஒருவன் கூறினும் சான்றோர்களுக்கு அக் கொல்லுதலால் வரும் செல்வம் மிகவும்இழிந்ததே யாகும்'' என்பது இக்குறட்பாவின் கருத்தாகும். கொல்லுதலால் எத்தகைய பெருஞ் செல்வத்தையும் எய்திவிட முடியாது. ஒரோவழி அது கூடுமென்று கூறுவான் உளனாயினும் அது வேண்டற்க என்பதே கருத்தாகும். 'எனினும்' என்னும் சொல்லால் இவ்வுண்மை விளங்கும் எனினும் என்பது 'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என்புழிப் போல ஈண்டும் அமைந்துள்ளது. சான்றோர் எனப் பொதுப் படக் கூறினும் அதிகாரம் துறவு ஆதலால் அச்சொல்

துறவிகளைக் குறிக்கும். எனினும் இவ்வறம் துறவறத்தார்க்கே யன்றி, இல்லறத்தார்க்கும் ஏற்புடையதாகும்.

இதற்குப் பொருள் இங்ஙனமாகவும், பரிமேலழகர் மட்டும் வேறுபட உரைகாண்கின்றனர். இக்குறட்கு இயைந்த பொருளை அப்படியே கொண்டுவிட்டால் வட நூற்கருத்தொடு மாறுபடு தலைக் கண்ட பரிமேலழகர் சொற்படு பொருளேயன்றிப் பிறவும் தமக்கியைந்த பொருளை வரவழைத்துப் பொருள் காணுகின்றார். இந்திரன் முதலிய இறையவர் நிலைகளைப் பெற வேண்டுமெனில் கொலை முதலியன செய்யும் வேள்வியையும் செய்யலாம் என்ப தும், தற்காக்க அக்கொலை செய்வது பொருந்தும் என்பதும் வட நூற்கருத்தாகும். ஆனால் திருவள்ளுவரோ இக்குறளில் கொலை முதலியவற்றால் எத்துணைப் பெருஞ் செல்வம் வரினும் அஃது ஏற்கத்தக்கது அன்று என்றும்; அஃது இழிந்தது என்றும் வன்மையாகக் கூறியுள்ளார். இம்மாறுபாட்டை ஏற்றுக்கொள்ள மனமில்லாத பரிமேலழகர் அமைதிகூற முற்படுகின்றார்.

வானுறையும் தெய்வத்துள் ஒருவராக ஆதற் பொருட்டு வேள்விக்கண் கொலையையும் மேற்கொள்ளலாம் என்று வட நூலிற் கூறியது இல்லறத்தார்க்கே ஆம்; ஆனால் திருவள்ளுவர் 'சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை' என்றது துறவறத் தார்க்கே ஆம். காரணம் துறவறத்தார் வீட்டின்பத்தைப் பெறு தற்கே உரியவர். ஆனால் இல்லறத்தாரோ இந்திரன் முதலிய இறையவர் நிலைகளைப் பெறுதலாகிய துறக்க இன்பத்திற்கே உரி யவர். துறக்க இன்பம் மிகச்சிறியது; பின்னும் பிறத்தற்குக் கார ணமாயது. வீட்டின்பமோ மிகப்பெரியது; ஈறில்லாதது; மீண்டும் பிறத்தற்குக் காரணமில்லாதது இத்தகைய ஈறில் இன்பத்தைப் பெறுகின்ற துறவியர், மிகச்சிறிய இன்பத்தைப் பெறல்வேண்டா மையின் வேள்விக்கண் கொலைசெய்தலும் அவர்க்கு வேண்டாத தாயிற்று எனவே வேள்விக்கண் கொலைசெய்யலாம் என்னும் வடநூல் முறையும் வேள்விக் கண்ணும் கொலை செய்தலாகாது என்னும் இத் திருக்குறள் விலக்கும் தம்முள் மாறுபடவில்லை என விளக்கினர் பரிமேலழகர்

இவ்வமைதியை அவர்தம் நடையாலேயே அறிதல் நன்று தலின் அதனை அப்படியே தருகின்றோம்.

(பொழிப்புரை)

''தேவர் பொருட்டு வேள்விக்கட் கொன்றால் இன்ப மிகும் செல்வம் பெரிதாமென்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும்; துறவான் அமைந்தார்க்கு ஓருயிரைக் கொல்ல வருஞ் செல்வங் கடை''

(விளக்கவுரை)

"இன்ப மிகும் செல்வமாவது தாமும் தேவராய்த் துறக் கத்துச் சென்றெய்துஞ் செல்வம்; அது சிறிதாகலானும், பின்னும் பிறத்தற்குக் காரணமாகலானும், வீடாகிய ஈறில் இன்ப மெய்து வார்க்குக் 'கடை' யெனப்பட்டது. துறக்கமெய்துவார்க்கு ஆமா யினும் வீடெய்துவார்க்கு ஆகாதென்றமையின், விதிவிலக்குகள் தம்முள் மலையாமை விளக்கிய வாறாயிற்று. இஃதில்லறம் அன்மைக்குக் காரணம்."

பொழிப்புரையில் தடித்த இடங்கள் நீங்கலாக எஞ்சிய பகுதிகள் பரிமேலழகரால் வரவழைத்துக் கொள்ளப்பட்டன ஆகும். இக்குறளில் இவ்வளவு கூறியும் அமையாத பரிமேலழ கர் அடுத்துவரும் "கொலைவினையராகிய மாக்கள் புலைவினையர்" என்ற குறளிலும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றார். 'கொலை வினையர்' என்றதனால் வேள்விக் கண் கொலை கொலையன்மை யறிக என்பது அவர்தம் உரை. கொலை வினையர் என்ற சொல் கொலைத் தொழிலை இடையறாது செய்து கொண்டிருப்பவர் என்று பொருள்படும் என்றும், எனவே அதனையே தொழிலாக உடைய கீழ்மக்களைப் புலைவினையர் என்றதல்லது, எப்பொழுதாவது யாதேனும் ஒரு காரணம்பற்றி வேள்விக்கண் கொலை செய்யும் மக்களைப் புலைவினையர் என்றாரல்லர் என்றும் பரிமேலழகர் கூறினர்.

கொலைவினையர் என்பதற்குக் கொலைத் தொழிலையே தொழி லாக உடையர் எனப் பொருள் காண்பதில் சுவை யிருப்பினும், அதனையே தமக்குக் கருவியாகக் கொண்டு, வேள்விக்கண் கொலை செய்தல் தக்கதே என்று கூறுதல் பொருத்தமின்றாம். அன்றியும் முற்குறளில் 'தேவர்பொருட்டு வேள்விக்கண் கொன் றால்' என்ற சொற்றொடரையும், 'இல்வாழ்வார்க்கு' என்ற சொல்லையும் மிக வருந்தி வரவழைத்து எழுதுதலும் பொருத்த மின்றாம். வேள்விக்கண் கொலை செய்தலைத் திருவள்ளுவர் ஏற்றுக் கொண்டிருப்பாராயின் "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று' என்ற அருமைத் திருக்குறளைப் பாடியிருக்கமாட்டாரன்றோ! அன்றியும் துறவற இயலில் இக்குறள் இருப்பதால், இவ்வொழுக்கம் துறவி களுக்கே என்று கொள்ளின், இல்லற வியலில் இருப்பன தாமும் இல்லறத்தார்க்கே உரியன வென்றும், ஏனைய அரசு அமைச்சு ஆகிய இயல்களில் உள்ளன தாமும் அவ்வவர்க்கே உரியன என்றும் கொள்ளக்கிடக்குமன்றோ! அங்ஙனம் கொள் ளின் இல்லறத்தாற்குரிய அன்பும், இன்சொல்லும் துறவறத் தார்க்கு உரியவல்ல வென்றும்; அவ்வவர்க்கும் கூறிய அறம் ஏனையோர்க்கும் ஒவ்வாவென்றும் கொள்ளவேண்டி வரும். அது திருவள்ளுவர் கருத்திற்குச் சிறிதும் பொருந்தாததாகும்.

அரசியலில் 'கல்வி' என்ற அதிகாரம் வைத்திருப்பதுபற்றி விளக்கம் தரவந்த பரிமேலழகரே இவ்வுண்மையை நன்கு விளக்குகின்றார். அது வருமாறு:

"அரசன் அறிவுடையனாயக்கால் தன்னுயிர்க்கே யன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி, இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையிற் பொதுப்படக் கூறுகின்றார்."

எனவே, திருவள்ளுவர் மக்கள் இனத்துள் ஒவ்வொரு சாரார்க்கும் உரிய அறங்களைச் சிறப்பாகவும், அவையே ஏனையோர்க்கும் பொதுவாகவும் அமையுமாறு கூறும் தகைமையர் என்பதை நன்குறியலாம். ஆதலின் 'நன்றாகும் ஆக்கம்' என்று தொடங்கும் குறள் துறவற இயலில் இருத்தலின் அவ்வொழுக்கம் துறவியர்களுக்கே உரியதென்றும், சான்றோர்க்குக் கொன்றாகும் ஆக்கம் கடை என்ற விலக்கு, வேள்விக்கண் கொலைசெய்தால் தவறில்லை யென்ற வடநூல் முறையொடு மாறு கொள்ளுமா றில்லை என்றும் கூறுவது சிறிதும் பொருந்துவதன்றாம்.

இங்ஙனமே, மக்களால் வழிபடத்தக்க ஆ (பசு) வேனும் தம்மைக் கொல்ல வருங்கால் அதைக் கொன்றுவிடலாம் என வடநூல் அறம் வகுக்க, தமிழ் நூல் அறமோ (திருக்குறளோ) "தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது இன்னுயிர் நீக்கும் வினை" என மறுத்துப்போயது. ஆதலின் வடநூல் அறம் வேறு; திருக்குறள் அறம் வேறு. ஒன்றுபடும் இடங்களில் ஒத்து நோக்கிச் சுவை காணலாமேயன்றி, வேறுபடுமிடங்களில் வேறாக வைத்துக் காணுதலே சிறப்பாகும். இந்நெறியைப் பரிமேலழகர் நெகிழவிடுகின்ற இடங்களில் எல்லாம் இத்தகைய இடர்ப்பாடுகள் நேருகின்றன. அவ்விடங்களில் இதுவும் ஒன்றாம்.

"அரியகற்(று) ஆசற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு." *

தென்மொழித் தொகுப்பு.

முதல் சுவடி.

முதல் சுவடியின் பன்னிரண்டு ஓலைகளும் சேர்ந்த தென்மொழியின் தொகுப்பு ஓர் அறிவுப் பெட்டகமாகும்! தமிழர் இல்லங்கள் தோறும் இருக்கவேண்டிய தனித்தமிழ்ப் பல்கலைக் களஞ்சியம் இது. மிகக் குறைந்த தொகுப்புகளே கையில் உள்ளன.

உள்ளுறையும் விலை பற்றிய விளக்கமும் அடுத்த இதழில் வெளியிடப்பெறும். தமிழ் அன்பர்கள் தொகுப்புகளுக்கு முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.



(வாழ்க்கையில் எத்தனையோ உண்மையான நகைச்சுவை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவற்றுள் சில வெறுஞ் சிரிப்பை மட்டும் வருவிப்பன ஒரு சிலவே அறிவைத் தூண்டி எண்ணவும் வைப்பன. அவற்றுள், அந் நிகழ்ச்சியில் ஈடுபட்டாரே யன்றிப் பிறரும் பயனடையவேண்டும். ஆங்காங்கே நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளை எழுதியனுப்பலாம். கற்பனை நிகழ்ச்சிகளைவிட உண்மை நிகழ்ச்சிகளே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன வெளியிடப் பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் இரண்டு உருபாக்கள் அனுப்பப் பெறும். — ஆசிரியர்.)

தமிழர்க்குப் புரியாத தமிழ் மரபு.

எங்கள் தமிழாசிரியர் மாணவர் ஒருவரை அஞ்சலகம் சென்று பணவிடை (Money Order) ஒன்று செய்து வருமாறு அனுப்பினார். சிறிது நேரத்தில் அம் மாணவர் திரும்பி வந்து, பண விடைத் தாளில் எண்ணால், '5' என்று சரியாக எழுதியிருக்க, எழுத்தால் ஐந்து என்று எழுதியதை அடுத்து '2' எனும் எண் ஏதோ தவறுதலாகப் போடப்பட்டிருப்பதாகவும், அதனைத் திருத்தி வாங்கி வரும்படியும் அஞ்சலகத்தார் கூறியதாகக் கூறினார். திகைப்போடு பணவிடைத் தாளைக் கையில் வாங்கிப் பார்த்த ஆசிரியர் புன்னகையுடன் தாம் ஐந்து 'உருபாக்கள்' என்று எழுதியதையே அஞ்சலகத்தார் '2' என்று எண்ணிவிட்டனர் போலும் என்று கூற, எல்லாரும் நகைத்தோம்!

பி. சுப்புஇலக்குமி இராமேச்சுரம்.

○ ○ ○

தனிப்பட்ட திறமை...!

கைதேர்ந்த ஒரு பெண் பொறியாளர் அலுவலகத் தலைவரிடத்தே தமக்குச் சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்டார்.

தலைவர், "தருவதற்கில்லை; ஏற்கனவே உங்கள் சம்பளம் உங்களைப்போன்ற பொறியாளர் திரு. த—. அவர்களின் சம்பளத்திலும் மிகுதி; அவருக்கோ ஐந்து குழந்தைகள்." என்றார். அதற்கு அப்பெண் பொறியாளர் "அலுவலகத்தில் நாங்கள் தோற்றுவிக்கும் பொருள்களைப் பொருத்தே நீங்கள் சம்பளம் கொடுக்கவேண்டும். வீட்டில் அவரவர் தனிப்பட்ட முறையில் தோற்றுவிப்பதைப் பற்றிக் கருத வேண்டியதில்லையே" என்றாள். அவருக்குச் சம்பள உயர்வு கிட்டியது.

○ ○ ○

விழிப்புணர்ச்சி..!

கல்லூரிப் பேராசிரியர் இருவர் பூங்காவில் அமர்ந்திருந்தனர். முன்னாள் மாணவன் ஒருவன் அங்கு வந்தான். பேராசிரியருள் ஒருவர், அவனை நோக்கி நலம் உசாவிவிட்டுத், "தம்பீ, நீ காதல் வயப்பட்டிருப்பதாகக் கேள்வியுற்றேன். காதல் வாழ்க்கை நலம் காப்பதாக அமைதல் வேண்டும். எனவே இதிலெல்லாம் மிகுதியும் விழிப்புணர்ச்சி வேண்டும்." என்றார். உடனே அருகிலிருந்த மற்றொரு பேராசிரியர், சிரித்துக் கொண்டே, "விழிப்புணர்ச்சியில் தானே காதலே தொடங்குகின்றது .!" என்றார் குறும்புடன்.

○ ○ ○

பாவை இயக்கம்..!

இரண்டாம் எலிசபெத்து அரசி சிறுமியாகவிருந்தபோது ஒரு நாள் அரண்மனை வாயிலில் நுழைந்தாள். அங்குக் கற்படிவம் போல் அசையாமல் நின்ற காவலன் இவளைக் கண்டதும் தன் சூட்டெஃகத்தை (துப்பாக்கியை)க் கீழே இறக்கித் தலை தாழ்த்திப் பணிந்தான். சிறுமி உள் நுழைந்ததும் மீண்டும் தன் பழைய நிலையில் நின்றான். பொருள் புரியாத சிறுமி மீண்டும் வெளியே சென்று உள்வந்தாள்; காவலனும் முன்பு போலவே செய்தான். இது சிறுமிக்கு வேடிக்கையாயிருக்கவே மீண்டும் மீண்டும் வெளியில் செல்வதும் உள் நுழைவதுமாக இருந்தாள். காவலனும் தன் கடமையைச் சளைக்காது செய்தான். பொறி போன்றியங்கும் அவ்வியக்கத்தைக் கண்ட சிறுமி, "அடடே நான் வைத்திருக்கின்றேனே முறுக்கேற்றினால் தலையாட்டி வேடிக்கை செய்யும் பாவை, அதைப்போலவே இதுவும் வேலை செய்கிறதே" என்றாள்!

நெ. மு. அப்துல்காதர், மதுக்கூர்.

○ ○ ○

வரலாறு

விடுதலை மறவர்
கரிபால்டி.
(1807–1882)

‘வழுதி’

இற்றைத் தமிழகத்தில் தொண்டரென உலா வருபவர் எல்லாரும் ஒற்றைச் செங்கல்லை எடுத்துவைத்த அளவிலேயே வீடுகட்டிவிட்டதாகப் பெருமை பேசித் திரிபவரே யாவர் அனைவரும் விரல் உகிரில் அழுக்குப் படாமலேயே தொண்டு புரிய நினைக்கின்றனர். வரவர மேலோட்டமான நிலை வளர்ந்து கொண்டே செல்கின்றது. தமிழ்ப் பொதுமக்களோ தம்மை மறந்து தம் உரிமை மறந்து வயிற்றுப் பாடொன்றே பெரும் பாடாய் வீழ்ந்துகிடக்கின்றனர். இத்தகையர்க்குத் தொண்டின் பொருளைப் புரிவிப்பதுபோல் அமைந்த வரலாறுதான், “என் தாயகத்தை அடக்கியாளும் அயலவரை ஓட்டுவேன்; என் இன மக்களை ஒரே தனிஆட்சியில் இணைப்பேன்; அதுவரை ஓயேன்; தலைசாயேன்” எனச் சூள்உரைத்து, இருபத்தைந்தாம் அகவையில் ஏந்திய புரட்சி வாள் எழுபதாம் அகவையளவும் கைவிலகாமல் இடையறுமல் புரட்சிகட்கும், விடுதலைப் படைகட்கும் தலைமை தாங்கி, விழுப்புண்கட்கும், வறுமைக்கும் பசிக்கும் அரசியற் காயாடிகளின் புல்லிய சூழ்ச்சிகட்கும் இலக்காகியும் சற்றும் ஊக்கம் குன்றுமல் வினை சோராமல் தம்மையே தாயகத்துக் கொப்படைத்த இத்தாலிய விடுதலை மறவர் கரிபால்டியின் வரலாறுகும்.

பழங்கால உரோமானியப் பேரரசாக விரிந்து நாகரிக ஒளி வீசித் திகழ்ந்ததும், ஒரே மொழியின மக்களைக் கொண்டதுமான இத்தாலிநாடு பத்தொன்பதாம் நூற்றுண்டில் அயலவர் ஆட்சிக்குட்பட்டும், பல சிறு பிரிவுகளாகச் சிதறுண்டும் பழம் பெருமை மங்கிக் கிடந்தது. ஆத்திரியப் பேரரசர் இத்தாலியின் வட

பகுதியையும், போர்பன் மரபினர் தென் பகுதியையும் தம் அடிப் படுத்தி ஆளுவாராயினர் இத்தாலிய மக்களோ இனவுணர் வற்று எழுச்சியற்றுத் தம் அடிமை நிலையினையும் உணராமல் தற்காலத் தமிழர்கள்போலவே மரத்துக் கிடந்தனர். இந்நிலையில் மாசினி என்பார் இளம் இத்தாலியர் கழகம் ஒன்றை நிறுவி இளைஞர் பால் இனவுணர்வினையும் நாட்டுணர்வினையும் வல்லாட்சியர்க் கெதிராகப் புரட்சி எண்ணத்தையும் தூண்டலானார். இக் கழகத்தின் உறுப்பினராய இளைஞர் கரிபால்டி "இத்தாலியர்க்கு நாட்டுணர் வூட்டுதலே என் வாழ்க்கைப் பணியும் சமயமும் ஆகும்" என்று சூளுரைத்தார். தம் வாழ்நாளில் ஒரு நொடிப் பொழுதேனும் அவர் இவ்வுறுதியினின்று வழுவினாரில்லை.

இவர் கி. பி. 1807 ஆம் ஆண்டில் இத்தாலியில் நைசு (Nice) என்னுங் கடல் துறையில் தோன்றினார். வழிவழியாக மீகாமன்களாக இருந்த குடும்பத்திற் பிறந்ததனால் கரிபால்டியும் இளமையிலேயே கடல் வாழ்க்கையிற் பெரிதும் ஈடுபாடு கொண்டார். எவர்க்கும் அடங்கா இயல்பினரான இவர் சிறிதுநாட் பள்ளிக் கல்விக்குப் பின் அதனை வெறுத்துக் கடலோடியானார். பல சிறு கலங்களில் இளையராகப் பணியாற்றியும், பின்னர் தாமே ஒரு கப்பலுக்குத் தலைமை தாங்கி நடத்தியும் ஐரோப்பாவின் பல இடங்கட்கும் சென்றார். இப் பயணங்களில் அவர் பட்டனவும் கண்டனவுமே அவர்தம் விடுதலை யுணர்வையும் நாட்டுப்பற்றினையும் புரட்சி வேட்கையையும் கொழுந்துவிட்டெரியச் செய்தன.

இந்நிலையில்தான் மாசினியின் தொடர்பு ஏற்பட்டது. இளம் இத்தாலியர் கழகம் புரட்சி நோக்க முடையதாய், முடியரசைக் கவிழ்த்து இத்தாலியக் குடியரசை நிறுவுவதே குறிக்கோளாகக் கொண்டிருந்ததால் கமுக்கமாகவே இயங்கிவந்தது. கி பி. 1834-இல் இவ்வியக்கம் ஒரு புரட்சியைத் தோற்றுவித்தது. புரட்சி வெற்றியளிக்காமற்போகவே, அதில் தலைநின்ற கரிபால்டி தப்பி ஓட நேர்ந்தது. இவர் தலைமறைவா யிருக்கையிலேயே அரசு இவர்க்குக் கொலைத்தண்டம் கொடுத்தது. கரிபால்டி பிரான்சுக்குச்சென்று பின்பு அங்கிருந்து தென் அமெரிக்காவுக்கு ஓடினார். அங்கும் இளம் இத்தாலியர் கழகக் கிளையொன்றிருந்தது. கரிபால்டி அதன் தொடர்பு கொண்டார். மாசினியோடும் மடல் தொடர்பு கொண்டு தாயக விடுதலைப் போர் எப்பொழுது தொடங்கும், தாம் எப்பொழுது அதில் ஈடுபட முடியும் என்று வினவிய வண்ணமாகவே இருந்தார். எனினும் இத்தாலிய மக்களும் அரசும் போதிய உணர்வும் வன்மையும் பெறாததால் பதின்மூன்றாண்டுகள் வரை கரிபால்டிக்குத் தாயகத்தில் காலடி எடுத்துவைக்கக் கூடாமற் போயிற்று.

அப்பதின் மூன்றாண்டுகளும் வறிதே கழியவில்லை. விடுதலை யுணர்வே உயிர் மூச்சாகக் கொண்ட கரிபால்டி தென் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளில் எங்கெங்கு மக்கள் அடிமைத் தனத்திற் சிக்கித் தவித்தனரோ எங்கெங்கு வல்லாட்சி தலைவிரித் தாடியதோ அங்கெல்லாம் புரட்சிகளைத் தூண்டினார் மீகாமனாக வும் படைஞனாகவும் இருந்து இவர் விடுதலை, உரிமை, மக்கள் நலன் இவற்றின் பேரால் ஆற்றிய போர்கள் பல. அப்போழ்து அவர் பெற்ற பட்டறிவு பின்னர் தாயக விடுதலைப் போரில் அவர்க்குப் பெருந்துணை புரிந்தது. ''இங்குத்தான் நான் விடுதலை மறவர் பலருடன் தொடர்பு கொண்டு, தாயக விடுதலை எனுந் தூய பணியில் எப்படி ஈடுபடுவது என்பதையும் எப்படி இடர்ப்பாடுகளைக் கண்டு நகுவது என்பதையும் கற்றுக்கொண் டேன்'' என்கிறார் கரிபால்டி.

மணம்புரியும் எண்ணமே அவர்க்குத் தொடக்கத்தில் இருந்ததில்லை ''அடங்காமையும் செயற்கரிய செய்யும் வேட் கையும் வாய்ந்த நான் எப்படித் திருமணம் பற்றி நினைப்பது? மற்றும், ஒரு கொள்கைக்காக வாழ்க்கையையே ஒப்புக் கொடுத் திருக்கையில் இல்வாழ்க்கை மக்கட்பேறு இவை சற்றும் பொருந் தாதவாகவே எனக்குத் தோன்றுகின்றன'' என்றார். ஆயினும் பேரிடரிற் சிக்கித் துணையும் தேறுதலும் ஆறுதலும் வேண்டி நின்ற காலத்து அவர் மணம் புரிந்து கொள்ள நேர்ந்தது.

1845 முதல் 1848 வரை இத்தாலியில் மக்கள் உரிமைக் கிளர்ச்சிகளும் ஆத்திரிய எதிர்ப்புப் போரும் தலையெடுக்க லாயின. இச்சூழலைப் பயன்படுத்திக் கொண்டு கரிபால்டி தன்னை விரட்டிய தாயகத்தில் 1848-இல் மீண்டும் கால் வைத்தார். அவர்க்குப் பொதுமக்கள் அளித்த வரவேற்பினைக் கண்ட அரசு அவரைஒன்றும் செய்யாமல்விட்டுவிட்டது.குடியரசே கரிபால்டி யின் கொள்கையாயிருப்பினும்; அயலவர் ஆட்சியை ஒழிப்பதே முதற் பணியாகையால் பீட்மான்டில் ஆண்ட இத்தாலிய மரபினைச் சேர்ந்த அரசையே தலைமையாக் கொண்டு பணி புரியக் கரிபால்டி விழைந்தார். ஆயினும் அவர்பணியை அரசு ஏற்க முன்வரவில்லை.

அப்போழ்து 'மிலான்' அரசு தனித்து நின்று ஆத்திரியர் களை எதிர்த்தது கரிபால்டி உடனே அங்குச் சென்றார். விடுதலைப் படைக்குத் தலைமை தாங்கினார். ''அயலவன் பிடியி னின்று தாயகத்தை விடுவிப்பதுபோல் இறப்ப வுயர்ந்த எழில் மிகு செயல் வேறொன்றில்லை'' என்று முழங்கினார். ஆயினும் இத்தாலிய அரசுகட்குள் ஒற்றுமை இன்மையாலும் மக்கள் விழிப்பின்மையாலும் விடுதலைப் படை எண்ணியதை முடிக்க இயலவில்லை. தமக்குத் துணைவராத பீட்மான்டு அரசின்மேற்

கரிபால்டிக்குச் சினம் பொங்கி எழுந்தது. ஆயினும் என் செய்வது? மக்களோ உணர்வற்ற மரக் கட்டைகளாய், விடுதலையில் அக்கறையற்றவர்களாய்க் குடியரசுக்குச் சற்றும் தகுதியற்றவர்களாய்க் கிடந்தனர். கரிபால்டியின் தொண்டர் படையின் ஆர்வமும் கட்டுப்பாடும் குலைந்து போயின. எனினும் கரிபால்டி சிறிதும் தளர்ந்தாரில்லை. "அரசரின்மேல் நம்பிக்கை வையாதீர்கள். உங்கள் சொந்த ஆற்றலில் நம்பிக்கை வையுங்கள். வெல்ல வேண்டும் என்ற உறுதி நமக்கிருந்தால் நாம் வென்றே தீர்வோம்" என்றார்.

'நேபிள்சு' போர்பன் அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. உரோம் பிரான்சின் துணைபெற்ற, கத்தோலிக்கச் சமயத் தலைவரான போப்பின் கீழ் இருந்து வந்தது. சிசிலியும் தசுக்கனி (Tuscany) யும் போர்பன் அரசர்க் கடிமைப்பட்டிருந்தன. அங்குள்ள மக்களின் விடுதலை யுணர்வைத் தூண்டுவதற்காகக் கரிபால்டி சென்றார். மக்களின் வரவேற்பும் அன்பும் பெரிதாயிருந்தனவே யல்லால் அவர்தம் விடுதலை வேட்கையும் வினையாண்மையும் மேலோட்டமாகவே இருந்தன. தம்மை ஆள்பவர் அயலவர் என்ற உணர்வே அவர்கட்கில்லாதிருந்தது. இத்தகைய அடிமை நிலையைக் கண்டு கரிபால்டி மனம் வெதும்பினார். அல்லும் பகலும், "இம்மக்களை எங்ஙனம் விழிப்படையச் செய்வது; எவ்வெவ் வகையிலெல்லாம் படைகொண்டு தாக்கி அயலவரை ஓடச் செய்வது, நாட்டுணர்வையும் பழம் பெருமையுணர்வையும் அடிப்படையாகக் கொண்ட புதிய இத்தாலியை எவ்வாறு தோற்றுவிப்பது" என்பனவே கரிபால்டியின் எண்ணங்கள் ஆயின.

உரோமிலே கிளர்ச்சியைத் தூண்டினார் கரிபால்டி. அவர்தம் செஞ்சட்டைப் படை பகைவரைச் சென்று தாக்கியது. ஆயினும் முழுவெற்றி பெற முடியவில்லை. இதற்கிடையில் கரிபால்டி சட்டமன்ற உறுப்பினராகியிருந்தார். சட்டமன்றம் புரட்சிப் படைக்கு ஆள்திரட்ட முழு உரிமையும் கொடுத்தது. இவரோ நாடெங்கும் சூறாவளியெனச் சுழன்றார். "மக்களே உங்கள் தாயகத்துக்காகப் போராட வாருங்கள். பகலெல்லாம் வெப்பமும் நீர்விடாயும், இரவில் பசியும் குளிரும் உங்களை வாட்டக்கூடும். ஊதியமில்லாக் கடின உழைப்பு, இடர்கள், ஏதங்கள், வறுமை, இவையெல்லாம் நேரக்கூடும் ஆயினும் சலியா முயற்சியும் தளரா உறுதியும் கொண்டு இத்தாலிய அன்னையின் அடிமை விலங்குடைப்போம் வாருங்கள்" என்று முழங்கினார்.

ஆயினும் உரோமில் தொடுத்த போர் அரசியற் சூழ்ச்சி வல்லார் விரகுகளாலும் போதிய துணையின்மையாலும், வெற்றி

அளிக்கவில்லை. கரிபால்டி பெருந் தலைவராகி வருவதைக் கண்ட பீட்மான்டு அரசரும் அமைச்சர்களும் தம்முடியாட்சிக்கு இடர் நேருமோ எனும் அச்சத்திலேயே, கரிபால்டியை விடுதலைப் போரில் தூண்டிவிடுவதும், பின் அவர் முன்னேறிச் செல்கையில் பல காரணங் காட்டி அவரைப் பின்னிழுத்துக் கொள்வதுமாக இருந்தனர். இக்காரணங்களில் தோல்வியுற்ற கரிபால்டி தம் தொண்டர்படையைக் கலைத்துவிட்டுப் போர் முகத்தில் தம்மோடிணைந்து போர் புரிந்த மனைவியுடன் தப்பி ஓடவும் நேர்ந்தது. இரவும் பகலும் களைப்பாலும் பசியாலும் நலிந்து இடைவிடாது பின் தொடரும் பகைவர் கைக்குத் தப்பு வது பெரும் பாடாயிருந்தது. சூலுற்றிருந்த மனைவி அனிதா வழியிலேயே நோயுற்று இறந்தார்.

பீட்மான்டுக்குத் திரும்பிய கரிபால்டியைத் தாயக அரசு பல காரணங்கள் கூறி நாடு கடத்திற்று. அவர் அன்னையையும், தம் மூன்று குழந்தைகளையும் பிரிந்து வட அமெரிக்காவுக்குச் சென்றார். ஆங்குச்சென்ற கரிபால்டி மூன்றாண்டுகள் மீகாமனாகப் பணியாற்றிக்கொண்டே தாயக விடுதலைக்குப் பொருளும் துணை யும் தேடினார். மீண்டும் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களால் அவர் தாயகத்துக்கு வர ஒப்புதல் பெற்றார்.

மாசினியின் மக்கட் புரட்சி எண்ணங்களை வெறுத்த காவூர் என்பவர் பீட்மான்டில் தலைமை அமைச்சராக ஆனார் கரிபால் டிக்கும் மாசினிக்கும் இக்காலத்தே கருத்து வேற்றுமை ஏற்பட் டிருந்தது. மாசினி எண்ணங்களிடையே வாழ்ந்தவர்; கரிபால்டி மக்களுடன் பழகி அவர்தம் இயல்பில் நன்கு பட்டுத் தேர்ந்தவர். ஆதலின் ஒரு பெருத்த மக்கட் புரட்சிக்குத் தக்க சமயம் இன் னும் நேரவில்லை; அரசரோடு ஒத்துழைத்து முதலில் அயலவரை ஓட்டிவிட்டுப் பின்பே குடியாட்சியைப் பற்றி எண்ணுதல் வேண்டும் என்று கருதினார் கரிபால்டி மாசினியினும் கரிபால்டி யால் முடியாட்சிக்கு இடர் குறைவு என்பதை உணர்ந்த காவூர் கரிபால்டியைப் பயன்படுத்திக் கொண்டு முடியாட்சியின் வலி வைப் பெருக்கத் திட்டம் தீட்டினார். முதலில் கரிபால்டி இதனை உணரவில்லை அவர்தம் எளிய உள்ளம் அரசியல் சூழ்ச்சி களையும் தில்லுமுல்லுகளையும் கண்டுகொள்ள முடியாமல், நாட் டன்பு, உரிமை, மக்கள் நலம் உலக ஒற்றுமை போன்ற உண் மையான எண்ணங்கள் மலரும் சோலையாக விருந்தது.

கரிபால்டியின் நாட்டன்பு குறுமை உணர்வினதன்று. ஐரோப்பா முழுவதுமே, வல்லரசர்களின் பேரரசுப் (Empire) பிடியினின்று விடுபட்டு, இனவழிப் பிரிந்து, ஒரு மொழி பேசும் ஓரின மக்களின் உரிமைக்குக் காப்பான தனித்தனி நாடு களாக இயங்க வேண்டும்; அவை தமக்குள் ஒரு கூட்டுறவு ஏற்

படுத்திக் கொள்ளவேண்டும் என்று கரிபால்டி அடிக்கடி கூறு வார். அரசியல் வாணர்கள் பிற்காலத்தில் இக்கொள்கையை அறிந்து போற்றுதற்கு நெடுநாள் முன்பே நல்லுணர்வாளராகிய கரிபால்டி இவ்வெண்ணங்களைக் கொண்டிருந்தது வியக்கத் தக்கது.

காவூரும், பீட்மான்டு அரசரான விக்தர் இம்மானுவேலும் தந்நலத்தை மனத்துட் கொண்டே கரிபால்டியின் விடுதலைப் போருக்குத் துணை நின்றனர். இப்போர்களால் கரிபால்டியின் புகழும் மதிப்பும் உயர்ந்துகொண்டே செல்வது கண்ட பொறாமைக்காரர்களும், அமைச்சர்கள், படைத்தலைவர்களும் இவரைத் தூண்டி விடுவதும், பின்னர் ஒத்துழைக்க மறுப் பதுமாய் இடர் பல விளைவித்து வந்தனர்.

இறுதியில் சிறந்ததொரு வாய்ப்புக் கிட்டலாயிற்று. இத்தாலி யின் தென் பகுதிகளாகிய நேபிள்சு, சிசிலி, உரோம், வெனிசு போன்ற இடங்களில் புரட்சியைக் கிளப்பிவிட்டு, மக்கள் வலு வுடன் போர்பன் ஆட்சியை ஒழித்துவிடுவதென ஒரு திட்டம் உருவாயிற்று. இம்முறை கரிபால்டி ஏமாறவில்லை. தாம் படை நடத்திச் செல்ல வேண்டுமாயின் தமக்குப் படைத்தலைமை மட்டுமின்றி வெல்லும் இடங்களிலெல்லாம் தனியாண்மை (dictatorship) செலுத்தும் ஆணையும் கொடுத்தே ஆதல்வேண் டும் என்று கேட்டார். இவ்வாறு கேட்டது ஆணை வேட்கையால் அன்று, தம்மோடு ஒத்துழையாப் படைத் தலைவர்களை ஒறுத்துத் திருத்துதற்கும், தம் தொண்டர் படைக்குச் செல்லுமிடங்களில் வேண்டுவனவற்றை வேண்டியாங்குப் பெறுதற்குமேயாம்.

சிசிலியும் நேபிள்சும் கரிபால்டிக்கு அடிபணிந்தன. அவற் றின் தனியாள்நர் (Dictator) அவர். படை யொழுங்கைக் கவனித்தது மட்டுமன்றி, நாட்டிற் பல சீர்திருத்தங்களையும் செய் தார். இலவசக் கல்வித் திட்டம், இருப்புப் பாதை அமைப்பு, சமய மடங்களில் ஊழல் ஒழிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டார். உலகமே கரிபால்டியை வியந்தது. "முறையான கல்வியும் ஒழுங்கான படைப் பயிற்சியும் பெறாத-பெருங்குடியில் தோன் றாத- தனி மகன் ஒருவன், மூளைத் திறனிலும் அரசியல் கலையி லும் கூடத் தலைநில்லா வெற்றுப் படைமறவன், ஒழுங்கான படைகளாலும் வெல்லமுடியாத பகைவர்களைத் தன் பயிற்சி பெறாத தொண்டர் படையால் முறியடித்துத் தனியாண்மை செலுத்துகின்றானே" என்று வியவாத ஐரோப்பியர் இல்லை. கரிபால்டியின் தொண்டுணர்வும் உண்மை உள்ளமும் தீதற்ற பொதுமை நோக்குமே இச்சிறப்புக்குக் காரணம் என்க. அப்போது கரிபால்டி எண்ணியிருந்தால், தமக்கு வாய்த்திருந்த பேராற்றலின் வலுவால் அரசரை, எதிர்த்து நின்று தாம் கனவு

கண்டுவந்த இத்தாலியக் குடியரசினை நிலைநாட்டியிருக்க முடியும் தாம் வென்ற பகுதிகளில் மாறாத் தனியாண்மை செலுத்தித் தமக்குப் புகழும் பொருளும் தேடிக்கொண்டிருக்க முடியும். ஆனால் இத்தாலிய மொழி இனம் தன் பழம் பெருமை உணர்ந்து தனித்ததொரு நாடாகத் திகழவேண்டும் என்ற மாறாக் கொள்கையால், உள்நாட்டுப் போர் ஏற்பட்டு, இருக்கும் நிலையும் கெட்டுவிடக்கூடாதே என்ற உயர்நோக்கால் தமக்குப் பல இடர்கள் புரிந்து, இறுதி நேரத்திலும் வெற்றியின் புகழைத் தமக்களிக்க மறுத்துச் சூழ்ச்சி பல மேற்கொண்ட அரசர் விக்தர் இம்மானுவேலின் பால் தாம் வென்ற பகுதிகளை முழுவதும் விட்டுக் கொடுத்துவிட்டுத் தமக்கென எதுவுமில்லாமல், எப்பரிசினையும் எதிர்பாராமல், கடல் நடுவில் காப்ரீரா எனுந் திட்டில் இருந்த தம் இல்லம் திரும்பினார்.

இத்தாலியின் பெரும் பகுதிகள் விடுதலை பெற்றிணைந்தன. ஆயினும் போப்பின் கீழ் இருந்த உரோமின் நடுப்பகுதிகளும் வெனிசும் இன்னமும் அயலவர்க்கே ஆட்பட்டிருந்தன. முழு இணைப்பைக் காணுமட்டும் அமைதியுறாத கரிபால்டி, அகவை முதிர்ந்து உடல் நலிந்த போதினும் கையில் வாள்தூக்கிக் களஞ் சென்றார் தோல்விகள் சில நேர்ந்த போதினும், ஐரோப்பிய அரசியலில் ஏற்பட்ட பல நிலை மாற்றங்களால், இத்தாலி இழந்த பகுதிகளை மீண்டும் பெற்றுத் தன்னுரிமைத் தனியாட்சியை வகுத்துக் கொண்டது. அதன் பின்பே கரிபால்டி அமைதியுற்றார்.

கரிபால்டி உலக வரலாற்றில் சிறந்த இடம் பெறுகின்றார். நல்லெண்ணத்தின் வலுவில் அமைந்த குன்றாக் கொள்கைக் கடைப்பிடியில் தலை நின்ற அவர் எவ்வேளையிலும் தம் தொண்டுக்கு விலை கேட்டவரல்லர் நாட்டுப் போரை நடத்த அவர் பன்முறை பணந் தண்டியதுண்டு. ஆயின் தமக்கென ஒரு சிறு துரும்பையும் ஏற்றுக் கொண்டதில்லை. பல முறை அளிக்கப் பட்ட பரிசில்களைப் பெற மறுத்திருக்கின்றார், தம் தேவைக்கு மேல் எதனையும் வைத்துக் கொள்ளாத ஏழையாகவே அவர் வாழ்ந்தார். இரண்டு மாற்றுடைகட்குமேல் மூன்றாவது கிடைத்தால அதனை வறியர்கட்குக் கொடுத்து விடுவாராம். புகழையும் அவர் விழைந்ததில்லை பன்முறை அவர் சட்டமன்ற உறுப்பினராயிருந்திருப்பினும், சிசிலிக்கும் நேபிள்சுக்கும் தனியாள்நராக இருந்திருப்பினும், பின்னர்த் தம் தொழிலைக் குறிப்பிடும் போதெல்லாம் 'உழவர்' என்றே குறிப்பிட்டு வந்தார் காப்ரீராத் திட்டில் முதுமையில் வாழ்ந்து வருங்காலை அவரைக் காணவந்தார் பலர். அவரை விருந்துக்கழைத்த நாடுகள் பல. இவற்றால் அவர் மகிழ்வுற்றிருப்பினும் செருக்கோ பெருமிதமோ உற்றதேயில்லை. இடைவிடாத போர்களாலும், கடின உழைப்பாலும் பன்முறை முடக்கு நோயாலும் காய்ச்சலாலும் துன்புற்ற போதிலும், நன்றியற்ற அரசர் படை ஒரு முறை அவரையே கொல்ல நினைத்

துச் சுட்டுப் புண்படுத்திய போதிலும் அவர் உள்ளம் தளர்ந்த தில்லை தம் உள்ளத்தில் பேரின்பம் பயந்த அன்னை நாட்டின் விடுதலை யுணர்வே அவரைக் காத்து நின்றது.

முதுமைக் காலத்தில் அவர் எண்ணிய எண்ணங்களும் பாராட்டத்தக்கவை. வாழ்வெல்லாம் போரில் கழித்த மறவராயி னும் அவர் போர் வெறி கொண்டவரல்லர். நாட்டு விடுதலைக் காகப் போர் புரிதலின் இன்றியமையாமையாலேயே அவர் போர் மேற்கொண்டார். உண்மையில் போரே இல்லாத அரசி யல் சூழலை உருவாக்க வேண்டுமென்பது அவர் விருப்பம். வலியார் மெலியாரை வாட்டாதிருந்தால், மக்களின் உரிமை பறிக்கப்படாதிருந்தால் போர் வேண்டுவதன்று. நாட்டினர் போருக்காகச் செலவிடும் பெருந் தொகையிற் பாதியை யேனும் ஆக்கத்துறையில் செலவிட வேண்டும் என்று கூறியிருக்கின்றார். ''ஒரு நாடு தன் அண்டை நாட்டினர்க்குத் துன்பம் தரும் முறை யில் எய்தும் பெருமை உண்மைப் பெருமை யாகாது'' என்றார். ஐரோப்பிய நாடுகளின் குடியேற்றக் கொள்கையையும் அவர் கடிந்தார். தாயகத்தின் முன்னேற்றத்திற் பொருளையும் நாட்டத் தையும் செலவிடாமல் கடல் கடந்த நாடுகளைச் சுரண்டுவதில் நாடுகள் முயல்வது பெரும் பிழை என்று அப்போதே சுட்டியிருக் கின்றார்.

சமயத்துறையிலும் கரிபால்டியின் எளிய உள்ளம் உண்மை யினைக் கண்டது. சமய குரவரின் ஊழல்களையும் ஏமாற்றுகளை யும் அவர் கடிந்திருக்கின்றார். போப்பைத் தலைமையாககொண்ட கிறித்தவ சமயம் கிறித்துவின் கொள்கைகட்கு நேர் மாறான பொய்மைத் தன்மையது என்பதைப் பன்முறை வெளிப்படுத்தி யிருக்கின்றார். கரிபால்டி கணக்கிலும் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டவர். பல கட்டுரைகளும், ஏன், கதைகளையுங் கூட எழுதியிருக்கின்றார் அவை இலக்கியச் சிறப்பு வாய்ந்தன அல்ல எனினும் அவர் உள்ளத்தில் ததும்பியிருந்த நல்லுணர்வையும் கொள்கைகளையும் எடுத்தியம்புகின்றன.

எழுபத்தேழாம் அகவையில் அவர் இவ்வுலகை நீத்தார். சாவிலும் அவர் புகழை விரும்பியவரில்லை. தம் நண்பர்க்கே யல்லால் அரசியல் வட்டாரத்தில் யாருக்கும் தெரியாமல் தம் உடல்தனித்த காப்ரீராத் திட்டில் எவ்வித வினைப்பாடுகளுமின்றி அமைதியாக எரிக்கப்பட வேண்டும் என்ற விருப்பத்தை அவர் தெரிவித்திருந்தார். எனினும் வாழ்வில் பன்முறை அவர் விருப் பத்தை மதிக்காத அரசு சாவிலும் அவர் விருப்பத்தை மதிக்க வில்லை. அவர்க்கு மரியாதையும் புகழும் அளிப்பதாக நினைத்துக் கொண்டு அவர் விரும்பாத பெருங்குடி மக்கள் புதைக்கப்படும் இடத்தில் புதைத்தனர். அவர் தம் பிள்ளைகட்கு உலகப்பொருள் எதையும் விட்டுச் செல்லவில்லை. உரிமை எண்ணங்களும் உண்மை வேட்கையுமே அவர் விட்டுச்சென்ற பொருட்கள். ○

பாட்டு அரங்கம்

[நாட்டுணர்வும் செந்தமிழ்வாழ் நல்லுணர்வும் ஊற்றெடுத்த
பாட்டுணர்வும் நம்நெஞ்சில் பாய்ந்துவிட்டால்—கேட்டுணர்
இந்தியமென் றார்ப்பாரோ? இந்தி நுழைப்பாரோ [வால்
விந்தியத்தைத் தாண்டி ..? விளம்பு! — ஆர்.]

தமிழ்:

உள்ளும் புறமும் உணர்வினை ஊட்டி
உயிரோ டியைந்த உண்மைத் தமிழே
கள்வன் போன்றாய்; கவர்ந்தாய் உளத்தைக்
கண்டேன் உன்றன் காதற் பெருமை!

—வை. மு. கும்பலிங்கன், குடந்தை.

மாற்றாரும் போற்றுவது தமிழே—தூய
மனவுணர்வை ஊட்டுவதும் தமிழே!
வேற்றுமையைத் தகர்ப்பதுவும் தமிழே—வாழ்வின்
வியன் நெறிகள் வகுப்பதுவும் தமிழே!

உலகுக்கு முதன்மொழியும் தமிழே—அறம்
உரைத்திருக்கும் முதல் நூலும் தமிழே!
பலகற்றார் சுவைப்பதுவும் தமிழே—போற்றிப்
பரவோமேல் தமிழர்நமக் கிகழே!

— கோ. சோ. செயபால், பொய்கை.

"பாலாடை யோடுபுகழ், மானம் ஊட்டிப்
பயிற்றுவித்தேன்; என்மக்கள் மறந்தார் என்னை;
மேலாடை இல்லாத ஆங்கிலப் பெண்
மினுக்கிவந்தாள்; என்வீட்டில் நுழையவிட்டார்;
நூலாடை கல்பட்டு நைதல் போல
நோகவிட்டார் சிறையிலெனைக்; காலம் மாறத்
தோலாடை சுற்றிவந்தாள் அரக்கி இந்தி;
தொண்டடிமை ஆகின்றார்; துறந்தார் என்னை!"

''மானத்தைச் சோற்றுக்கு விற்று விட்டார்;
மாத்தமிழர் பண்பாட்டைச் சாய்த்துவிட்டார்;
ஆனமுறை கூறிவிட்டேன்; கேட்டா ரில்லை
அழுக்குகளைச் சுமந்திட்டார்; உரிமை விட்டார்.
கானலின்பின் அலைகின்ற மானை ஒத்தேன்!
கடுகளவும் நன்றுணர்வார் காணேன்'' என்று
தானழுதாள் தமிழன்னை; கனவிற் கண்டேன்.
தளர்ந்தெழுந்தேன் என்விழியிற் கண்ணீர்
கண்டேன்!

— மீனவன், தலைஞாயிறு.

விடிவுறு பொழுதினில் இருநிலம்
விரைவொடு புதுவலி கிளர்ந்திடும்.
துடியொடு முழவதிர்ந் தொலிசெயும்
தூய்தமிழ் இசைஎழும் எங்குமே!

உழைப்பவன் வினை,திறன் உயர்வுறும்;
உண்மைகள் மனமெலாம் ஒளிபெறும்.
அழைத்திடும் கடன்நமை; பணிசெயும்
அருவினை வொளிர்பகல் தருகுமே!

அடுபகை அயலவர் பொடிபட
அருந்தமிழ் மறவர்கள் ஒருமனப்
படுவகை எழுந்தனர் இந்தியாம்
பசையறு மொழியினை விரட்டவே!

எழுசுடர் பரவுதும்! எழுமினோ
இடர்விளை பகையினை அகற்றுவோம்!
புழுதியிற் படிநிலை போக்குவோம்!
பொலிவுறும் விடுதலை அடைவமே!

— கடலூர்-தமிழ்மணி, சென்னை.

தமிழகம்:

எடடா வாளை! எடடா வாளை!
எம்தாய் தமிழைப் பழிப்பார் அழியத்
தொடடா போரைத் தொடடா போரைத்
தொன்தமிழ்ப் பண்பா டழிப்பார் தொலைய!
உடை'டா பல்லை, உடை'டா பல்லை
உன் தாய் நாட்டை இழிப்பார் புல்லர்;
அடடா தமிழர் வாழ்வை உலகம்
அனைத்தும் வியக்கச் செய்வாய், செய்வாய்!

— ப. சங்கரலிங்கம், காட்பாடி விரிவு.

அரியதாய் நாட்டினை விரைவினில் மீட்டு; — நமை
அறியாத மூடர்க்குச் சாவினைக் காட்டு.
பெருவுல கோர் நமை உணர்வது கேட்டு — நீ
பிழையின்றித் தனித்தமிழ் வாழ்வினை நாட்டு.

கடமையின் உறுதியில் நற்செயல் கூட்டு — நீ
கலக்குறும் இடும்பையை இடும்பையால் வாட்டு;
மடமையை நாட்டைவிட் டேவிரைந் தோட்டு - நீ
மயங்காமல் வைத்திடு பகைவர்க்கு வேட்டு!

— **இரா. பன்னீர்ச்செல்வன், குடந்தை.**

வலியைக் கண்டோம்! கலைகள் யாவும்
வளர்க்கக் கண்டோம்! அகப்பொருள் கண்டோம்;
பொலிவைக் கண்டோம்; தென்மொழிக் கோயில்
பூத்தல் கண்டோம்; அமைதியுற் றேமே!

தனித்தமிழ் முழக்கிடும் தாளிகை கண்டோம்!
தமிழர் பண்பின் மணியொலி கண்டோம்
பனிமலை யாகப் பல்கிட வேண்டிப்
பைந்தமிச் சான்றோர் புகழக் கண்டோம்!

— **உளுந்தூர்ப்பேட்டை, சுரா.**

இந்தி எதிர்ப்பு:

ஆடெதற்கு? மாடெதற்கு? நன்செய் புன்செய்,
அகில்சாந்தத் தோப்பெதற்கு? துரவெ தற்கு?
வீடெதற்கு? விளக்கெதற்கு? மழலை பேசி
விளையாடும் மகவெதற்கு? துணையெதற்கு?
கூடெதற்கு? தசையெதற்கு? குருதி, வன்மை,
கொழுப்புதரும் உணவெதற்கு? உடையெ தற்கிங்(கு)
ஏடெதற்கு? எழுத்தெதற்கு? விழியிற் பாவை
என்றுமுள தென்றமிழ்த்தாய் இரங்கும் ஞான்றே.

போக்கெதற்கு? வரவெதற்கு? பாட்டுங் கூத்தும்
பொலிகின்ற கருத்தெதற்கு? கலையெதற்கு?
நாக்கெதற்கு? சுவையெதற்கு? பலா மா வாழை
நறுங்கனிகட் சாறெதற்கு? சோறெ தற்கு?
மூக்கெதற்கு? மூச்செதற்கு? குருதி யோடி
முறுக்கேறும் நரம்பெதற்கு? குடரெ தற்கு?
நோக்கெதற்கு? விழியெதற்கு? விழியின் மேலாம்
நுண்டமிழ்த்தாய் நெஞ்சமிக நோகும் ஞான்றே.

தாயெதற்குப் பெற்றெடுத்தாள்? மான மில்லாத்
தடிமரமாய், கருங்கல்லாய் வாழ்வ தற்கா?
காயெதற்கு? கனியிருக்க; அரிமா வாழுங்
காட்டினிலேன் நரியாட்சி? இந்தி யென்னும்
பேயெதற்கு? ஆளுதற்கா? நமது மூச்சாம்
பெருந்தமிழை ஆட்சிமொழி யாக்கா விட்டால்
நீயெதற்கு நானெதற்கு வாழல் வேண்டும்?
நிமிர்ந்தெழுவோம், களங்காண்போம் வெல்வோம் நாமே!

— இரா. இளவரசு, எம். ஏ.

மொழிவெறியால் தமைமறந்த வடவர் இன்று
முறைகெட்ட வழிகளினல் தமிழ் மொழிக்குப்
பழிவரவே இந்தியினைத் திணிக்கும் வேளை
பார்த்து மன எழுச்சியிலா திருத்தல் நன்றே?
குழிபறித்துச் செந்தமிழைப் புதைக்க எண்ணும்
கூற்றுவரை அக்குழிக்கே இரையாக் கற்கு
விழித்தெழுவோம், வேங்கையினும் சீற்றம் கொள்வோம்
மெய்த்தமிழர் நாமென்றல் தமிழ்க் காப்போமே!

— ச. உலூர்துசாமி, பெங்களூர்.

இழிநிலையில் உழலுவதே எந்நாளும்
இந்நாட்டின் தீயூழ் அன்று.
பழிபெருகப் பார்த்தயரோம்; பழந்தமிழர்
மறமரபில் வந்தோம் யாமே!
மொழிஉரிமை இழந்திங்கே ஒருபொழுதும்
மூங்கையராய்க் கழிய மாட்டோம்.
விழியிரண்டை ஈந்தேனும் வழிவழியாய்
உயர்ந்த செழுந் தமிழ்க் காப்போமே!

— ஆ. பாமன்னன், மதுரை-1.

வருகின்ற பெரும்பகையை வீழ்த்து தற்கு
வன்கையில் வாளேந்தும் மறவர் நாமே
தருமின்பச் செந்தமிழை, வாழ்வின் சொத்தைத்
தரங்கெட்ட இந்தியினுக் கடிமையாக்கி
ஒருபோழ்தும் உயிர்வாழோம்; மானம் காப்போம்.
உட்பூசல் விளைக்காமல் ஒன்று சேர்வீர்
செருமுனையில் வென்றிகொள்வோம்; சாவதேனும்
செந்நீரால் நம்புகழை எழுதிச் சாவோம்.

— கணைக்காலிரும் பொறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

இந்தி எதிர்ப்பு. அறிஞர் கருத்து வரிசை-2.

● இந்தி வெறியரின் போக்கு, நாட்டின் ஒற்றுமைக்குக் கேடே விளைக்கும்.

''மற்ற மொழிகளின் மேல் வெறுப்புணர்ச்சியைத் தோற்றுவிக்காத மொழிப்பற்று வரவேற்கக் கூடியதே. இவ்வாறில்லாத மொழி வெறியை நாம் எதிர்த்துப் போரிடத்தான் வேண்டும். இந்திய ஆட்சி மொழியாக இந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதால், அதுமட்டும்தான் இந்திய அரசியல் சட்டத்தினால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரே ஆட்சி மொழி என்று நினைப்பது தவறு. இந்தி மொழியால் அந்தநிலையை அடையும் அளவுக்கு வளர்ச்சி அடைய முடியவில்லை. இந்திக்கு உயர்ந்த இடம் அளிக்க விரும்பினால், மற்ற மொழிகள் பேசும் மக்களின் இன்னல்களையும் நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இந்தி வெறியர்களின் போக்கு நாட்டின் ஒற்றுமைக்கே கேடு செய்யும் வகையில் உள்ளது. இந்தியை நாங்கள் எதிர்க்கிறோம் என்பதால், நாங்கள் இந்திப் பகைவர்கள் ஆகமாட்டோம். இஃதை ஒரு தேசியச் சிக்கல் கண்ணோட்டத்தில் தீர்க்க முயல வேண்டுமே தவிர, குறுகிய நோக்கில் தீர்க்க முயலக்கூடாது.''

—நடுவண் அமைச்சர் சி. சுப்பிரமணியம்,
திசம்பர் 9 இல், கல்கத்தாவில் நடந்த பாரதி விழாவில்

● இந்தி வட்டார மொழிகளைச் சீர்குலைத்துவிட்டது!

''பிற மொழிகளைப்போல் இந்தியும் ஒரு வட்டார மொழிதான்...இந்தி ஆட்சி மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டபின் இந்தியாவின் பல வட்டார மொழிகளைச் சீர்குலைத்துவிட்டது. எனவே ஆங்கிலத்தையும் சேர்த்து எல்லா இந்திய மொழிகளுக்கும் சம உரிமை வழங்கும் வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டும்''

– கல்கத்தா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. சம்புநாத் பானர்சியின் தலைமையில் நடந்த ஆட்சி மொழி மாநாட்டில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானம்.

● இந்தியினால் தமிழ் கெடும் என்பதை இப்பொழுதுள்ள பேராசிரியர்கள் அஞ்சாமல் அரசுக்கு எடுத்துரைக்கவேண்டும்

''இந்தி வாழ்ந்தால் தமிழ் கெடாது என்று சிலர் கூறிக் குழம்புவதற்குக் காரணம், மாறான அரசியல் காரணங்களை உள்ளத்தில் கொண்டிருப்பதுதான். பாடுவது இல்லை என்றால் பண் இருக்க முடியாது. அதேபோல் மொழியைப் பேசுபவர்கள் இல்லை

என்றால் மொழி என்று ஒன்று இருக்க முடியாது. இதற்குச் சான்றுகள் பல கூறமுடியும். இமயம் முதல் குமரிவரை பரவி இருந்ததாக வரலாற்றுஅறிஞர்கள் கூறும் தமிழ், இப்பொழுது வழக்கில் இல்லாததால் இன்று அங்கெல்லாம் மொழிநூல் வல்லுநர்களின் ஆராய்ச்சிக்குரியதாகப் போய்விட்டது. பாரதியார் காலம் வரை திருவேங்கடம் தமிழ் எல்லையாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இன்று வேங்கடமும் நம்மிடம் இல்லை. தமிழும் அங்கில்லை. நெஞ்சைஅள்ளும் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவின் சேர நாட்டிலோ, ஆந்திரம் கன்னடம் போன்ற நாடுகளிலோ தமிழைக் காண முடியவில்லை. தமிழ் நாட்டில் கூடப் பலருக்கு வீட்டுமொழி தமிழாக இல்லை. இந்நிலை ஏற்படக்காரணம் வேற்று நாட்டு அரசர்கள் பலர் நம்மை அடிமைப்படுத்தி அவர்களுடைய மொழிகளைத் திணித்ததுதான். அதேபோன்று இந்தி திணிக்கப் படுமானால் தமிழ் வழக்கில் இல்லாதுபோய் அழிந்து விடக்கூடும். இந்தியினால் தமிழ் கெடும் என்பதை இக்காலத்துப் பேராசிரியர்கள் அஞ்சாமல் அரசுக்கு எடுத்துரைக்க வேண்டும்''

— புலவர் கோவிந்தன்; மதுரைத் தமிழ் எழுத்தாளர் மன்றத்தின் ஆறுவது ஆண்டு விழாவில்.

இந்தியைத் திணிக்கத் தமிழை அழிப்பதா?

''திருச்சிராப்பள்ளி நிலையத்தில் ஏறத்தாழ 15 ஆண்டுகளாக இருந்து வந்த 'வானொலி' என்ற தமிழ்ச் சொல்லை 'ஆகாசவாணி' என்று எவரது கருத்தையும் கேளாமல் இந்திய அரசினர் மாற்றிவிட்டார்கள். எவ்வளவோ கெஞ்சியும் மாநாடு கூட்டி அறிவித்தும், தாளிகைகளில் எழுதியும், அமைச்சர்களைக் கண்டு பேசியும், வானொலித் துறையினர் விடாப்பிடியாகப்பயன் படுத்தி வருகின்றனர். இந்தி வந்தால் தமிழ் அழியும் என்பதற்கு இதுவே சான்று.''

— கி. ஆ. பெ. விசுவநாதம், வானொலி நிலையத் தலைவர்க்கு அனுப்பிய மடற் பகுதி.

செந்தமிழ் காக்கும் வெந்திறல் மறவர்

பாவாணர்க்குச் செலுத்தவேண்டிய பங்கை

நீங்கள் செலுத்திவிட்டீர்களா?

தென்மொழி திரட்டும் போர்ப்படையின் முதலணியில் நீங்கள் இடம் தேடிக் கொள்ளுங்கள்.

விரைந்து செயலாற்றுங்கள்! வெற்றி நம்முடையதே!

அமைச்சர்,
பாவாணர் பணக்கொடைத் திட்டம்,
தென்மொழி, கடலூர்-2.

மா. எழில்முதல்வன், எம். ஏ.
தமிழ்த்துறை; அரசினர் கலைக்கல்லூரி, கோவை.

செந்தொடை

பாட்டு என்பது பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை எனவும் அது செவிப்புலனை ஈர்த்து உவட்டாமல் இன்பம் தரும் ஒட்பம் உடையது என்றும் அறிஞர் கூறுவர். எனவேதான் பாட்டுக் கலை எல்லாக் கலைகளினும் விழுமியது என்று போற்றப்படுகிறது. பாடற் கலை காலத்தை வென்று வாழும் ஆற்றல் படைத்திருப்ப தன் காரணம், மக்களின் உணர்ச்சிப் பொதுமையைச் சொற் களிலே வடித்துக் காட்டுவதுதான். திட்ப நுட்பம் துறுமி, செவ்வுடிபோல் செறித்தினிது விளக்கிச் சில்வகை எழுத்தால் பல்வகைப் பொருளை விளக்கும் பெற்றி பாட்டுக்கே உண்டு.

பண்டைய இலக்கண ஆசிரியர்கள் பாட்டுக்குரிய இலக்க ணத்தை யாப்பு என்று வகுத்தனர். அடி, தளை என வரூஉம் இலக்கண அமைப்புகளில் தொடை என்பதும் ஒன்று. அந்தா தித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை என்பன தொடையின் பல்வேறு வகைகளாம். அவற்றுள் செந்தொடை என்பது மோனை முதலாகிய தொடையும், தொடை மாற்றும் இல்லாது வேறுபடத் தொடுப்பதாகும். ''முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டால் செந்தொடை நாமம்பெறும்'' என்பது காரிகையாசிரியர் கூற்று.

மோனை, தொடை முதலாயின பாடல்கட்கு அணி என விளங்குவன. எனினும் அவை இல்லாமலேயே பாட்டு அழகு பெறுவது உண்டு. இலக்கண ஆசிரியர்கள் இந்த உண்மையை உணர்ந்தே 'செந்தொடை' என்ற ஒன்றை அமைத்தனர்.

'செந்தொடை' என்ற சொற்கு செவ்விய தொடை எனப் பொருள் கோடலே தகும். ஆனால் செம்மையாக இல்லாத ஒன் றிற்குச் செந்தொடை என்று பெயர் ஈந்த இலக்கண ஆசிரியர் களின் உள்நோக்கம் என்னவோ? நஞ்சுடைய பாம்பை நல்ல பாம்பு என்று அடை கொடுத்து அழைப்பது போன்றே செம்மை இல்லாத தொடையைச் 'செந்தொடை' என்று அழைத்தனர் போலும்! இச் செந்தொடைக்குக் காரிகையிலே காட்டப்படும் மேற்கோள் பாடல் இதுதான்:

''பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே''.

இப்பாட்டைப் பாடிய புலவன் பெயரோ, பாடல் உள்ள நூலின் பெயரோ, பாடப்பட்ட காலமோ தெரியக் கூடவில்லை. யாரோ பெயர் தெரியாத புலவன், எங்கேயோ, எப்பொழுதோ பாடி வைத்துவிட்டுச் சென்ற பாடல், கால வெள்ளத்திற்கும், கடல்கோளுக்கும் இரையாகாமல் நமக்கு இன்று கிடைத்திருப்பது தமிழர்கள் செய்த பெருந்தவப் பயனேயாம்.

பாடல், தலைவியின் கூற்ருக அமைந்திருக்கிறது. தலைவி தலைவனேடு கொண்ட கூட்டத்திற்குப் பின், தோழியின் பால் மகிழ்ந்து கூறியது எனக் கொளினும் அமையும். அங்ஙனமாயின் 'நன்னுதற் கொடிச்சி' என்பதை விளியாகக் கொள்ளல் வேண்டும். இன்றேல் பாட்டைப் புலவனின் கூற்ருகவே கொண்டு பொருள் கொண்டாலும் பிழை இல்லை எனினும் முன்னதே சிறப்புடையது. இவ்வாறு பொருள் கொள்ள இடந்தருவன வேங்கை, மயில் முதலிய குறிஞ்சிக் கருப்பொருள்களே.

இப்பாட்டை வடித்துத்தந்த அப் புலவனுக்கு இயற்கையின் பால் உள்ள ஈடுபாட்டை முதற்கண் காண்போம். பூத்த வேங்கை வியன்சினை ஏறி மயிலினம அகவுவதைப் பாட்டிலே முதற்கண் படம் பிடித்துக் காட்டுகிருன் புலவன்.

மயில்கள் அகவுவது இயற்கையே. எனினும் அவை எப்பொழுதுமே அகவுவது இல்லை மகிழ்ச்சி மீக்கூர்ந்த காலத்தில் மட்டும்மே அகவும். வான்பரப்பில் முகில் கூட்டத்தைக் கண்ட காலத்து மயிலின் மனத்தில் மகிழ்ச்சி பிறக்கும். அப்பொழுது அது தன் முலை இள ஞாயிற்றின் இளவெயில் ஒத்த கோலப் பீலியை விரித்துக் கூத்தாடும். மயில்கள் கீழே நின்றும் அகவலாமே? வேங்கையின் கிளையின் மீது ஏறி நின்று அகவுவது ஏன்? புலவன் ''சினை ஏறி அகவும்'' என வாளா கூருது 'வியன் சினை ஏறி அகவும்'' என விரித்துரைத்தது ஏன்? 'வியன்' என்பதற்கு ''விசும்பு, பெருமை, வேறுபாடு, மிகுதி'' எனப் பல பொருள்கள் உண்டு. ஈண்டு இடன் நோக்கி வியன்சினை என்பதற்கு உச்சாணிக் கிளை எனப் பொருள் கோடல் வேண்டும். கீழே நின்று முகிலைக் கண்ட மயில்கள் அவாவின் காரணமாக வேங்கை மரத்தின் உச்சிக் கிளையிலே ஏறிநின்று அகவுகின்றனவாம் இங்ஙனம் புலவன் முகிலையும்,வானுறஓங்கி வளம்பெற வளர்ந்த வேங்கையையும் குறிப்பால் கூறுவதன் மூலம் தலைவனுடைய நாட்டுவளத்தைப் புலப்படுத்திச் செல்கிருன்.

''வேங்கை வியன்சினை'' என்று மட்டும் கூருது 'பூத்த வேங்கை' என அடைமொழி புணர்த்து உரைத்ததற்கும் உட்பொருள் உண்டு. வேங்கையின் அரும்புகள் மலர்ந்திருக்கின்றன. முதிர்ந்த அரும்புகள் முனையவிழ்ந்து தோன்றுதல்

கட்புலனைக் கதுவுவது மட்டும் அன்றி மனத்திலும் மகிழ்ச்சியை விளைவிக்கும். தலைவியின் அகமும் இந்த நிலையில் பொலிந்து திகழ்கிறது என்பது நாம் இதிலிருந்து பெறவேண்டிய கருத்தாகும். தலைவி தன் காதலனைப் பற்றிக் கூறும் பொழுது "மலர்ந்திருக்கும் வேங்கை மரத்தின் நெடிய கிளையில் ஏறிநின்று மயில் கூட்டம் அகவுகின்ற நாட்டையுடையவன்" என்று கூறுகிறாள். 'நாடன்' என்று கூறினால் மட்டும் போதாதாம்; அழகுக் காட்சியும், மகிழ்ச்சிக் கூச்சலும்நிறைந்திருக்கிற நாடு என்பதைத்தான் தலைவி சுற்றி வளைத்துக் கூறுகிறாள். அழகன்றோ இன்ப ஊற்று! "A thing ot Beauty is a joy for ever" என்று மேலைநாட்டுப் பாவலன் கீட்சு கூறியிருப்பதும் இங்குக கருதத்தக்கது எனவே, மகிழ்ச்சிக்கு நிலைக்களன் ஆகிய அழகை உடையது தலைவன் நாடு என்று கூறுகிறாள் அவள். "இத்தகைய பெருமையுடைய தலைவன் என்னுடைய நலன் கெடுவதையோ, மகிழ்ச்சி குறைவதையோ விரும்பமாட்டான்; தவறாது தண்ணளி புரிவான்" என்பதைச் சொல்லாமல் சொல்லுகிறாள் தலைவி அவளுக்குத் தலைவன்பால் இருந்த அசைக்கமுடியாத நம்பிக்கை அது.

மயில்கள் கொண்டலின் வரவு கண்டு ஆவல் மீக்கூர நிற்பது போலத் தலைவியும் தலைவனின் வரவு நோக்கி நிற்கிறாள். பாட்டு நம் மனக்கண்ணின்முன் படைத்துக் காட்டும் ஓவியம் இதுவே.'மயில்கள் முகிலைக்காண வேங்கையின் கிளையைப்பற்றுவது போல, என் வாழ்வில் இன்பத்தைக் காண அத்தலைவனின் தோளைத்தான் தொத்த வேண்டும்' என்கிறாள் தலைவி. 'வியன் சினை' என்ற சொல் 'தடந்தோள்' என்ற பொருளை நுண்ணிதிற் காட்டும் பெற்றியை உணர்க.

தலைவி தன் தோழியை நோக்கி 'நாடன் மனத்தகத்தோன்' என்று கூறுகிறாள். மனம் என்றோ அகம் என்றோ கூறாது மனத்தகத்தோன என இரட்டித்துக் கூறுகிறாள். மனம் எனினும் அகம் எனினும் ஒக்கும்; எனினும் தலைவி இங்ஙனம் அடுக்கிக் கூறுவதற்குக் காரணம் அவளது உள்ளக் கிளர்ச்சியே ஆகும். 'அகத்தோனே' என்பதில் உள்ள 'ஏ'காரம் அவளது இன்ப உணர்வையே எடுத்துக் காட்டுகிறது.

அடுத்து, தலைவி தன் தோழியை விளிக்கும் அழகை உன்னுக. 'நன்னுதலை உடைய கொடிச்சியே' என அழைக்கிறாள். நல்ல நுதல் என்பது ஒளி படைத்த நுதலையே குறிக்கும். மகளிர்க்கு நுதல் பசலை ஒழிந்து பொலிவுபெற்ற காலத்தே ஒண்மை உடையதாக இருக்கும். தொடுவுழி, தொடுவுழி நீங்கி விடுவுழி, விடுவுழிப் பரக்கும் தன்மை உடையது பசலை. பசலை ஒழிவது கூட்டத்தின் பின்னர் அன்றோ? இங்குக் கூட்டம் உண்மை தலைவிக்கே அன்றித் தோழிக்கன்று. அங்ஙனமாயின் தலைவி தோழியின் நுதலைச் சிறப்பித்துப் பேசுவது எப்படிப் பொருந்தும்?

தன்னைப் போலவே மற்றவர்களும் இருப்பதாகக் கருதுவது தான் மாந்தரின் இயல்பு. துன்பச் சூழலிலே சிக்கித் தவிக்கும் ஒருவனுக்கு இவ்வுலகமே இடும்பையின் கொள்கலனு கத் தோன்றும். அதுபோல மகிழ்ச்சியிலே திளைக்கும் ஒருவ னுக்கு எல்லா மக்களும் இன்பத்தில் மிதப்பதாகவே எண்ணம் தோன்றும். இஃது உளவியல் உண்மை எனவேதான் தலைவி தலைவனோடு கூடி நுதல் பொலிவுபெற்ற நிலையில் தன் தோழியும் நுதல் பொலிவு பெற்றிருப்பதாகக் கருதி விடுகிருள்; 'நன்னுதற் கொடிச்சி' என விளிக்கிருள்.

பாட்டு சிறிய பாட்டுதான் எனினும் இந்த மூன்றே வரி களில் பூத்திருக்கும் வேங்கையையும், அதன் நெடிய கிளைகளை யும், அதன்மீது மயில்களையும், அவை மகிழ்ச்சியால் அகவு வதையும், தலைவனோடுகூடி மகிழ்ந்த தலைவியையும், அவளு டைய பொலிவுபெற்ற நுதலையும், அவளின் தோழியையும் படம் பிடித்துக் காட்டுகின்ற புலவனின் திறம்தான் என்னே! என்னே!

பாடலில் மயிலினது அகவல் ஒலியும், தலைவியின் மகிழ்ச்சிக் குரலும் ஒன்றி ஒலிப்பதை உய்த்து உணர்க.

ஒற்று நீக்கி எண்ணிப் பார்த்தால் ஏறத்தாழ இருபத்தைந்தே எழுத்துகள் தாம். இங்ஙனம் சில்வகை எழுத்தில் பல்பொருள் விளக்கும் திறன் பாராட்டற் பாலதன்ரே?

பாடலிலே எதுகை இல்லை; மோனை இல்லை; இன்னபிற அழகு இல்லை. எனவே இது பாட்டு இல்லை என்று ஒதுக்கிவிட முடியுமா? இப்பாட்டிலே ஊடுருவித் திகழும் உணர்ச்சி பாட் டுக்கே உயிர் ஊட்டுகிறது அன்ரே?

பாட்டிலே அணிவகைகள் இல்லாதிருக்கலாம்; பாட்டில் வடிவம் இருக்கிறது. பாட்டிலே நுட்பமான ஒலிநயம் இருக் கிறது. அதற்குமேலாக நெஞ்சைத் தொடும் நீர்மையும் இருக் கிறது இதுவன்ரே பாட்டு!

பாட்டைப் பாடிய புலவனின் நோக்கம் தான் உணர்ந்த ஒன்றைப் பாட்டைப் படிப்பவர்களும் அதே அளவுக்கு உணர்ந்து போற்ற வேண்டும் என்பதுதான். அந்த நோக்கம் இப்பாட்டிலே முழுமையாக நிறைவேறி உள்ளது.

இதுகாறும் கூறியவாற்ருல் செந்தொடைக்கு மேற் கோளாகக் காட்டப்படும் இப்பாட்டு மிகச் சிறந்த அழகிய சொல்லோவியம் என்றும், செவ்விய தொடை அமைந்த பிற பாட்டுகளையும் விட இதுமிக அழகாக அமைந்துள்ளது என்றும், கற்கும்தோறும் நனியுவகை தரும் இத்தீஞ்சுவைப் பாடல் தமிழ் இலக்கியக் குவட்டில் மங்கா ஒளிகாலும் முழுமணியாம் என்றும் தெள்ளிதில் உணரலாம். *

முன் இதழ்த் தொடர்ச்சி.

மெய்யறிவியல்.

Philosophy.

கல்வி

ஆங்கிலத்தில்: விவேகானந்த அடிகள்.
தமிழில்: 'வழுதி'

கடமை என்றால் என்ன?

கடமை என்றால் என்னவென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும். கடமை, நாட்டுக்கு நாடு, மக்கட்கு மக்கள், காலத்துக்குக் காலம் வேறுபடுகின்றது. ''கடமை என்றால் இதுதான்'' என்று அறுதியிட்டுக்கூறமுடியாது. அதன் செயற்பாடுகளினின்றும், விளைவினின்றுமே ஓரளவுக்கு அதனைத் தெரிந்து கொள்ள முடியும். நம் கண்ணெதிரில் சில நிகழ்ச்சிகள் நிகழும்போது, அத் தொடர்பில் நாம் என்ன செய்தல் வேண்டும் என்று இயல்பாகவோ, பயிற்சியாலோ தெரிந்து கொண்டிருக்கின்றோம். இவ்வெழுச்சி தோன்றும்போது சூழ்நிலையையும் எண்ணுகின்றோம். இத்தகைய சூழலில் இப்படி நடந்து கொள்வதே நல்லதென்று சில வேளையும், அதே சூழலில் அவ்வாறு நடப்பது தீயதென்று வேறு சில வேளையும் கருதுகின்றோம். பொதுவாகக் கடமை என்பது ஒவ்வொரு நல்ல மாந்தனும் தன் மனச் சான்றின்படி நடப்பதேயாகும்.

ஆனால் ஒரு குறிப்பிட்ட செயலைக் ''கடமை'' ஆக்குவது எது? ஒரு கிறித்துவன் தன் முன் வைக்கப் பெற்றுள்ள மாட்டிறைச்சித் துண்டினைத் தன்னுயிர் காக்கவோ, தன் அயலானின் பசி போக்கவோ, பயன்படுத்தாமற் போனால் தான் கடமை தவறியதாகவே நினைக்கின்றான். அதே இறைச்சியை ஓர் இந்து சமயத்தான் தான் தின்னவோ, தன் நண்பனுக்குக் கொடுக்கவோ நேருமாயின் தன் கடமையினின்று வழுவியதாகக் கருதுகின்றான். ஒவ்வொருவனின் கல்வி முறையும் பழக்க வழக்கங்களுமே இதற்குக் கரணியம். நடுத் தெருவில் ஒரு மாந்தனைக் கொலை புரிந்தவன் பெருந்தவறு புரிந்ததாக எண்ணி வருந்துகின்றான் அதே மாந்தன் போர்க்களஞ் சென்று பகைவரைக் கொன்று குவிப்பானாயின் அது தன் தாயகத்துக்குச் செய்த கடமை என்று எண்ணி மகிழ்கின்றான். எனவே, ''கடமை'' என்பது செயலில் இல்லை என்றறிகின்றோம். ஆதலின், கடமைக்குப் புறநிலை விளக்கம் கூற முடியாது. அகநிலையினின்றே அதை உணர்தல் வேண்டும். நம்மை இறையை நோக்கி அழைத்துச் செல்லும் எச்செயலும் நற்செயலே; அதுவே நம்

கடமை.'' நம்மைக் கீழ் நோக்கி இழுப்பது தீச் செயல்; அது நம் கடமையன்று. சில செயல்கள் நம்மை உயர்த்தி நம் உணர்வைத் தூய்மை செய்கின்றன. சில செயல்கள் நம்மைத் தாழ்த்தி விலங்காக்குகின்றன. எல்லார்க்கும், எல்லாக் காலத்துக்கும் ஏற்றாற்போல், இவை இவை தூய உணர்வினைத் தூண்டுபவை, இவையிவை தீய உணர்வினைத் தூண்டுபவை என்று பிரித்தல் ஒல்லாது. ஆயினும் அனைத்துலகுக்கும், காலத்துக்கும், மாந்தர்க்கும் பொருந்துமாறு, கடமையைப் பற்றிய கருத்தொன்றுள்ளது. அஃது,

''எவ்வுயிர்க்கும் ஊறு செய்யற்க. எவ்வுயிர்க்கும் ஊறு செய்யாமையே நல்லியல்பு (Virtue). ஊறு செய்வது கரிசு (sin) என்பதாம்.

பிறப்பும் குமுக நிலையுமே நம் மனப் போக்கினை உருவாக்குவன. ஆதலின் நம் நிலைக்குமேல் நம்மை உயர்த்தும் செயல்களே கடமைகளாம். ஆனால், அனைத்துலகுக்கும் இதுதான் கடமை என்று எண்ணிவிடல் கூடாது. இதை அறியாததாலேயே உலக நாடுகளிடை புரிந்து கொள்ளாமை நிலவுகின்றது. ஓர் அமெரிக்கன் தன்னாட்டுப் பழக்க வழக்கங்கட்கியையத் தான் செய்வதே உலகிற் சிறந்த செயல் என்றும், தன்னை அடியொற்றி நடவாதவன் தீயவன் என்றும் கருதுகின்றான். அது போன்றே ஓர் இந்தியனும் நினைக்கின்றான். இது மாந்த இயற்கையே என்றாலும் தீங்கு தருவதாகும்.

ஆதலின் பிறர் கடமையை அவர் கண்கொண்டே நாம் நோக்குதல் வேண்டும்; நம் நிலை கொண்டு அளத்தல் கூடாது. நான் இவ்வுலகத்தின் பொது உரைகல் அல்லன். நானே உலகத்தோடொட்ட ஒழுகல் வேண்டும். உலகம் என்னோடன்று. ஆதலின் முதலில் நம் பிறப்புக்கும், பின் நம் குமுக நிலைக்கும் ஏற்ற கடமைகளை ஆற்றியமைவதே நமக்கேற்றதாகும்; எனினும் ஒரு பேரிடர் இங்குண்டு. மாந்தன் தன்னைத்தானே ஆய்ந்து பார்த்துக் கொள்கின்றானில்லை. அரசனைப் போன்று தானும் அரியணை ஏறத் தகுதியுடையவனே என்று தருக்குகின்றான். அத்தகுதி அவனுக்கிருப்பினும் முதலில் அவன் தனக்குரிய கடமைகளைச் செய்தாகல் வேண்டுமே! பின்னன்றோ வேறுபெருங் கடமைகள் அவனை வந்தடையும். நாம் உலகில் உண்மையாக நம் பணியினை ஆற்றப்புகின் இயற்கை நம்மைத் தட்டியும், கொட்டியும் நம் தகுதிக் கேற்ற உண்மை நிலைக்கு நம்மை அழைத்து வந்து விடுகின்றது. எம் மாந்தனும் தனக்குத் தகுதியில்லா ஒன்றில் நெடுநாள் நிலைத்திருக்க முடியாது. இயற்கை மேற் பழியிட்டு முணுமுணுப்பதிற் பயனில்லை. ஆதலின் தாழ்ந்த பணி புரிபவன் தாழ்ந்தவன் அல்லன், 'கடமையின் தன்மையில்

இருந்து ஒரு மாந்தனை அளத்தல் கூடாது. அக் கடமையினை ஆற்ற அவன் கொள்ளும் முறைமையும் ஆர்வமுமே அளவு கோலாம்.

பின்னுற் செல்லச்செல்ல, கடமையைப்பற்றிய இக்கருத்தும் மாறுபடக் காண்கின்றோம். தன்னல நோக்கம் யாதொன்றாலும் தூண்டப் பெறுமற் செய்யப்படுவதே பணிகளுட் பெரும்பணி யாம்; ஆயினும் கடமை யுணர்வோடு ஆற்றும் பணியே கடமை பற்றிய எண்ணங்களைக் கடந்த பெரும்பணிக்கு நம்மை அழைத்துச் செல்கின்றது. பணி, வழிபாடாக – அன்று, அதனினும் உயர்ந்த தொன்றாக மாறும் போதுதான், பணி பணிக்காகவே என்ற நிலை பிறக்கின்றது.

அறநெறி வடிவிலாயினும் சரி, அன்பு வடிவிலாயினும் சரி, கடமையும் ஒருவகை மனமுனைப்பே (யோகமே)! இம் மனமுனைப்பு தாழ்ந்த உயிரை (lower self) மேல் உயர்த்தி, உள்ளிருக்கும் உயர்ந்த உயிரை (higher self) ஒளிரச் செய்கின்றது. தாழ்நிலை வாழ்க்கையின் பூசல்களில் ஆற்றல்கள் சிதறடிக்கப் பட்டு விடாமற் காத்து உயிர் வாழ்க்கையிற் புலம்பனை (soul) ஊக்குவிக்கின்றது. இம் மனமுனைப்பு நிறைவை எய்தல் வேண்டுமெனின் தாழ்ந்த வேட்கைகளை இடையறுதெதிர்த் தொழித்தல் வேண்டும். குமுகாயம் வளர்ச்சியடைந்திருப்பதெல்லாம் தன்னலத்தைக் கட்டுப்படுத்தி, மாந்தனின் உண்மையியல்பு எல்லையற்று விரிவடைதற்கு வழியைத் திறக்கும் பெருஞ் செயல்களாலே தாம்.

கடமை இனிதாக இருப்பதில்லை. அதன் உருளைகட்கு அன்பென்னும் நெய் ஊட்டுகையில் தான் அஃது இனிதாக இயங்குகின்றது. இன்றேல் இடையறுத சிக்கல்தான். அன்பின் றேல் பெற்றோரும் பிள்ளைகளும், கணவரும், மனைவியரும், தங்கட்குள் கடமைகளைச் செய்து கொள்வ தெவ்வாறு? நம் அன்றாடக் கடமைகளில் நாம் சிக்கலைக் கண்டதில்லையா? கடமையை இனிதாக்குவது அன்பே. அன்பு, விடுதலை ஒன்றிலேயே சுடர்கின்றது. ஆயினும் புலன்கட்கும், சினத்துக்கும், பொறாமைக்கும் இன்னும் பலவிதச் சிற்றுணர்வுகட்கும் அடிமைப் பட்டிருப்பது எப்படி விடுதலையாகும்? இவற்றினின்று விடுதலை பெறுவது, இவற்றையெல்லாம் தாங்கிக் கொள்வது இதுவே மெய்யான விடுதலை உணர்வு. சிடு சிடுப்புக்கும், எரிச்சலுக்கும் அடிமையான பெண்கள் தங்கள் கணவன்மாரைக் குறைகூறித் தங்கள் விடுதலையை நிலைநாட்டுகின்றனர். அவ்வாறு செய்வது தாங்கள் அடிமைகளாயிருப்பதையே காட்டுகின்றது என்றறிகிலர். அதுபோலவே இடைவிடாது மனைவியரைக் குறை காணும் கணவன்மாரும் அது தங்கள் உரிமையின் விளைவன்று, அடிமைத் தன்மையின் விளைவே என்று உணர்வதில்லை. (தொடரும்)

தமிழ் மகள் வருந்தும்

(புதுவை சுப்பிரமணியன்)

(கடலொடு வரவு கேட்டல்)

இந்தி யெனுமொரு கூத்தாட் டிழிமகட் சாவெடுக்க
முந்திப் பகலெழு முந்திப் பிரிந்தவ ரென்றலைவர்
அந்திக் குறுமகள் அல்லுக் கரியணை யாக்குமுனம்
வந்திப் பொழுதெனை வாரி யணைவரோ வார்கடலே!

புலைக்கை யொடுமயக் கூட்டிடும் இந்திப் புலைச்சியினை
முலைக்கை யறுத்துடன் மூக்கறுத் தன்னவள் மூங்கையெனும்
நிலைக்கைக் கொடுத்தென் றலைவர் இதற்குளே மீளுவரோ
அலைக்கை இணைத்தெப் பொழுதும் அரற்றிடும் ஆழ்கடலே!

பாவியல் தேராது பண்பாடும் இந்திப் பரத்தையினைச்
சாவியல் காட்டத் தமரொடுஞ் சென்ற தலைவரெனத்
தாவிய ணைந்தென் உடல்சாய் முனம்வந் தணைகுவரோ
தாவிய லைச்சிறு பெண்டிரோ டாடுந் தடங்கடலே!

ஆளுக் கொருமொழி பேசிடும் இந்தி அணங்கவளின்
தாளுக் கடிபணி தாழ்மை தமிழ்மகட் காவதெனில்
வாளுக் கிரையவள் வாழ்வென் றகன்ற தலைவரிது
நாளுக் கிறுதி வருமுன் வருமோ நளிர்கடலே!

பற்பல கோலப் பகட்டினோர் காட்டிப் பயன்கெடுவார்
கற்பல தாண்டிக் கடைவிரித் தாளிக் கடையவளாம்
சொற்பல தேரச் சிறுக்கியிவ் விந்தியின் சீரழித்து
நற்பல ரோடென் றலைவரின் னேமீள்வ ரோ, கடலே!

ஆட்சி வலியான் அடிபெயர்த் தெம்மிடை ஆடவரும்
காட்சி அழகிலா இந்திக் கணிகையின் காலொடிக்க
மாட்சி மிகுமென் றலைவ ரகன்றுர் மறிகடலே
மீட்சி யவர்க்குள தோவிண் ணின்மீன் ளெழுமுனமே!

நூலறி வில்லாது நுட்பந் தெரிக்க நுழையுமிந்தி
வாலறி வுள்ளவள் போல்நடித் தாளவள் வாய்கிழித்தே
ஏலறி ஆட்ட எழுந்தார் தலைவர் திரும்பினரோ
சேலறி யாதெழுந் தாடும் பனிநீர்த் திரைகடலே!

பண்டோ தியசீர் இலைஅணி ஒன்றில இல்லைஒலி
கண்டோ எனும்படி! மற்றெதற் கிந்தியிங் குற்றதென
திண்டோ ளுயர்த்துப் பிரிந்தார் தலைவர் திரும்பினரோ
நண்டோ டுவலை அழிக்கும் மகிழ்வால் நகுங்கடலே!

தமிழில் எழுத்துச் சீர்திருத்தம்.

"மன்றவாணன்"

மக்களின் பேச்சு வழக்கில் உள்ள மொழிகள் அனைத்தும் பண்பட்ட மொழிகள் எனப்படா. இலக்கிய வளமும் இலக்கண நெறியும் கொண்ட மொழியே பண்பட்ட மொழியாகும். பண்பட்ட மொழிகளில் தமிழும் ஒன்று என்பதை மறுப்பார் வெறுப்பிற் குரியாரே ஆவர்.

தமிழ் மொழியின் தோற்றம் கால எல்லையைக் கடந்தது. தமிழ் மொழி காலத்தாலும் சூழ்நிலையாலும் இன்றியமையாமையாலும் எத்தனையோ மாறுபாடுகளைப் பெற்றே இன்றைய வடிவில் காட்சி தருகின்றது.

பண்டைத் தமிழ் இலக்கணமாய தொல்காப்பியம் கூறும் தமிழ் நெடுங்கணக்கு வரிவடிவிற்கு இடைக்கால நன்னூல் கூறும் வரி வடிவு வேறுபட்டுள்ளது; (குற்றியலுகரம் புள்ளி பெறும் என்பது தொல்காப்பியம்). நன்னூலை நோக்க, இன்றையத் தமிழ் நெடுங் கணக்கு வரிவடிவில் வேறுபட்டுள்ளது. (எ, ஒ, புள்ளி பெறும் என்பது நன்னூல்). இதனுல் நம்மால் அறிய முடிவ தொன்றுண்டு. அது 'தமிழ் நெடுங் கணக்கு வரிவடிவம் என்றும் நின்ற நெறியிலேயே நிலவவில்லை' என்பது; ஆகவே, காலச் சூழலுக்கும் வாழ்வியல் நெறி முறைகளுக்கும் பயிற்சி முறைகளுக்கும் ஏற்ப அவ்வப்பொழுது மாறுதல்கள் ஏற்படுதல் இயல்பே என்றறியலாம்.

இன்றைய நிலையில் இடர்ப்பாட்டிற்குரிய நெடுங்கணக்கு வரி வடிவம் (சில) மாற்றியமைக்கப்பட வேண்டுவதா? அன்று? 'தமிழில் எழுத்துச் சீர்திருத்தம் இன்றியமையாதது' என்று வற்புறுத்துவோர் பலர் துணிந்து தம் ஏடுகளில் அவர்தம் சீர்திருத்த எழுத்துகளைப் பயன் படுத்துவோர் சிலர். 'மொழிச் சீர்திருத்தம் போல எழுத்துச் சீர்திருத்தமும் எவ்வகையிலும் வேண்டப்படாதது' என்று உரைப்போரும் உளர்.

அரசினர் தீட்டிய ஆணைக் குயிலை அடகுவைத்தே
அரசினச் செந்தமிழ் நாடுறும் இந்தி அழகழிக்க
உரசின மோடுமை யாரொடும் போகிய வென்றலைவர்
முரசின ராகி முடுகி வருவரோ மாக்கடலே!

ஆட்படை ஒன்றையே நம்பியிவ் விந்தி அறிவிழந்து
நாட்படை ஆகிய நாற்படை தோற்று நலமிழந்தாள்;
வாட்படை காட்டி வருதுமென் றேபிரிந் தார்தலைவர்
தோட்படை மேவத் துடித்து வருவரோ தோய்கடலே! *

கார்த்திகைத் திங்கள் ''தென்மொழி'' இதழில் 'மொழிச் சீர்திருத்தம்' என்னும் தலைப்பில் திருவாளர் புலவர் வி. பொ. பழனிவேலன் பி. ஓ. எல். அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந் தார். அவர்தம் கட்டுரையின் பெரும் பகுதி வரவேற்க வேண்டு வதே. ஆயினும் 'எழுத்துச் சீர்திருத்தம் வேண்டப்படுவதன்று' என்பதற்கு அவர் கூறும் கருத்துகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வையா? என்பதை நோக்க முற்படுவதே இக்கட்டுரையின் உட் கோள். அவர் கருத்துகளுள் ஒன்று, ''சில செய்தித் தாள்கள் எழுதுவதுபோல எல்லா உயிர் மெய்யெழுத்துகட்கும் ஒரே வகை யான முன்னொட்டு பின்னொட்டுகளைச் சேர்த்து எழுதலாம். எடுத்துக் காட்டு: 'னை, ணை, லை, ளை' இவைகளை 'னை, ணை லை, ளை' என்றும் 'ணு, ரு, று என்பவற்றை 'ணா, றா, னா, என்றும் எழுதலாம். இத்திருத்தம் அச்சுக் கோப்புக்கு எளிதா யிருக்குமேயன்றிக் கையால் எழுதுவதற்கு எளிதென்றல் இய லாது. வேறுபாடறிவதில் குழப்பமுண்டாகும்.'' என்பது.

'அச்சுக் கோப்புக்கு எளிதாகும் சீர்திருத்த எழுத்துகள் கையால் எழுதுவதற்கு எளிதாகா' என்பது எழுத்தாணிக் காலத் தையே நினைவூட்டுகிறது. அன்றியும் 'ஈ, ஐ, ஔ. நௌ, ஞௌ' போன்ற எழுத்துகளை எழுதிப் பழகி எளிதாக்கிக் கொண்ட நமக்கு ஒரே வகையான முன்னொட்டு பின்னொட்டுகளைப் பெற்று முறையான மாற்றத்திற்குள்ளாகும் எழுத்துகள் மட்டும் இடர்ப் பாட்டைத் தருமா? பழமையைப் பற்றிக் கிடப்பதே பெருமை என்ற எண்ணத்தில் இங்ஙனம் கூறுதல் பயனற்றதே யாகும்.

கலைச் சொல்லாக்கப் புலவர் உயர்திரு கீ. இராமலிங்கனார் அவர்கள் கோவையில் தமிழாசிரியர் மாநாட்டிலாற்றிய சொற் பொழிவில் ''சில காலமாக வழக்குக்குக் கொண்டு வந்துள்ள ஆங்கிலச் சொற்கள் எளிதாயிருக்கின்றன; எல்லாருக்கும் புரி யும் என்ற தப்பான கருத்துகளை வைத்துக் கொண்டு அவற்றை அப்படியே நிலை நிறுத்திக் கொள்ள எண்ணுமல் விரைவிலே அவற்றைக் கைவிட முயற்சி செய்ய வேண்டுகிறேன்'' என்று பேசியுள்ளார்.

அவர் இங்ஙனம் கூறக் கரணியந்தான் யாது? ஆங்கிலக் காதலால் பேதுற்றுத் தமிழின் தூய்மையைக் கெடுத்து விடல் கூடாது. ஆங்கிலச் சொற்களுக்கேற்ற பொருள் விளக்கச் சொற்கள் தமிழில் இல்லாமல் இல்லை, என்பவற்றை வலியுறுத்த வன்றோ அங்ஙனம் கூறினுர்.

இக்கருத்தை அடிப்படையாகவைத்து நோக்குவோமாயின், எளிமையாக உள்ளது என்பதற்காக ஆங்கிலத்தைத் தமிழோடு நாம் பயன்படுத்தல் எங்ஙனம் சாலாததோ, அதேபோல்

எளிதாக இராது என்பதற்காகத் தமிழ் எழுத்துகளின் வரி வடிவை மாற்ற வேண்டாமென்பதும் சாலாததே.

'வேறுபாடறிவதில் குழப்பமுண்டாகும்' என்பது கட்டுரை யாளரைப் பொறுத்தவரை எப்படியோ? குழப்ப வேண்டிய எழுத்துகளிலெல்லாம் குழம்பாத தமிழர் ஒழுங்கான எழுத்துச் சீர்திருத்தங் கண்டு குழம்ப வேண்டுவதேன்?

சீர்திருத்திய எழுத்துகளாக அவரால் காட்டப்பட்டவை 'ணை, னை, லை, ளை, ணா, னா, றா' என்பன. இவ்வெழுத்து களைக் கையால் எழுதிக் காணுங்கால் குழப்ப மேற்படும் போலும்? அங்ஙனமாயின் 'ளை'வை 'னை' ஆகவோ 'ளை'வை 'னை' ஆகவோ கொண்டு குழம்ப மாட்டோமா? 'ஔவியம்' என்பதனை 'ஒ-ள-வி-ய-ம்' என்று தவறுபடப் படிக்கமாட்டோமா? ஏன் படிப்பதில்லை? பயிற்சிதானே கரணி யம்? பயிற்சிக்கு வந்தால் சீர்திருத்திய எழுத்தமைந்த சொற் களையும் குழம்பாமல் படிக்க இயலாதா?

மேற்காட்டிய சீர்திருத்திய எழுத்துகள் வேறொன்றினது போன்ற வடிவொப்புமையைக் கொண்டிருந்தாலாவது குழப்ப மேற்படுவதற்கு வாய்ப்புண்டு. அவ்வகையிலும் வேறெந்த எழுத்தோடும் ஒற்றுமை கொண்டனவாக இல்லையே?

இனி, தமிழ் எழுத்துகளின் அமைப்பு முறையில் தடுமாற்றத் திற் குரியனவாக இருப்பவை பற்றியும் அவற்றைச் சீர்திருத்தி அமைக்க வேண்டிய முறை பற்றியும் நோக்குவோம்.

மெய்யெழுத்துகள் பதினெட்டும் 'அ, இ, ஈ, எ, ஏ, ஔ' என்னும் உயிர்களோடு சேர்ந்து உயிர் மெய்யாகும்போது ஒரே வகையான முன்னொட்டையோ, பின்னொட்டையோ, இரண் டையுமோ கொண்டு காணப்படுகின்றன. எடுத்துக் காட்டு: 'க்' என்ற மெய் 'அ' வோடு சேர்ந்து புள்ளியை இழந்து 'க' என்ற உயிர் மெய் ஆதல் போலவே ஏனைய மெய்களும் 'அ' வோடு சேர்ந்து புள்ளிகளை இழக்கின்றன. பதினெட்டு மெய் களும் 'இ' ஓடு சேர்ந்தால் மேல் வளைவையும் (ங் + இ = ஙி) 'ஈ' யோடு சேர்ந்து புணர்ந்தால் சுழிக்கப்பெற்ற மேல் வளைவை யும் (ச் + ஈ = சீ) 'எ' வொடு முன்பக்க வளைவையும் (ஞ் + எ = ஞெ) 'ஏ' வோடு முன்பக்க வளைவு சுழிக்கப் பெற்றும் (ட் + ஏ = டே) 'ஔ' வோடு முன்னால் வளைவும் பின்னால் 'ள'போன்ற வடிவும் (ண் + ஔ = ணௌ) பெறுகின்றன. காட்டிற்காக வகைக்கு ஒவ்வொன்று காட்டப் பெற்றது. ஏனையவற்றைத் தமிழ் நெடுங்கணக்கிற் காண்க.

'ஆ, ஒ, ஓ' என்னும் உயிர்களோடு சேரும் மெய்களில் 'ன், ற், ண்' என்பவை நீங்கிய மற்றைய மெய்கள் முன்னர் கூறியது போன்றே ஒரே வகையான பின்னொட்டு, முன்பின் ஒட்டுகளைப் பெற்று உயிர் மெய்களாகின்றன (த்+ஆ=தா, ந்+ஒ=நொ, ப்+ஓ=போ); 'ன், ற், ண்' என்பன வேறுபட்ட வடிவைப் பெறுகின்றன (ன்+ஆ=னா, ன்+ஒ=னொ, ன்+ஓ=னோ, ற்+ஆ=றா, ற்+ஒ=றொ, ற்+ஓ=றோ—ண்+ஆ=ணா, ண்+ஒ=ணொ, ண்+ஓ=ணோ)

'ஐ'யோடு சேரும் மெய்களில் 'ல், ள் ன், ண்' என்பவை நீங்கிய மற்றைய மெய்கள் முன்னொட்டைப் பெற்று உயிர் மெய்கள் ஆகின்றன (ப்+ஐ=பை). 'ல், ள், ன், ண்' என்பன வேறுபட்ட வடிவைப் பெறுகின்றன (ல்+ஐ=லை, ள்+ஐ=ளை, ன்+ஐ=னை, ண்+ஐ=ணை)

இன்னும் 'உ, ஊ' வோடு சேரும் மெய்களோ பல்வகை வடிவுகளைப் பெறுகின்றன. அவற்றை வகைப்படுத்த முயன்றால் 'உ' வோடு சேரும் மெய்களை மூவகையாகவும், 'ஊ' வோடு சேர்வனவற்றை ஐவகையாகவும் வேறுபடுத்திக் காணலாம். (க்+உ=கு, ங்+உ=ஙு, ஞ்+உ=ஞு; ட்+ஊ=டூ, ப்+ஊ=பூ, ண்+ஊ=ணூ, க்+ஊ=கூ, க்+ஊ=கூ). இங்கு இன்னொன்றையும் அறிய வேண்டுவது இன்றியமையாததாகும். 'உ' வோடு சேரும் மெய்களை மூவகையாகக் காணும் நாம் அவற்றின் நெடிலெழுத்துகள் எல்லாமே குறிலின் திரிபாக அமையவில்லை என்பதை அறியலாம். 'டு' வைப்போல் வடிவுடைய 'கு' நெடிலாகுங்கால் 'டூ' போல் திரியாமல் (கூ) வேறு வகையாகத் திரிகிறது. அதுவேபோல் 'ஙு' போன்ற 'சு' நெடிலாயின் 'ஙூ' போல் ஆவதில்லை (சூ).

மேலும், 'ல், ள்' என்பன 'ஐ'யோடு சேரும்பொழுது 'லை, ளை' என்ற ஒத்தவடிவைப் பெறுகின்றன. ஆனால் 'உ' வோடு சேரும் போழ்து 'லு' ஒரு வலகயாகவும் 'ளு' மற்றொரு வகையாகவும் அமைகின்றன.

உயிர் மெய் இருநூற்றுப் பதிறைனுள் பேரிடர்ப்பாட்டை விளைப்பன நாற்பத்தொன்பது எழுத்துகளே. இவ்விடர்ப்பாடு இன்றுபோல் என்றும் இருக்க வேண்டுவதுதானா? பெரும் பான்மையான எழுத்துகள் ஒரேவகையான ஒட்டுகளைப் பெற்று விளங்கும்போது இச்சிறு பான்மையான எழுத்துகளைச் சீர்திருத்தி மேலும் தமிழ் மொழியைச் சிறக்கச் செய்தலில் தவறென்ன? நாற்பத்தொன்பதில் 'உ, ஊ' வோடு சேர்ந்த உயிர் மெய் நீங்கிய பதின்மூன்றினை மற்றவற்றோடு பொருத்திச் சீர் திருத்துதல் எளிதினும் எளிது. 'கு' முதல் 'னூ' ஈருக வுள்ள

உயிர்மெய்களை ஒரே வகையாக மாற்றியமைக்க வேண்டுவதே ஆய்ந்து செய்ய வேண்டிய முடிவு.

பதின் மூன்று எழுத்துகளான 'ணு,ரு,று,ணை,லை,ளை,னை, ணொ,றொ,னொ,ணோ,றோ,னோ' என்பனவற்றை மாற்றியமைக்கு முறையைக் காண்போம். 'கா, ஙா' போல 'ணா,றா, னா' என்றும் 'கை, ஙை' போன்று 'ணை, லை, ளை, னை' என்றும் 'டொ, தொ' போல 'ணொ றொ, னொ' என்றும் 'போ, மோ' போன்று 'ணோ, றோ, னோ' என்றும் சீர்திருத்திக் கொள்ள லாம். இம்மாற்றத்தால் எத்தகைய இடர்ப்பாடும் உண்டாகாது. (குத்தூசி, விடுதலை முதலியவற்றைப் படிப்பதில் இடர்ப்பாடு எதுவும் நேர்வதில்லை).

இனி உயிர் எழுத்துகள் பற்றிய சீர்திருத்தத்தில், ''சில ஏடு கள் 'ஐ' எழுத்தைப் பயன் படுத்த வேண்டிய இடத்தில் 'அய்' என்ற எழுத்துகளை இட்டு எழுதுகின்றன இஃது ஒலி வடிவுக் குப் பொருந்துமேயன்றி வரிவடிவத்திற்கு ஒவ்வாது'' என்பார் கட்டுரையாளர்.

எழுத்துகளின் வரிவடிவங்கள் புறத்தார்க்குப் புலனாகத் தானே மேற்கொள்ளப் படுகின்றன? ஒலி வடிவில் 'ஐ' தனி யொலியிலா பிறக்கிறது? 'அ + ய்' என்ற கூட்டொலியில் பிறப் பது தானே 'ஐ'? எப்படி ஒலிக்கின்றோமோ அப்படியே எழுது தல் தமிழ் மொழியின் தனிச்சிறப்பாயிற்றே?

'ஐ'யை 'அய்' என எழுதுதல் போலியே. போலி எழுத்தைப் புலவர் பெருமக்கள் வெறுத்துப் புறங்காட்டி நிறுத்தி விட்டனரா? அதையுந்தானே இலக்கியங்களின் அழகிலக் கணங்களில் ஒன்றாக மேற்கொண்டுள்ளனர். (களம்–களன்– பந்தல்–பந்தர்) இலக்கண நூல்களும் போலிகளை வேலியிட்டுக் காக்கத் தவறவில்லையே?

'ஐ' என்பது ஓரெழுத் தொருமொழி என்பதால் 'அய்' என் பது ஈரெழுத்து மொழி என்பது கட்டுரையாளரின் எண்ணம் போலும்.

உயிர் நெட்டெழுத்துகளெல்லாம் ஓரெழுத்தொரு மொழி என்பது தமிழ் ஆய்ந்தோர் முடிவு. அவற்றுள் 'ஊ, ஔ' என் பனவற்றை 'உ'வின் மேல் 'ள'வை எழுதியும் 'ஒ'வை அடுத்து 'ள'வை எழுதியும் ஓரெழுத் தொரு மொழியாகக் கொள்ளும் போழ்து 'அ' வை எடுத்து 'ய்'யை எழுதி ஓரெழுத்தொரு மொழியாகக் கொள்ளுதலில் உண்டாம் இழுக்குத்தான் என்னே?

'ஐ'யின் வடிவத்தை 'அய்' என மாற்றி எழுதி ஓரெழுத்தொரு மொழி பலபொருளொரு சொல், வேற்றுமை உருபில் ஒன்று, அசை, இடைச்சொல் என்றெல்லாம் தகுதியளிப்பதால் அழுங்கி விடாது மொழி. மாருக, பொலிவு பெறும் என்பது உறுதி.

மேற் கூறிய வாறெல்லாம் தமிழ் எழுத்துகளைச் சீர்திருத்த வேண்டுவதன் நோக்கந்தான் யாது?

தமிழ் தொன்மையும் தூய்மையும் வாய்ந்தது; வளமையும் வான்மையும் கொண்டது; இனிமையும் தனிமையும் பெற்றது; இளமை மாருதது; இறைமை குறையாதது; கடலினும் பெரியது; கற்பார்க்கு எளியது; என்றெல்லாம் தமிழறிந்த நாம் சொல்லிக் கொள்வதால் விளையும் பயன்தான் என்ன? நம்மையே நாம் மகிழ்வித்துக் கொள்கிறோம்; பெருமைப் படுத்திக் கொள்கிறோம்; அம்மட்டே. வேற்றுநாட்டாரையும் விரும்பிக் கற்கச் செய்ய எளிமையும் ஒருமைப்பாடும் பெற வேண்டாமா? கால மாறுபாட்டிற்கும் நல் வாய்ப்பாக அமைதல் வேண்டாமா? இன்றுள்ள தமிழ் தட்டெழுத்துப் பொறிகள் தடுக்கி விழுந்தது போன்றல்லவா தமிழை அடிக்கிறது? அச்சுக்கோப்பில் உண்டாம் உலைவு அளவிடற்குரியதா? இத்தனையும் நீங்கப்பெற்று தமிழ் சிறக்கக் கூடாதா?

இன்று இந்நாட்டில் தமிழுக்குத் தொண்டாற்றுவதாகக்கூறி மொழியை விலைபேசி வாழ்வோர், வளர்வோர் எத்தனையோ பெயர்? அவர்கள் வேண்டுமாயின் முன்வரத் தயங்கலாம். தமிழால் பிணிப்புண்டு, அதில் தோய்ந்து, அதற்காகவே தான் அழிந்த, தளர்வுற்ற தமிழ்ப் பெரியார்களாயினும் எழுத்துச் சீர்திருத்தப் பணியை எடுத்தியற்றித் தமிழ்த் தாயை மகிழ்விக்கலாகாதா?

உறுப்பினர்கட்கு

தென்மொழி அனுப்பப் பெறுகின்ற சுற்றுத்தாளின் முக வரிக்கு மேல் குறிப்பிடப் பெற்றிருக்கும் எண்களே அவரவர் உறுப்பினர் எண்கள். அவற்றுள் பு. உ. எண் 1 முதல் 243 வரை உள்ள அன்பர்கள் எல்லார்க்கும், 12-ஆம் ஓலை (தை மாத இதழ்) முடிய உறுப்பினர் கட்டணம் முடிவுறுவதால், மேற்கொண்டு தென்மொழி தொடர்ந்து விரும்புவார் இம்மாதத்திற்குள் அனுப்பிக் கையொப்பத்தைப் புதுப்பித்துக் கொள்ள அவ் வெண்களுக்குரியாரை வேண்டிக்கொள்கின்றோம்.

— அமைச்சர்.

மக்கள்.

கார்த்திகை இதழ்த் தொடர்ச்சி.

சப்பானியரின் வியத்தகு பழக்கங்கள்.

○ புகை வண்டித் தொடரின் மேலாண்மை (Management) சப்பான் நாட்டில் நடைபெறுவதுபோல் உலகில் வேறு எந்த நாட்டிலும் நடைபெறுவதில்லை. புகைவண்டிகள் ஓரிரு நொடிப்பொழுது கூடக் காலந்தாழ்ந்து வருவது இல்லை. ஒவ்வொரு நிலையத்திலும் 1 முதல் 3 நிமையங்களே (Minutes) வண்டிகள் நிற்கின்றன. இருப்புப் பாதைக்கு இருபுறங்களிலும் பலவகையான இயற்கைக் காட்சிகளை அமைத்திருக்கின்றனர். நெடுந் தொலைவு செல்லும் நாடுகாணிகள் சலிப்புறுத வண்ணம் அக்காட்சிகள் கண்ணுக்கும் கருத்துக்கும் நிறைவளிக்கின்றன. நிலயத்திற்கு வந்து சேரும் பொழுதும், நிலயத்தை விட்டுப் புறப்படும் பொழுதும் வண்டிகள் மிகவும் மெதுவாக நகர்கின்றன. வ ண் டி க ளி ன் போக்கிலும் அலுவலர்களின் நடக்கையிலும் முரட்டுத் தனத்தைப் பார்க்கவே இயலாது. எவ்வகையான அச்சமுமின்றிப் பயணிகள் தொடர் வண்டிகளில் பயணஞ் செய்யலாம். எல்லா வண்டிகளிலும் தூய்மை கண்டிப்பாகக் கையாளப் பெறுகின்றது. மக்கட்கு வேண்டிய எல்லா வகையான தேவைகளும் புகைவண்டிகளில் உண்டு. வண்டிகளில் இடம் இல்லாத காரணத்தால் நிற்கவேண்டிய நிலை ஒருவர்க்குக்கூட ஏற்படுவதில்லை. வண்டிகளில் உள்ள ஒரு சிறு அறிவிப்பையும் மக்கள் மதித்து நடக்கின்றனர். எவரும் முன்னதாகவே எவ்வகைக் கட்டணமுமின்றி வண்டிகளில் இட ஒதுக்கீடு (Reservation) செய்து கொள்ளலாம். மூன்றும் வகுப்புப் பெட்டிகளில் கூட உட்காரும் பலகைகளில் பட்டு மெத்தைகள் தைக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பயணிகள் தங்கள் உடைமைகள் போல் பேணுகின்றனர். பண்டந் தூக்குவார் (Porters) யாவரும் நேர்மையான கூலியையே அன்புடன் பெறுகின்றனர். இரண்டு மணி நேரத்திற்கு ஒருமுறை வண்டிகளின் தரைப் பலகைகள் முழுமையும் பெருக்கித் தூய்மைசெய்யப்படுகின்றன. பயணிகள் எந்த வகுப்புச் சீட்டுப் பெற்றிருப்பினும் மிகவும் மதிப்பாகவே நடத்தப் பெறுகின்றனர். நிலயத்தில் ஒரு வண்டி வந்து சேர்ந்ததும் அந்த நிலயத்தின் பெயரும், அந்த வண்டி செல்லக்கூடிய ஊரும் ஒலிபெருக்கி வழி அறிவிக்கப் பெறுகின்றது. எல்லாரும் மிகவும் நாணயமாக நடந்து கொள்வதால் சீட்டுத் தேர்வாளரே (Ticket Examiner) சப்பானில் இல்லை! எல்லா நாட்டாரும் கண்டு வியந்து பாராட்டும் வண்ணம் பொது ஒழுங்கு கடைபிடிக்கப் பெறுகின்றது.

○ இல்லங்களிலும் அலுவலகங்களிலும் வேறு தனிப்பட்ட நிலையங்களிலும் வேலை செய்யும் வேலைக்காரர் எல்லாரும் மிகவும் நாணயமாகவும், பணிவாகவும் நடந்து கொள்வது வியத்தகு செய்தியாகும். வேலை வாங்கும் தலைவர்களும் அவர்களிடம் பரிவும், அன்பும், தண்டித்தல் இல்லா மனப்பாங்குடனும் நடந்து கொள்கின்றனர்.

○ பொதுவாக வெளியூர் செல்பவர் தங்களுடன் மூட்டை முடிச்சுகளைக் கொண்டு செல்வதில்லை. பயணத்திற்கேற்ற எல்லாப் பொருள்களும் கொள்ளுமாறு பை ஒன்று விற்கப்படுகின்றது இப் பை ஒன்றையே அவர்கள் எங்குச் செல்லினும் தூக்கிச் செல்லுவர். சப்பானில் நிகரமை (Soci=lism) கொள்கைக்கு இடமில்லை எனினும், ஒரு செய்தி மிகவும் மகிழ்ச்சிக்குரியது. வேலைக்காரர்க்கும் அவர்தம் தலைவர்க்கும் நிலவுகின்ற நல் தொடர்பே அது. அத்தொடர்பு மிகவும் பாராட்டக்கூடியது. முதலாளிகள் தங்களுக்குக்கீழ் வேலை செய்யும் வேலையாட்களைத் திட்டுதல் என்பது சப்பானில் நடவாத தொன்றுகும். தனியார் துறையாயினும் சரி, அரசியல் துறையாயினும் சரி, எங்கும் தொழிலாளர் கட்கும் மேலாளர் கட்கும் சுகமான நிலையும் பணிவான தொடர்புகளுமே நிலவுகின்றன. இரு திறத்தாரும் ஒருவர்க் கொருவர் ஒரேகுடும்பத்தின் பல்வேறு உறுப்பினர்கள் போலவே நடந்து கொள்கின்றனர். இச்சூழ் நிலையில் அமைதியான பணியே அங்கு நடைபெறுகின்றது. காலச் செலவும் இல்லை; சொற் செலவும் இல்லை. பிறநாடுகளில் உள்ளதைவிட எந்த ஒரு வேலையும் சப்பானில் விரைந்து நடைபெறுதற்கு மேற்கண்ட நிலையே காரணமாகும் தொழிலில் மேன்மை கீழ்மை இல்லை. இணைந்து செய்யப்படுவதால் வேலைத் திறன் சப்பானில் சுடர்விட்டு ஒளிர்கின்றது. தொழிலாளரும் முதலாளிகளும் ஒன்றுக ஒரே இருக்கையில் அமர்ந்து உண்பர். பிற நாடுகளில் இந்நிகழ்ச்சி நடப்பது மிகவும் அருமை.

○ தொழிற் கழகங்கள்.உழைப்பாளர் ஒன்றியங்கள் (Labour Unions) முதலியன சப்பானில் ஏற்படத் தேவையே இல்லை. ஆனல், இக்கால் நூற்றுக்கு ஐந்து பெயர் கொண்ட தொழிலாளர் கழகம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளது.

○ சப்பானில் எங்குப் பார்த்தாலும் ஒரே வாணிகம்! ஆணும் பெண்ணும், முதியோரும் இளையோரும் வாணிகத்தில் ஈடுபட்டுள்ளனர். உலகில் வேறு எந்த நாட்டிலும் இப்படி இல்லை. திண்ணை தெருக்கள், சந்தி சதுக்கங்கள், மூலை முடுக்குகள், கடற்கரை, மலைமுகடு, எங்குப்பார்த்தாலும் சிறியதும் பெரியதுமான கடைகள் காட்சி தருகின்றன.

○ நகரின் பெரும்பாலான பகுதிகள் கடைகளே. எல்லா வகையான பொருள்களும் அங்குக் கிடைக்கும். ஒரே விலை. பேரத்திற்கே இடமில்லை. ஏமாற்றமும் திருட்டுத்தனமும் வாணிகத்தில் அறவேஇல்லை. சிறுவர்க்கும், பெரியோர்க்கும் ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் மனநிறைவு ஏற்படும் வண்ணம் வாணிகம் நடைபெறுகின்றது. தரத்திலும் புதுமையிலும் புழக்கத்திலும் உயர்வான பொருள்களே விற்பனைக்கு வருகின்றன. நூற்றுக் கணக்கான சுறுசுறுப்பு நிறைந்த இளம் பெண்டிர் கடைகளில் விற்பனையாளர்களாக அமர்த்தப்பட்டுள்ளனர்.

○ 'நரி முகத்தில் விழித்தால் நல்லது' என்று நம் நாட்டில் ஒரு மூட நம்பிக்கை இருக்கின்றது. சப்பானில் நரி தெய்வமாகவே கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொருவர் வீட்டிலும் நரியின் படங்களும் படிமங்களும் காட்சியளிக்கும். வீட்டின் முன்புற வாயிற் கதவுகளில் நரிப்படம் பொறிக்கப் பெற்றிருக்கும். அதற்கென கோவில்களும் உண்டு. இத்தகைய சிறு தெய்வ வணக்கங்களில் மிகுந்த மூட நம்பிக்கை கொண்டவர்கள் சப்பானியர்.

○ மருந்து வாணிகர் தங்கள் முகவர்களை ஒவ்வொரு வீட்டிற்கும் அனுப்புகின்றனர். முகவர்கள் எல்லாவகையான மருந்துப் பொருள்களிலும் ஒரு குறிப்பிட்ட அளவு ஒவ்வொரு வீட்டிலும் கொடுத்து விட்டுப் போகின்றனர். ஆண்டிற்கு ஒரு முறையோ அரையாண்டுக் கொரு முறையோ, மீண்டும் அவ் வீடுகளுக்குச் சென்று, தாங்கள் கொடுத்துச் சென்ற மருந்துகளிலும்,குளிகைகளிலும் செலவான வற்றிற்குத்தக்க விலையைப் பெற்றுக் கொண்டு, எஞ்சியுள்ள பழைய மருந்துகளை மாற்றி விட்டுப், புதியனவற்றையும் தேவையான வற்றையும் விட்டுச் செல்கின்றூர்கள். இம்முறை வேறு எந்த நாட்டிலும் இல்லாதது.

○ சப்பானிய மக்கள் எத்துறையிலும் ஏமாற்றம் அடைவதே இல்லை. தோல்வி மேல் தோல்வி ஏற்பட்டாலும் அவர்கள் தம் முயற்சியில் சோர்ந்து விடுவது இல்லை அவர்கள் நாட்டுப் பழமொழியில் "ஏழு முறை விழுந்தாவது எட்டாவது முறையில் நில்" என்பது அவர்களின் முயற்சியைக் காட்டுவதாகும்

○ கோடையில் கடல் குளிப்பில் எல்லாச் சப்பானியருமே ஈடுபடுகின்றனர். அரை உடையிலும், உடையில்லா நிலையிலும் சிறுவர் முதல் கிழவர் வரை இதில் ஈடுபடுவது மிகவும் வியப்பானது.

○ சப்பானியரில் நூற்றுக்கு ஐம்பது பெயர் மூக்குக் கண்ணுடி அணிகின்றனர். கண் பார்வைக் குறைவு அங்கு மிகுதி.

இந்நிலை இக்காலத்தில் இன்னும் மோசமாக உள்ளது. கண்ணாடி அணியாதவர்கள் மிகவும் சிலரே. இதைவிட மிகவும் மோசமான நிலை என்ன தெரியுமா? நூற்றுக்கு எண்பது பெயர்கள் பொய்ப் பற்களை வைத்துக் கொண்டிருப்பது தான். பல் பற்றிய நோய் அங்கு மிகுதி. பொய்ப்பற்களைப் பொன்னினாலேயே செய்து அணிந்து கொள்கின்றனர். பல் நோய்களுக்குக் காரணம் கண்டுபிடிந்து அவற்றை நீக்க முயலாமல், போலிப் பற்களைப் பொருத்துவதற்கென்றே பல் மருத்துவர்கள் அங்குப் பெரியளவில் இருக்கின்றனர். அங்கிருந்து உலகெங்கும் பல் மருத்துவர்கள் பரவியுள்ளனர். பொன்னால் பல்கட்டிக் கொள்வது போலிப் பெருமையாகவும் கருதப் படுகின்றது. பெரும்பாலான சப்பானியரின் வாய்களினின்றும் எழும் தீ நாற்றம் குடலைப் புரட்டக் கூடியதாக இருக்கும். குழந்தைகளிலிருந்து அவர்கள் இனிப்பான நொறுவை வகைகளையும், 'கோகோ' குழைவுகளையும் அளவுக்குமீறி உண்பதாலேயே இவ்வாறு பல் நோய்களால் அவாகள் துன்புறுகின்றனர். அடிப்படையான இத்தீங்கைப்பற்றி எண்ணியும் பாராமல் பெரும் அளவில் அந்நோய்க்கு ஆளாகின்றனர். காலையில் பல் துலக்குவதும் பெரும்பாலான சப்பானியர்க்குத் தேவையில்லாத ஒரு பழக்கம்!

○ சப்பான் மலைமிகுந்த நாடாகையால் அங்கு வேளாண்மைக்குப் பயன்படுத்தும் நிலங்கள் ஒரே தொடராக இல்லாமல் துண்டு துண்டாகவே இருக்கும். முக்கோண, நாற்கோண வட்ட, நீள அளவைகளில் வயல்கள் ஒழுங்கற்றுச் சிதறிக் கிடக்கும். மொத்த நிலப்பரப்பில் 16 விழுக்காடே உழவுக்காகப் பயன்படுகின்றது. இந்த அளவு பிற நாடுகளைப் பார்க்கினும் மிகக் குறைந்தது ஆகும் அங்கு விளையும் அரிசியில் மூன்றில் ஒரு பங்கு 'சாக்' எனும் வெறிநீர் செய்யப் பயன்பட்டு விடுகின்றது. இக்காலத்தில் உழவர்கள் போதிய வருவாயின்றித் தொல்லைப் படுகின்றனர்.

○ சப்பானில் உள்ள திரைப்பட நாடக அரங்குகளில் எப்பொழுதும் காட்சிகள் நடந்த வண்ணமாகவே இருக்கும். சிறு அளவில் கட்டணம் செலுத்தி உள்ளே சென்று விடுவோமானால், ஒரு நாள் முழுமையும் உட்கார்ந்து பார்க்கலாம். ஒரு கதை முழுமையும் காட்டப் பெற்றபின் மீண்டும் முதலிலிருந்து அது தொடர்ந்து திரையிடப்பெறும். இதனால் பார்ப்போருக்கு ஒரு நல்வாய்ப்பு ஏற்படுகின்றது. எந்த நேரத்திலும் அரங்கில் நுழையலாம். நாம் பார்த்த காட்சி திரும்பவும் காட்டப்படும் வரை அங்கு உட்கார்ந்திருந்து விட்டு மீளலாம், அங்கு நடிக்கப்படும் நாட்டியங்களிலும் நாடகங்களிலும் பெரும்பாலும் அசைவே இருக்கும். கருவி ஓசைகளும், பாடல்களும் பேச்சுகளும் மிகவும் குறைந்த அளவேஇருக்கும். அரங்குகள் இன்னும்

பழங்கால முறைப்படியே பச்சை, சிவப்பு, நீலம், மஞ்சள் முதலிய கண்ணைப்பறிக்கும் அழுத்தமான வண்ணத்திரைகளால் ஒப்பனை செய்யப் பெற்றிருக்கும்.

○ எதையும் பழுதுபார்ப்பதில் சப்பானியர் மிகுந்த சுறுசுறுப்பும் அக்கறையும் காட்டுகின்றனர். காலத்தாழ்வு என்பதே மிகவும் குறைவு. 1923–ஆம் ஆண்டு பெரிய நிலநடுக்கம் ஏற்பட்டுப் பெரிய நகர்களான டோக்கியோவையும் யோககாமாவையும் பேரளவில் சிதைத்த பொழுதுகூட, அப்பெருஞ்சிதைவை மிக விரைவில் செப்பம் செய்தனர். மூன்று நாளைக்குப்பின் தொடர் வண்டிகள் ஓடின; பாலங்கள் சரிசெய்யப் பெற்றன. மூன்று நான்கு மாதங்கட்குள் எல்லாச் சேதங்களும் சரிபார்க்கப் பெற்று பழைய நிலையை எய்தின. பிற நாடுகளானல் அப்பழுது பார்க்கும் நிலை பல ஆண்டுகளை விழுங்கியிருக்கும்.

○ சப்பானில் மின்னாற்றல் பெரும்அளவில் பயன்படுத்தப் பெறுகின்றது. மின் விளக்குகள் தெருக்களில் மூலைமுடுக்குகள் எங்கணும் பொருத்தப் பெற்றிருக்கின்றன. ஒரு நெடுந் தெருவில் குறைந்தது ஆயிரத்துக்குமேல் மின் குமிழ்கள் பொருத்தப் பெறுகின்றன. எல்லாத் துறைகளிலும் மின்னாற்றல் பயன்படுகின்றது. பொது இடங்களில் வண்ண வண்ண மின் விளக்குகளை அழகாக அமைத்திருக்கின்றனர். எங்கு நோக்கினும் மின் விளக்குகளாகவே இருக்கும்! மின்னாற்றல் தட்டுப்பாடே அங்கில்லை.

○ அங்குள்ள கடைகளில் மிகவும் தூய்மை கையாளப் பெறுகின்றது. வாடிக்கையாளர் வந்தவுடன் அவரை இன்முகத்துடன் வரவேற்றுத் தேவையான பகுதிக்கு அழைத்துச் செல்லத் தனிப்பட்ட ஆட்கள் அமர்த்தப் பெற்றுள்ளனர். குழந்தைகளுடன் ஒருகுடும்பம் ஒருகடையில் நுழையுமாயின், கொடுக்கல் வாங்கலுக்கு இடையூறு விளைவியாமல் இருக்கும் பொருட்டு அக்குழந்தைகள் கடையின் பின்புறத்தில் உள்ள பூந்தோட்டத்திற்கும் விளையாட்டு அரங்கிற்கும் அழைத்துச் செல்லப்படுகின்றன. தொலைபேசியில் சொன்னவுடன் காய்கறி முதல் துணிமணி வரை அரைமணியில் வீடு வந்து சேருமாறு ஆட்களைப் பெரும்பாலான கடைகளில் அமர்த்தியுள்ளனர்.

○ அங்குள்ள சாலைகள் மிகவும் தூய்மை வாய்ந்தவை. வழவழப்பான முறையில் வண்ணத் தாரைகளுடன் கூடிய அவை நாடு காணிகளை வியப்பில் ஆழ்த்தும். இரவில் இரண்டு மூன்று கற்கள் உள்ள கடைத்தெருக்கள் பல்லாயிரக் கணக்கான வண்ண விளக்குகளுடன் சுடர்விடும் காட்சி மிகவும் விரும்பத்தக்கதாகும். இத்தெருக்களில் எத்தகைய வண்டிகளும் விடப் படுவதில்லை. ஒரே அமைதியுடன் மக்கள் இரவில் நடமாடும் காட்சிகள் மிகவும் இனிமை பயப்பதாகும்.

○ சப்பானில் கையாளப்பெறும் சில கட்டுப்பாடான நடை முறைகளுக்கு அங்குள்ள அமைச்சவை அமைப்பே முழுக் காரணமாகும். அரசர்க்கு உள்ள மதிப்பை விட, படையமைச்சர்க்கு உள்ள மதிப்பே பெரிதென அங்குக் கருதப் பெறுகின்றது. அமைச்சர் யாவரினும் படையமைச்சரே பெரும் ஆணை யாற்றலைப் பெற்றிருக்கின்றார். பிற நாடுகளில் தலைமையமைச்சர்க்கு உள்ள ஆற்றல் அங்குப் படை யமைச்சர்க்கே உண்டு. படைஞர் வலிந்து நிற்பதாலேயே பொது ஒழுங்கும் நடை முறைச் சீர்மையும் சப்பானில் சிறப்புற விளங்குகின்றன. படையமைச்சர் இசைவின்றி எந்த ஒரு சட்டமும் அங்கு நிறைவேறுவதில்லை. கொள்கை முறையில் அன்றி நடைமுறையில் அவர்க்குப் பெருத்த மதிப்புண்டு

○ சப்பானில் உள்ள குழந்தைகளுக்கு ஆங்கில எழுத்துகளைக் கற்பிக்குங்கால் அவற்றின் தொடர்புள்ள கீழ்க்கண்ட சொற்களைச் சொல்லித் தருகின்றனர் இதிலிருந்தே சப்பானியரின் திட்டமிட்ட வாழ்வியற் சிறப்புகளை அறியலாம்.

Ambition; Bravery; Caution; Determination; Earnestness; Genius; Honesty; Independence; Justice; Keenness; Labour; Method; Nobility; Order; Punctuality; Quickness; Readiness; Steadiness; Tirelessness; Uprightness; Versatility; Wisdom; 'X'actness; Yearning; Zeal.

(இச்செய்திகள் 'Romantic Japan' எனும் நூலிலிருந்து தொகுக்கப் பெற்றவை யாகும்.)

தென்மொழி

கடலூர்-2

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய விதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு.	வெளிநாடு.
தனி இதழ்.	50 காசு.	60 காசு	75 காசு.
ஆண்டுக் கட்டணம்.	6 உருபா	7 25 உருபா.	9 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

விளம்பரம்.

அட்டை நான்காம் பக்கம்.	(இரு வண்ணம்)	100 உருபா.
,, ,, ,,	(ஒரு வண்ணம்)	75 உருபா.
உள்ளே முழுப் பக்கம்		50 உருபா.
,, அரைப் பக்கம்.		25 உருபா.

தொடர்ந்த விளம்பரங்கட்கு எழுதுங்கள்.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக் கேட்க.

— ஆ. துரைக்கண்ணு.

நாலடியாரின் ஆசிரியர் பலரே!

'பழகுதமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்' என்றாங்குக் குறளொடு ஒப்புமைத்தாய 'நாலடியார்' ஒருவரால் யாக்கப் பெற்றது எனுங்கூற்று ஒரு சிறிதும் ஏற்புடைத்தன்றாம். சில சொற்றொடர்கள் ஒத்திருத்தல் நோக்கிமட்டுமே, ஓராசிரியரால் இஃது இயற்றப்பெற்றது என்று அறுதியிடல் முற்றிலும்பிழையே.

நாலடியாரில் 45, 46-ஆம் பாடல்களில்,

"புன்மாக்கள் கவற்ற விடுவேனோ?",
"கண்டொழுகுவேன்"

என்னும் தொடர்களும், 54, 60-ஆம் பாடல்களில் இரண்டா மடியும், 'இன்னாமை நோக்கி' என்னும் தொடரும், 106, 252-ஆம் பாடல்களில் முதலடிகளின் முதன் மூன்று சீர்களும், இரண்டாமடிகளின் மூன்றாஞ் சீாகளும் ஒன்றத் தொடுக்கப்பட்டுள்ளன எனவே நாலடியாரின் ஆசிரியர் ஒருவரேயெனத் தென்மொழி'யின் சென்ற ஓலையில் (ஓலை : 11) ஓர் அன்பர் உறுதி தந்துள்ளார்.

அவர் காட்டியன மட்டுமல்லால், அவையே போன்று ஒப்புடைய சொற்றொடர்கள் நாலடியாரிற் பலவுள.

"செய்வர் செயற்பா லவை" என்ற ஒரு தொடரே 147, 153, 185-ஆகிய பாடல்கட்கு ஈற்றடியாய் வந்துளது. 91-ஆம் பாடலின் ஈற்றடி,

"அடையாவாம் ஆண்டைக் கதவு' என்றும், 271-ஆம் பாடலின் ஈற்றடி,

"அடைக்குமாம் ஆண்டைக் கதவு" என்றும் வந்துள. மற்றும்,

"எய்திய செல்வத்த ராயினும் கீழ்களைச்
செய்தொழிலாற் காணப் படும்"

என்ற ஈரடிகளே 347, 350 ஆகிய பாடல்களின் ஈற்றிரண்டு அடிகளாக வந்துள்ளன.

இவற்றான் மட்டுமே நாலடியாரின் ஆசிரியர் ஒருவரெனக் கோடல் பொருந்தாது. எற்றாலெனில், நாலடியாரில் பற்பல பாக்கள் உரைத்த கருத்தினையே மீண்டும் மீண்டும் உரைத்துச்

செல்கின்றன. சொற்றொடர்கள் ஒன்றிவரின் ஓராசிரியர் இயற்றியதே எனலாம்; ஆயின், ஒரே நூலில் கருத்துகளும் அவ்வாறே ஒன்றி வரின்?

பின்னர் வந்த பவணந்தியாரும் நன்னூலில் 'கூறியது கூறலினை' (பொதுப்பாயிரம், வரி-12) நூலினது பத்துக் குற்றங்களுள் ஒன்றாக உரைத்தனர் 'கூறியது கூறலாய' குற்றம், நாலடியாரில் மலிந்து கிடக்கின்றது. காட்டாக,

> ''கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
> நுனியின் கரும்புதின் றற்றே – நுனிநீக்கித்
> தூரின்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
> ஈரமி லாளர் தொடர்பு'' (138) எனும் பாடலும்,

> ''கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை யெஞ்ஞான்றும்
> குருத்திற் கரும்புதின் றற்றே; – குருத்திற்
> கெதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ, என்றும்
> மதுரமி லாளர் தொடர்பு'' (211)

எனும் பாடலும் 'கற்றார் நட்பு மேலும் மேலும் இன்பந் தருந் தகையது, என்ற ஒரே கருத்தினை விளக்குதல் காண்க. இஃதே போன்று,

44-45, 135-140, 149-158, 150-184, 206-207-210, 263-275, 264-265-266, 283-290, 345-347 ஆகிய பாடல்களையும் ஒப்பு நோக்கின், கருத்தின்கண் செறிந்துள்ள ஒருமைப்பாடு தெற்றெனத் தெரியும்.

இனிக் கூறியது கூறலேயன்றி, ஓர் அதிகாரத்தின் கருத்துடைய பாடல் பிறிதோர் அதிகாரத்திலும் கலந்து வந்து மயக்கந் தரும் பிழைகளும் மல்கியுள. மேற்குறித்த 138, 211-ஆம் பாடல்கள் முறையே கல்வி, நட்பாராய்தல் ஆகிய அதிகாரங்களில் வருகின்றன; ஆயின் கருத்து ஒன்றே. 150, 184-ஆம் பாடல்கள் முறையே குடிப்பிறப்பு, பெருமை ஆகிய அதிகாரங்களில் வரினும் கருத்தில் ஒன்றியுள்ளன. எனவே அதிகாரத் தொகுப்பின்கண்ணும் முறையின்மை உள்ளது என்பது தெளிவாகும்.

நாலடியாரின் ஆசிரியர் ஒருவரேயெனின், 'கூறியது கூறல்' பிழைகளை அளப்பின்றி மலியச் செய்திரார்; அதிகாரத் தொகுப்பு முறையிலும் முறையின்மை செய்து குழப்பம் விளைத்திரார். எனவே நாலடியாரின் ஆசிரியர் ஒருவரல்லர்; பலரே யாவர். வேண்டுமெனில், ஒரே ஆசிரியர் இரண்டு மூன்று பாடல்களையோ, நான்கைந்து பாடல்களையோ பாடினர் எனினும் பிழையில்லை. சமண முனிவர் இயற்றியதாகக் கூறப்படுவது புனைந்துரையே; வரலாறன்று.

*

சொல் விளக்கம்.

'திக்கு' 'திசை' தென் சொற்களே.

துகு - (திகு) - திகை = முடிவு, எல்லை.

திகைதல் = முடிதல், தீர்தல், தீர்மானமாதல்.

'மாதம் திகைந்தகூலி', 'அதன் விலை இன்னும் திகைய வில்லை; என்பன தென்னாட்டு வழக்கு.

திகை – திசை = முடிவு, எல்லை, பக்கம்.

(துக்கு) – திக்கு.

திசைச் சொல் = பல திசைகளில் வழங்கும் கொடுந் தமிழ்ச் சொல்.

திசைச் சொல் என்பது தொன்று தொட்டு வழங்கி வரும் தமிழிலக்கணக் குறியீடாதலாலும், மயங்குதலைக் குறிக்கும் திகை என்னும் சொல்லும் திசை என்று திரிதலாலும், எல்லையைக் குறிக்கும் திசை என்னும் சொல் தென் சொல்லே யாம்.

"நீ திசைத்ததுண்டோ" (கம்ப கைகேசி சூழ். 18)

"இவன் சிந்தை துழாய்த் திசைக்கின்றதே"
(திவ். திருவாய் – 4, 6. 1)

"திசைப்புறுதலுஞ் சீவர்க்கு" (வேதா. சூடா. 110) என்னுந் தொடர்களில், மயங்குதலைக் குறிக்கும் திகை என்னுஞ் சொல் திசை என்று திரிந்திருத்தல் காண்க. திசை என்னுஞ் சொல்லின் மூலவடிவான திகை வட மொழியில் வழங்காமை யையும் நோக்குக. திசை — (தேசு) — தேசம் — தேயம் — தேம் = திசை, தேசம், பக்கம், இடம்

திசை, தேசம் என்னும் சொற்கள் பக்கம் என்னும் பொருளில் வருதலை, 'அந்தத் திசைக்கே போகமாட்டேன்' என்னுந் தமிழ் வழக்காலும், 'ஏகதேசம்' என்னும் வடமொழி வழக்காலும் அறியலாம். ஏகதேசம் = ஒரு பக்கம், ஒரு பகுதி.

தேசம் என்னும் சொல் முதலாவது எல்லையைக் குறித்து, பின்பு ஓர் எல்லையில் அல்லது பக்கத்தில் உள்ள நாட்டைக் குறித்தது. ஒப்பு நோக்கு: சீமை = எல்லை, நாடு.

'திக்குத் திக்கென்று அடித்துக் கொள்ளுகிறது' என்னும் வழக்குண்மையாலும், நாத்தட்டுதல் திக்குதல் எனப்படுதலா லும், திகை என்னுஞ் சொல் ககரவொலி கொண்டிருத்தலாலும், திக்கு என்னும் சொல்லும் தென் சொல்லே என்க.

(முதல் தாய்மொழி 105–பக்)

மொழியறிஞர். ஞா. தேவநேயப் பாவாணர்.

ஆங்கில மொழியாக்கம்

துறைக் களிறும் கதக் களிறும்.

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல
இனியை பெரும எமக்கே; மற்றதன்
துன்னருங் கடாஅம் போல
இன்னாய் பெரும,நின் ஒன்னா தோர்க்கே. — புறநானூறு 94.

ELEPHANT IN STREAM AND IN FRENZY.

Like an elephant strong
Lying tame and placid in the stream
Allowing himself to be washed
By the village boys,
You are sweet to us, O prince!
But to your enemies,
What a formidable foe you are
Like the self - same elephant
When he is in frenzy. — Puram. 94.

அவன்கை வண்மை.

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வாணிகன் ஆஅய் அல்லன்;
பிறரும் சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன் றவன்கை வண்மையே. — புறம். 134.

HIS MUNIFICENCE!

Aai is not a trader in charity,
Bartering his wealth for a seat in Heaven;
His munificence does spring
From a larger ideal
Which the Noble Souls of the world
Have always chosen for their lives — Puram 134

மொழியாக்கம்: ம. இலெ. தங்கப்பா. எம். ஏ.

தமிழர் யார்?

புலவர். வி. பொ. பழனிவேலன், பி. ஓ. எல்.

இஞ்ஞான்று தமிழ் நாட்டில் மூன்றரைக் கோடி மாந்தர் வாழ்கின்றனர். இவர்கள் யாவரும் தமிழர்கள்தாமா? எனின், ஆம், என்பது ஒருபுடை யொப்புமை விடையே. எல்லாரும் தமிழ் நாட்டில் வாழ்கின்றனர்; தமிழால் பிழைக்கின்றனர். ஆதலின், தமிழர் என்கின்றோம். ஆனால், உண்மையான தமிழ்ப் பற்றும், தமிழ்நாட்டுப் பற்றும் உள்ளவர்கள் எத்தனைப் பெயர் என்று நோக்கின், மிகச் சிலரே என்பது போதரும். இந்துக்கள், முசிலிம்கள், கிறித்தவர், அமணர், புத்தர், மராத்தியர், ஆங்கில விந்தியர், சௌராட்டிரர் முதலிய பலதிறத்தினர் தமிழ்நாட்டில் வாழ்கின்றனர் இவர்கள் அனைவரும் தமிழர் எனத் தக்கவரா? தமிழர் வழிவந்தவரா? இவர்களில் பலர் தமிழர் வழியினரும் சிலர் வேற்றாருமாவர்

சமய வேறுபாடு, கொள்கை வேறுபாடு, கட்சி வேறுபாடு, நிற வேறுபாடு, குல வேறுபாடு காணப்பெறினும் பலர் தமிழர் வழிவந்தாரே. வேற்றார் சிலர் போக, தமிழர் என்று பதிவு செய்யப் பெற்றவர் தமிழ் நாட்டில் மூன்று கோடிப் பெயராவது இருப்பர். இவர்களையெல்லாம் தமிழர் என்று சொல்லலாமா? சொல்லப் பெறும் தகுதி இவர்க்குண்டா? ஆயின், தமிழர் யார்? தமிழரல்லாதார் யார்? என்ற வினாவுக்கு விடையிறுப்பதே இக் கட்டுரை.

தமிழ் நாட்டில் வாழ்வோரிற் சிலர் சமற்கிருதத்தையே உயர்மொழியென்று கூறி அதனை வளம்பெறச் செய்யத் திட்டம் தீட்டித் தம் உழைப்பு, பொருள் முதலியவற்றை அதன் பொருட்டே செலவிடுகின்றனர். தம்மால் இயன்றாங்குப் பல வகையானும் அம்மொழியை வளர்க்க முற்பட்டுள்ளனர். அதன் வளர்ச்சிக் கெனக் கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் தோற்று விக்கத் தொடங்கியுள்ளனர். பல தூய தமிழ்ச் சொற்களை வட மொழிச் சொற்களென வலிந்துரைக்கின்றனர்.

சமற்கிருதத்திலிருந்துதான் தமிழ் உண்டாயிற்று; அகத்தியர் என்ற வடவரே பொதியமலையிலிருந்து கொண்டு தமிழைப் பரவச்செய்தார். தமிழ் சமற்கிருதத்தின் சேய் என்றும் தங்கை என்றும் சாற்றுகின்றனர். அவருட் சிலர் தமிழும் சமற்கிருதமும் இறைவனின் இருகண்கள் என்கின்றனர். அவற்றுள் ஒன்றை விட்டு ஒன்றைப் பிரிக்க முடியாது; ஒன்றின்றி மற்றொன்று வாழாது என்றும் கூறுகின்றனர். அவ்வாறாயின் உலகப் பொது மொழியாக உள்ள ஆங்கிலமும் பிறமொழிகளும் எவருடைய கண்களெனக் கூறுவரோ? அறியோம்.

கழகத் தமிழ் நூல்களில் காணப்பெறும் கருத்துகளெல்லாம் வடமொழி மறைகளினின்றும், வரலாறுகளினின்றும் வந்தவையே என்றும் இயம்புகின்றனர். மேலும், "தீக்குறளை சென்றோதோம்", என்ற ஆண்டாள் பாடல் வரிக்கு வேண்டுமென்றே பிழையாகப் பொருள் கூறித் தமிழ்மறையாகிய திருக்குறளைத் "தீக் குறள்", என்று பொதுமக்கள் கருதுமாறு செய்து வருகின்றனர். இவ்வகையினர் தமிழுக்குப் புல்லுருவிகள் போன்றோரே.

சிலர், தனித் தமிழென்றால் அஞ்சியகலுகின்றனர்; அஃது யாருக்குப் புரியும் என்கின்றனர். தாங்கள் வெளியிடும் தாளிகைகளிலும், நூல்களிலும் தூய தமிழ்ச் சொற்கள் பலவிருக்கும் போது, பிறமொழிச் சொற்களையே மிகுதியும் பெய்து எழுதுகின்றனர் தனித் தமிழில் எழுதுவதும் பேசுவதும் யாருக்கும் புரியாது; கருத்தைத் தெரிவிக்கும் வாயில்தானே மொழி. அங்ஙனமாக, எல்லா மொழிச் சொற்களையும் கலந்து கொள்வது தான் மொழிவளர்ச்சிக்கு ஏற்புடைத்து என்று கூறி, கீழ்க்கண்ட கதையையும் கழறுகின்றனர்:

ஒரு பெண்ணைச் சிறைபிட்டு அவளது கற்பைக் காப்பது சிறந்ததா? அவ்வாறின்றி, எல்லாருடனும் பேசிப் பழகி வரும் ஒரு பெண் தன் கற்பொழுக்கம் கெடாது காத்துக்கொள்வது சிறந்தா? பின்னதே சீரிய கற்பாகும். அதுபோல, மொழியும் சிறைப்படுத்திக் காக்கப்பெறுவது நன்றன்று. எல்லாமொழியுடனும் கலந்து வழங்குவதே சிறப்புடைத்தாம் என்கின்றனர். இவர்தம் மதிநுட்பம் இருந்தவாறென்னை!

சிலர், தமிழை வளர்க்கிறோம் என்று வானளாவப் பேசுகின்றனர் ஆனால், அவர்தம் பேச்சிலும், எழுத்திலும் தமிழல்லாத சொற்களே மிகுதியும் இடம் பெறுகின்றன. இனிய பல தமிழ்ச் சொற்கள் இருக்கும்போது அவற்றை ஒதுக்கி அயன் மொழிச் சொற்களை அள்ளி வீசுகின்றனர்.

மற்றும் சிலர், வீட்டிலும் வெளியிலும் வேற்று மொழியிலேயே பேசுகின்றனர். ஆனால், தமிழை வளர்க்கின்றவர்கள் தாங்கள்தாம் என்று வாய்ப்பறை யறைகின்றனர். இத்தகையோர் தமிழ்ப் போர்வையில் மறைந்து கொண்டு தமிழழிக்கும் தகாதோரே.

சிலர், தமிழில் என்ன இருக்கிறது? தமிழ், தமிழ் என்று அதன்மீது பற்றுக் கொண்டலைபவர் 'தாய்ப்பால்' பைத்தியம் பிடித்தவர்; ஆங்கிலமே சிறந்த மொழி; அதனையே தமிழர் தங்கள் வீடுகளில் பேசவேண்டும் என்று எழுதியும் பேசியும் உலவுகின்றனர். இவர் மொழிப்பற்றற்ற மூதாளர்.

சிலர், தமிழ் நாட்டில் வாழவும், வயிறு வளர்க்கவும் தமிழைக் கற்கின்றனர். தமிழ் தம் தாய்மொழி யென்றும் கூறு கின்றனர். ஆனால், இவர்கள் உள்ளூரத் தமிழ்க்கு ஊறு செய்யும் உறுப்பாகவே இயங்குகின்றனர். எமக்குத் தமிழ்ப் பற்றுமில்லை; ஒரு பற்றுமில்லை என்கின்றனர்; தமிழால் பிழைத்துத் தமிழைப் பிழைக்கின்றனர். இவர் தந்நலம் பேணுந்தன்மையரே.

சிலர், வடமொழியை வளப்படுத்தவும், இந்தியை இங்குப் பரப்பவும் பொருளை வரையாது உவந்தீகின்றனர். தமிழ்வளர்ச் சிக்கென சிறு உதவியை நாடினும் ஓடி ஒளிகின்றனர்; அன்றிச் சீறி விழுகின்றனர். இவர்கள், தங்களைத் தமிழரென்று கூறிக் கொண்டு புகழடைய விழையும் புன்மையரே.

சிலர், இந்திய (பாரத)ப் பண்பாடும் தமிழ்ப்பண்பாடும் ஒன்றே; வேறுபடுத்துப் பேசுவோர் நாட்டைக் கூறுபடுத்து வோரே என்று குறை கூறுகின்றனர். இவர்கள் இன்று தமிழ் நாட்டில் நிலவும் பண்பாடு தமிழரதென மயங்கி உண்மைத் தமிழ் நாகரிகம் உணராதோரே.

சிலர், – சிறப்பாகப் பேராயக் கட்சியினர் – இந்திமொழி யைத் தமிழ்நாட்டில் பரவச்செய்து அதனை ஆட்சிப் பொது மொழியாக்க அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வருகின்றனர். இத்தமிழ்நாட்டில் இந்தி பரப்பு மன்றங் (இந்தி பிரசார சபாக்) களும், இந்தி விரும்பிகள் கழகங் (இந்திபிரேமி மண்டல்) களும் நிறுவி உழைத்து வருகின்றனர். இந்தி தமிழ்நாட்டில் புகு வதால் தமிழுக்குக் கேடு நேராது என்று பொது மக்கட்கு ஆறு தல் கூறுகின்றனர்.

தமிழ்ப்பேராசிரியர் எனவுலவும் சில போலிகள் மும்மொழிக் (தமிழ், இந்தி, ஆங்கிலம்) கொள்கையால் தமிழ்க்கு எக்கேடும் வாராதெனக் கூறி அதனை ஒப்புக்கொண்டு அறிக்கையும் விடுத் திருப்பதாகச் செய்தித்தாள் வாயிலாகத் தெரிகிறது இவர் முற்றக் கற்ற முழுமகனார்!

சிலர், தமிழ்த்தேசியம், தமிழரசு என்று கூறிக்கொண்டே, இந்தியை எதிர்ப்போரை யெல்லாம் ஏளனம் செய்து திரிகின் றனர் இத்தகையார் நாட்டையும் மொழியையும் எங்ஙன் காக்கப்போகின்றனர்?

மேலே வகுத்துரைக்கப்பட்டவரேயன்றி இன்னும் பலதரத் தினரும் தமிழ்க்கு உறுகண் செய்யும் இயல்பினராய் இலைமறை காய் போல இத்தமிழ்நாட்டில் இயங்குகின்றனர். இத்தன்மை யரையெல்லாம் தமிழர்கள் என்றுசொல்பவோ? சொல்ல நாவும், எழுதக் கையும் எழுமா?

அங்ஙனமாயின், 'தமிழர்' என்று எவரைத்தாம் சொல்லுவது என்ற ஐயம் எழுவது இயல்பே. இதோ விளக்கம்:

தமிழைத் தமது தாய்மொழியாகக் கொண்டு, அகத்தி (இல்லி) லும், புறத்திலும் அதனையே பேசியும், தம் உறவினர் நண்பர்கட்கு எழுதும் மடல்களிலும் மற்றவற்றிலும் தமிழையே பயன்படுத்தி, அதன் தூய்மை கெடாதவாறு, பிறமொழியை விலக்கி, ஒல்லும்வகையானெல்லாம் தனித் தமிழைப் பேணு பவரே தமிழர்.

தமிழ் வளர்ச்சிக்கும், வளத்திற்கும் யாண்டும் உழைத்து, அதற்கோர் ஊறு நேருங்கால் எதிர்நின்று இடர்களைந்து இன்புறு பவரும், தமிழையே நாட்டின் ஆட்சி மொழியாகவும், பேச்சு மொழியாகவும் கொண்டு, தமிழைப் பழிப்பவனையும், தமிழைக் கெடுப்பவனையும் தாய் தடுத்தாலும் ஒறுக்காது விடேன் என்ற உளவுர முடைய உயர்ந்தோருமே தமிழர்.

முத்தமிழும் தமிழ் நாட்டில் முழங்க ஆவன செய்து, தமிழ் நாகரிகம், பண்பாடு கெடத்தக்க எந்தச் சூழ்நிலையும், மாற்றமும் ஏற்படாது கண்ணுங் கருத்துமாயிருந்து காப்பவரே தமிழர்.

தமிழ் மொழிப் பற்றும், தமிழ்நாட்டுப் பற்றும் தம்மிரு விழி களெனக் கொண்டு, பிறமொழியாட்சி தமிழ் நாட்டில் வாராது காத்து, எந்த வடிவத்தில் மொழிக்கும் நாட்டிற்கும் கேடு நேரி னும் அதனை உயிரீடாக்கியேனும் போக்க முனைவாரே தமிழர்.

தமிழ்நாடு தனியரசு எய்தினாலன்றித் தமிழ்மொழி, தமிழ் நாகரிகம் தழைத்தோங்க வழியிரா தென்பதை யோர்ந்து அதற் சேற்பச் செயலாற்றி வரும் சீரியோரே தமிழர்.

சிறப்பாக, உளத்தாலும் உரையாலும், உழைப்பாலும் தமிழுக்கு ஊறிழைக்க ஒருப்படாது போற்றிவருபவரே தமிழர். ஏனையோரெல்லாரும் தமிழ் நிழலில் இருந்துகொண்டு, தமிழ் நிலத்தில் வாழ்ந்துகொண்டு தமிழுக்கே தீங்கிழைக்கும் தறுகண்ணரே *

எழுதுவார்க்கு !

தென்மொழிக்கு வரும் உருப்படிகளில் பாடல்களே மிகுந் துள்ளன. சிலர், பாடல்களில் எதுகைத் தொடையிலும் வட சொல்லமைத்து, மாற்றஞ் செய்ய முடியாதவாறு எழுதுகின்ற னர். எழுதுவார் கட்டுரை, பாடல்களைத் தனித்தமிழில் எழுதித் தக்காரிடம் காட்டிச் செப்பஞ் செய்து அனுப்ப வேண்டுகிறோம்.

"மழலை இன்பம்."

(பாடல்கள்.)

ஆசிரியர்: மணிவேலன்.

கலைச்செல்வி பதிப்பகம், காமாட்சித் தெரு, தருமபுரி-2.

(விலை. 75. காசுகள்.)

குழந்தையின்பால் உள்ளம் தோய்ந்த ஆசிரியர், அதன் உறுப்பு நலன்களையும் மழலையின்பத்தையும் பற்றிப் பத்துத் தலைப்புகளில் பப்பத்தாக நூறு பாடல்களை ஆக்கியுள்ளார். ஒரு தந்தைக்குத் தன்மகவின்பால் உள்ள ஈடுபாடு பாடல்களிற் பொங்கி வழிகின்றது. நூல், குழந்தையின் இனிய ஓவியத்தை நம் கண்முன் நிறுத்துவதிலும் ஆசிரியரின் தனிப்பட்ட உணர்வையே வடித்து வைக்கின்றது. ஆயினும் உணர்வில் உண்மையிருப்பதால் பாடலில் ஓட்டம் இருக்கின்றது. சில விடங்களிற் கற்பனை வலிந்ததாகவும் பொருட் செறிவின்றியும் தோன்றுகின்றதாயினும், பொதுவாக நன்றாகஇருக்கின்றது. குழந்தை முகத்தின் ஒளி, நிற வண்ணனையும், பெற்றவர் தம்முகத்தைப் பிள்ளையின் முகத்திற் காண்பதும், விழிநல மணிகளைக் கள்வர் கொள்ளாவாறு இமை மூடுவதும் நல்ல கற்பனை. ஆயின், மகவின் மூக்கினைத் தலைவரொருவரின் கைத்தடி மூக்குக்கொப்பிடுவது ஆசிரியரின் தனிப்பட்ட விருப்பமே; பாடற்சுவைக்குப் பொருந்துமாறில்லை. தலைவரின் கைத்தடி மாறும் பொழுது குழந்தையின் மூக்கு அமைப்பும் மாறுமோ? மற்றும் மூக்கினை எட்பூவோடு வேறுபடுத்திக் காட்டுவது போலியாக விருக்கின்றது. ஒரு விழி மங்கையை நோக்க, மற்றொருவிழி பொறுமை கொள்ளல் கூடும் என்ற கற்பனை பொருத்தமாக இல்லை.

பாடல்களிற் போதிய முதிர்ச்சி இல்லை. சொற்கள் கண்டபடி வந்து விழுந்திருக்கின்றன. உணர்வோடு பொருந்தாச் சொற்கள் பொருட் செறிவில்லாச் சொற்கள், இசைநிரப்ப வந்த வெற்றுச் சொற்கள், வடசொற்கள் ஏராளம். செப்பமான புலமையும் பாட்டுணர்வும் வாய்ந்த ஒருவரால் பாடல்கள் திருத்தப் பெற்று வெளிவருமானல், மறுபதிப்பில் நூல் சிறக்கும்.

— கல்லாடன்.

தமிழ்ப்பாவை.

மதுரை எழுத்தாளர்மன்ற ஆருவது ஆண்டுச் சிறப்புமலர்.

தமிழ்ப் போர்வைக்குள் மறைந்து கொண்டிருக்கும் தமிழ்ப் பகைவர்களின் போலி மன்றங்களைப் போல் தமிழுக்குக் கேடு செய்வதாக அமையாமல் உண்மைத் தமிழ்ப் பண்பாட்டினைத் தெரிந்தும், அதனைத் தெரிந்துகொண்டிருக்கும் புலவர்களின் துணையினைப் பெற்றும், தமிழினத்தின் மறைந்த பெருமையை மீண்டும் வெளிக் கொணரும் குறிக்கோளுடன் மதுரை எழுத்தாளர் மன்றம் நடந்து வருகின்றது என்பதை இவ் வாண்டுச் சிறப்பு மலர் காட்டுகின்றது. மன்றத்தின் குறிக்கோளும், உறுப்பினராதற்கு மன்றம் வகுத்திருக்கும் சட்டமும் பாராட்டத் தக்கவை. இன்றியமையாவுழி யன்றிப் பிறவிடத்தெல்லாம் பிற மொழிச் சொற்களை நீக்கித் தனித் தமிழ் எழுதுவதாக உறுதி யளிப்பவரே உறுப்பினராகத் தகுதி பெற்றவர் ஆவர் என மன்றம் விளம்புகின்றது. ஆயினும் மன்றத்தின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், முன்னணி உறுப்பினர்கள் ஆகியோர் தம் கட்டுரைகள் பாடல்களில் கூட எளிதில் தவிர்க்கக் கூடிய வட சொற்கள், பிறமொழிச் சொற்கள் பல கலந்திருப்பது மிக வருந்தத்தக்கது. மன்றம் விழிப்புடனும் தொண்டுணர்வோடும் போதிய ஆழ, அழுத்தத்தோடும் செயலாற்றவில்லை என்பதையே இது காட்டுகின்றது. மன்றம், உண்மை இலக்கிய வளர்ச்சியே நோக்கமாகக் கொண்டிருப்பினும், திரை உலக உரையாடல், பாடல் எழுத்தாளர்களும் ஆங்காங்கு மலரில் போற்றப் பெற்றிருப்பது, போலிகளை ஒதுக்கி உண்மையினை மட்டுமே தெளிந்து தேருமளவுக்கு மன்றம் இன்னும் எண்ண முதிர்வு பெறவில்லை என்பதையும் காட்டுகின்றது. ஆண்டு விழாப் போட்டியிற் பரிசு பெற்ற கதை கட்டுரை பாடல்கள் ஏமாற்றம் தருகின்றன. அவற்றுள் சிறப்பாகக் கூறத்தக்கது எதுவுமில்லை. பாடல்களில் உள்ள பிழைகளையேனும் திருத்தி வெளியிட்டிருக்கலாம். (உரை) நடை என்பது எதுகை மோனையோடமைந்த சொற் புனைவில் இல்லை; உள்ளத்தினின்று பீறிடும் எண்ண வலுவாலும் உணர்வுக் கனப்பாலும் சீரிய கூரிய சொற்கள், தாமே அழகுபட வந்தமையும் ஒழுங்கமைதியிலேயே உள்ளதென்பதை எழுத்தாள இளைஞர்களும், ஏன் – புலவர்களுங்கூட உணர்ந்து கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்!

– கல்லாடன்.

முகவரி மாற்றம்.

பாவாணர் அவர்கட்குத் தனிப்பட மடல்கள் எழுத விரும்புவார், கீழ்க்கண்ட முகவரிக்கே இனி எழுதுமாறு வேண்டுகின்றேம்.

ஞா. தேவநேயப்பாவாணர்,
ஆ. 959 5–ஆம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு (வ. ஆ.)

உறவுமுறையும், பொதுத்தொண்டும்.

பழஞ்சமயத்தின் வெற்று வினைப்பாடுகளிலுஞ் சட்ட திட்டங்களிலுமே கட்டுண்டு அதுவே சமய வாழ்வு என்று நினைந்திருந்த மக்களிடையே அன்பையும் அருட்பணியினையும் அடிப்படையாகக் கொண்ட மெய்ச்சமயத்தின் உயிர்த்துடிப்பை எழுப்பத் தோன்றியவர் கிறித்து பெருமான். மெய்ப்பொருளே யன்றி அவர் உள்ளத்தில் வேறு நாட்டம் அணுவேனும் இருந்த தில்லை. தம் தொண்டர் குழுவோடு நாடெங்கும் சுற்றித்திரிந்து ஓயாப் பெரும்பணி புரிந்துவந்தார். ஒருமுறை தொண்டன் ஒருவன் தன் தந்தை இறந்த செய்தியறிந்து, கிறித்துபெருமானை அணுகி ''ஐயன்மீர், தந்தையின்உடலை அடக்கம் செய்துவிட்டு வந்துவிடுகின்றேன்; அருள் கூர்ந்து விடை தருக'' என்று வேண்டினன். கிறித்து அவனை ஏறிட்டு நோக்கி அழுத்தமான குரலொடு ''செத்தவரை அடக்கம் செய்வது செத்தவர்களின் வேலை; நீ என்னைப் பின்பற்றிவா'' என்று மொழிந்தார்

மற்றொரு முறை அவர் மக்கள் நடுவில் தம் கருத்துகளை விளக்கிக் கொண்டிருக்கையில், ஒருவன் வந்து, அவரைக்காண வேண்டி அவர்தம் அன்னையும் உடன் பிறந்தாரும் வெளியே காத்து நிற்பதாக அறிவித்தான் உடனே அவர், ''யார் என் தாயார்? யார் என் உடன் பிறந்தார்?'' என்று வினவித், தம் மாணுக்கர்கட்கு நேராகத் தம் கையைநீட்டி ''இதோ, என்தாயும் உடன் பிறந்தாரும் இவர்களே, இறைவன் திருவுளக் கிடக்கை யினை உணர்ந்து நடப்பார் எவரோ அவர்களே எனக்குத் தாயாரும் உடன் பிறந்தாருமாவர்'' என்றார்.

உலகியலிற் கட்டுண்டு, தொண்டு வாழ்வுக்குக் கால்மனம் அரைமனம் மட்டுமே அளிப்போர் இவற்றை உன்னுவாராக

அன்பர் கவனிக்க.

தென்மொழியின் முன்னைய இதழ்கள் வேண்டியும் உறுப் பினராகவேண்டியும் தொகை அனுப்புவார், ஆசிரியர், தென் மொழி, கடலூர்-2. என்ற முகவரிக்கே அனுப்புக. சிலர் பாவாணர் பெயர்க்கும் உறுப்பாசிரியர்கள் பெயர்க்கும் பண விடைகளை அனுப்பிவிடுகின்றனர். இத்தகையவற்றைப் பெறு வதில் மிகுந்த தொல்லை ஏற்படுகின்றது. இனி அவ்வாறு வரும் பணவிடைகளைத் திருப்ப நேரிடும் என்பதை அன்பர்கள் உணர வேண்டுகிறோம். வங்கிக் காசோலைகள், இந்திய, பிரிட்டிசு அஞ்சற் காசோலைகள் முதலியவற்றையும் குறுக்குக் கோடிட்டு ஆசிரியர் அவர்கட்கே அனுப்ப வேண்டுகின்றோம். பாவாணர் பணக்கொடைத் திட்டத்துக்கெனப் பணம் அனுப்புவார் 'அமைச்சர், பாவாணர் பணக்கொடைத் திட்டம், தென் மொழி, கடலூர்-2.' என்றே முகவரியிட்டு அனுப்பவேண்டும்

— அமைச்சர்.

அறிக்கை-2.

பாவாணர் பொருட்கொடைத் திட்டம்.

பாவாணர் அவர்கட்குப் பெருங்கொடை நல்க வேண்டிச் சென்ற ஓலையில் அறிக்கை விடுக்கும் பொழுது, நம் உள்ளத்து ஒரு பால் அச்சமும் அவலமும் குடி கொண்டிருந்தன. எதற் கெடுத்தாலும் தமிழின் பெயராலும், கட்சியின் பெயராலும் பொது நலப் பணியின் பெயராலும் அடிக்கடி நன்கொடைகள் திரட்டப் படுகின்ற, இத்தமிழ்நலம் பேணுத்தமிழ் நிலத்திடைப், பாவாண ரின் பொருட்டு நாம் ஏந்துகின்ற மடியில் பணங்காசு விழுமா என்பது பற்றிய அச்சமும், இத்தகையவாய்த் தமிழ்த் தொண் டாற்றுதற்குத் தன்மானவுணர்வும் தமிழுணர்வும் அற்ற தமிழ ரிடையே போய்க் கேட்கின்ற ஒரு நிலையெண்ணி அவலமும் கொண்டோம் ஆனால் அறிக்கை வெளிவந்த ஒரு கிழமைக்குள் ஆங்காங்கிருந்து துணைக் குரல்களும் வலக்கைகளும் பாவா ணர்க்குத் தொண்டாற்ற யாம் யாம் என்று ஆரவாரித்தன. அவற்றைக் கண்டு பெருமிதமும் பேருவகையும் கொண்டோம். நூறு நூறாக நன்கொடைப் பணம் வந்து குவியாமற் போயினும் ஒவ்வொன்றாகவேனும் அன்பர்கள் உதவித் தொகை வந்து குவியலாயிற்று. பல்கலைக் கழக மாணவ மணிகள் பலர் கல்லூரி களில் பணந்திரட்டத் தொடங்கிவிட்டதாக நமக்குப் பூரிப்போடு அறிவித்திருக்கின்றனர். செந்தமிழ்ப்பேணும் நந்தமிழ்ச் செல்வர் சிலர் விரைவில் பெருந் தொகைகளை நல்குவதாக நமக்கு உறுதி யளித்துள்ளனர். பாவாணர்க்குத் துணை நிற்க முன்வரும் இத் தகைய செந்தமிழ் உள்ளங்களை வாழ்த்துகின்றோம்; வணங்கு கின்றோம். ஆங்காங்கு எடுத்த பணிகளைச் சோர்வும் சுணக்க மும் இன்றித் தொடர்ந்து புரியுமாறு அவர்தமைப் பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம். உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் எத்தனை என்று கணக்குப் பார்த்துவிட முனைந்துள்ள இப்பெரு முயற்சியில் எடுத்த பணி இடைமுறிவின்றித் தொடர்ந்து நடை பெற உண்மைத் தமிழர் முன்வரல் வேண்டும்.

தனிப்பட்ட முறையில் தாங்கள் பணந் திரட்டலாமா? என்று ஆங்காங்கிருந்து பொதுநலம் பேணும் முதுகுரவர் பலர் நமக்கு மடல்கள் எழுதி இசைவு கேட்டுள்ளனர். நம்பிக்கையும் நாநயமும் கொண்டார் ஆங்காங்கிருத்தல் உண்மையே எனி னும், மெய்த் தொண்டர்தம் செய்திறனை நாம் உடனுக்குடன் கண்டு கொண்டு அவரவரிடைப் பொறுப்புகளை ஒப்படைத்தல் எவ்வகையானும் ஏலாது. ஆயினும் எந்தமிழ்க் குரிசிலுக்கு யாமென்று முன்வரும் அச் செந்தமிழ் வாணர்களைப் புறந்தள்ளு தலும் சாலாது. தொகை தண்ட முன் வருவார் சிலர் தத்தமக்

குள்ள வினையாண்மை பற்றியும் நட்பாண்மை கொண்டும் ஆங்காங்கே நம் இசைவின்றியே, தொகை திரட்டத் தொடங்கிவிட்டதாகவும் அறிவித்துள்ளனர். எல்லா நிலைகளும் வரவேற்க வேண்டியனவே இருப்பினும் பாவாணர்க்கு இழுக்கு நேரா வண்ணமும், தென்மொழிக்குப் புன்மொழி ஏற்று வண்ணமும் அவர்தம் முனைப்பு அவிழ்ந்து மலருமானால் அத்தொண்டுக்கு விலையேது?

பாவாணர் பொருட் கொடைத் திட்டத்திற்கெனக் கையொப்பப் பெறுதாள்கள் (Cash Receipts) ஒன்றும் அடிக்கப் பெறவில்லை. அவை தேவையுமல்ல. அவற்றால் பல தொல்லைகளும் நேரலாம். ஆகையால், ஆங்காங்குள்ள அன்பர்கள் தாம் திரட்டும் தொகைகளுடன், நன்கொடையாளர் தம் பெயர் வரிசைகளை அமைச்சர்க்கு அனுப்பி வைக்க வேண்டுகின்றோம். பணத்தொகை உரியவிடத்துச் சேர்ந்தமைக்குத் தென்மொழியில் வெளியிடப் பெறும் பட்டியலே தக்க சான்றாம். இடை மறைந்த தொகைகள் எண்ணுப் பெறா. பணந் தண்டுவாரும் ஆங்காங்குள்ள தமிழ்க் கழகங்கள் மன்றங்கள் வாயிலாகத் திரட்டுதலே சாலச் சிறந்தது. மன்றமில்லாவிடத்துத் தக்கார் வழியாக இப்பொருள் திரட்டு நடைபெறுதலே தக்கதாம்.

ஊக்கமுடையார்வுழித் தூக்கித் தருக என, ஆக்கம் அகன்ற செந்தமிழ்ச் செல்வரை நோக்கிப் பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம்.

○ செல்வத்துப் பயனே ஈதல்!
துய்ப்போம் எனினே தப்புந பலவே!

○ ஈதல் இசைபட வாழ்தல், அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு.

அன்பன்
பெருஞ்சித்திரன்

முகவர்கள் கவனிக்க!

ஒவ்வோர் ஆங்கில மாதத்திலும் 5ஆம் நாளுக்குள் முந்திய மாதப் பட்டியல் தொகையை அனுப்பி வைப்பதே விரைந்தும், விரும்பியபடியும் இதழ் பெறுவதற்கு வாய்ப்பாகும். பட்டியல் தொகை நெடுநாளுக்குப்பின் வருவதால் இதழ் பெறுவதில் தொல்லை நேரும் என்பதை உணர்ந்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

—அமைச்சர்.

பாவாணர் பொருட் கொடைத் திட்டம்.

பெயர்ப் பட்டியல் - 1.

(10-1-64 வரை அலுவலகத்திற்குப் பணம் அனுப்பியவர்கள்)

	உருபா.
திரு. பா. வடமலைராசன்	3
,, அறிவன்	1
,, ஆ. இராசகோபால்	2
திருவாட்டி அன்புமலர் அறிவன்	1
'தமிழ்ப்பாவை' ஆசிரியர் திரு. கருணை அவர்கள் வழி 'மதுரை பாண்டியன் பொதுக் காப்பீட்டுக் கழக' அலுவலக நண்பர்கள் ஆகிய	
திரு. கருணை	6
,, டபிள்யூ. சி. சுந்தரேசன்	5
,, நெல்லையப்பன்	2
,, ச. இரா. நல்லப்பா	1
,, சொக்கலிங்கம்	1
,, தியாகராசன்	1
,, பத்மநாபன்	1
,, திருமலைநாதன்	1
,, சுப்பிரமணியன்	1
,, வின் சென்ட்	1
,, நாராயணசாமி	1
,, மீனாட்சிசுந்தரம்	2
,, செயராமன்	1
,, இராமசுப்பிரமணியம்	1
,, இராதாசுப்பிரமணியம்	1
,, சேசாச்சலம்	1
,, பிரதாபன்	1
,, சிவசைலநாதன்	1
,, அமல்ராசு	1
,, சைலபதி	1
,, சங்கரநாராயணன்	1
,, நடராசன்	1
,, பழனிநாதன்	1
,, வேலு	1
,, இராமச்சந்திரன்	1
,, விக்டர்	1—50
பூவலம் திரு. கு. செந்தமிழ்ச்சோதி	1
திரு. டி. இராதாகிருட்டிணன்	4
,, அர. தங்கராசன்	3
,, ந. செல்வப்பெருமாள்	

திரு. பிரபாகரன்	2
மல்லசமுத்திரம் திரு. கா. செ. முத்து	10
பெங்களூர் திரு. ந. மூனிசாமி	5
திரு. பெ. இராமசாமி	1
,, செ. மா. கருப்புசாமி	1
,, த. சு. சேசாத்திரி	1
,, க. குமாரசாமி	1
,, ச. திருமூர்த்தி	1
,, இரா. சு. தியாகராசன்	1
மொத்தம்	76—50

பாவாணர்

எழுதிய அரிய ஆராய்ச்சி நூல் !

பல்லாயிரக் கணக்கான உருபாக்களைச் செலவிட்டுப் பேராசிரியர்கள் பலர், பல ஆண்டுகள் முயன்று தொகுத்த

சென்னைப் பல்கலைக்கழகத்

தமிழ்ப் பேரகராதியின் சீர்கேடுகள்

தமிழன்பர்கள் தவறாமல் வாங்கிப் படிக்க.

விலை 75 காசு.

தனிப்படி வேண்டுவார் ஓர் உருபா அனுப்புக.

10 படிகட்கு மேல் வேண்டுவார்க்கு அஞ்சல் கட்டணம் இல்லை.

25 படிகட்கு மேல் வாங்குவார்க்கு
25 விழுக்காடு கழிவு தரப்படும்.

பணம் முன்னதாக அனுப்பினாலன்றிப் படிகள் அனுப்பப்பெறா.

பாவாணர் பொருட்கொடைத் திட்டத்திற்கென 50 உருபாக்களுக்குமேல் தொகுத்து அனுப்புகின்ற படிப்பகங்கட்கும், தமிழ் மன்றங்கட்கும், செந்தமிழ்ச் செல்வர்கட்கும் இரண்டு படிகள் அன்பளிப்பாக அனுப்பப் பெறும்.

-- அமைச்சர், தென்மொழி.

(14- ஆம் பக்கத் தொடர்ச்சி)

நூற்கு வடநூல் மூலங் காட்ட முயல்வர். ''ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' என்பது, தொல்காப்பியரின் ஐந்திர அறிவை மட்டும் குறிக்குமேயன்றி, தமிழிலக்கணநூல் வடமொழியிலக் கண நூல்வழிப்பட்டதென்பதைக் காட்டாது. ஆரியம் கருக் கொள்ளு முன்னரே தமிழ் குமரிக்கண்டத்தில் முழுவளர்ச்சி யடைந்திருந்ததையும், ஆரிய மொழிக்குத் தமிழே அடிப் படையாயிருத்தலையும் நோக்கும்போது, தமிழிலக்கணம் வட மொழி யிலக்கண வழிப்பட்ட தென்பது பேரன் பாட்டனைப் பெற்றானென்ற கதையாகவே முடியும். சித்தரஞ்சன் புகை வண்டித் தொழிற்சாலையில் சிறந்த வகையில் சூழ்ச்சியம் (Engine) செய்யப் பெறினும் அதைச் சென்ற நூற்றாண்டிற் புதுப்புனைந்தவர் சியார்சு தீபன்சன் (George stephenson) என்னும் ஆங்கிலேயர் என்பதை எவர் மறுக்க வொண்ணும்? அதுபோன்றதே தமிழிலக்கண முன்மையும் என்க.

விளிவேற்றுமை என்பது உண்மையில் எழுவாயின் வேறொரு வடிவே யாதலால், அதை முதல் வேற்றுமையுள் அடக்கி வேற்றுமை ஏழெனவே தமிழ் முதனூலார் கொண் டிருக்கலாம். பின்னூலார் அதை எட்டாக்கி யிருக்கின்றனர். இதையே இந்திரனும் தழுவியிருக்கின்றனன் பாணினியார் தொல்காப்பியர்க்குப் பிற்பட்டவரேனும், விளிவேற்றுமையை அட்டமீ (அஷ்டமீ) விபக்தி யென்னாது சம்போதனப் பிரதமா விபக்தியென்று எழுவாய் வேற்றுமையிலேயே அடக்கியிருக் கின்றனர். எந்நாட்டிலும் தன்னாட்டாசிரியர்க் குள்ளேயே பொருட் பிரிவு பற்றிக் கருத்து வேறுபாடிருப்பது இயல்பே. சிறுபொழுது ஐந்தென்றும் ஆறென்றும், புறத்திணை ஏழென்றும் பன்னிரண்டென்றும், தமிழத் தமிழாசிரியரே மாறுபடுதல் காண்க.

இனி, எழுத்துகளின் பிறப்பு முறை பற்றித் தொல்காப்பி யமும் பாணினி சிட்சையும்கூறுவது ஒன்றாயிருத்தல்பற்றி, முன் னதைப் பின்னதன் வழிநூலாகக் கருதி, தொல்காப்பியர் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டென்பர் வடமொழி வரலாற்றாசிரியர் பண்டாரகர்(Dr.) சுப்பிரமணிய சாத்திரியார்.

அகத்தியம், மாபுராணம், பூதபுராணம், அவிநயம், தொல் காப்பியம், காக்கை பாடினியம், நற்றத்தம், பனம்பாரம், வாய்ப் பியம் முதலிய பல தமிழிலக்கணநூல்கள், பாணினீயத்திற்குப் பல சில நூற்றாண்டுகட்கு முற்பட்டவை. அகத்தியத்திற்கு முந்திய முழுத்தூய தமிழிலக்கணங்களோ எத்தனையோ பல. ஆதலால் பாணினீயமாயினும் பாணினிசிட்சையாயினும், பிற வடமொழி இலக்கணநூல் எதுவாயினும், தமிழ்நூலை முதல்நூ லாகக் கொண்டதே அல்லது பின்பற்றியதே என்பதற்கு எள்ள

ளவும் ஐயமில்லை. வேதஆரியர் காலத்தில் வடஇந்திய மக்களும் பெரும்பாலும் திரவிடராயிருந்ததனால், அவருட் கற்ரேரிடைத் தமிழ் நூல்களும் வழங்கியிருத்தல் வேண்டும். ஆதலால், சிந்தாற்றங் கரையிற் செய்யப்பட்ட வேதத்தில் கலந்துள்ள திரவிட அல்லது தமிழவருடொலிகள் (Linguals or Cerebrals) பர். சுப்பிரமணிய சாத்திரியார் கருதுகிறபடி, ஆரியமொழிக்குரிய வாகா.

வடமொழி யொலிகளின் வன்மையும் பெருக்கமும் கலவையும், குறில் நெடில் அளபெடை யென்னும் மூவகை உயிர்ப்பகுப்பும், குணம் விருத்தியென்னும் உயிர்த் திரிபும், இருமை யெண்ணும், ஈறு பற்றிய செயற்கைப்பாலும், இடுகுறி (ரூடி) என்னும் சொல்வகையும், வேர்ச் சொல்லாகக் காட்டப் படுபவற்றின் திரி செ ற்றன்மையும், பிறவும் வடமொழியின் திரி நிலையையும் அம்மொழி யிலக்கணத்தின் பின்மையையும் காட்டப் போதிய சானரும்.

அடுத்த கட்டுரை 'சமற்கிருதவாக்கம் – இலக்கியம்' என்பது. ○

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

களைப் புறக்கணித்து விடல் வேண்டா என்று அறிவுறுத்து கின்ருேம். பாரத இராமாயண காலத்திலிருந்தே தமிழ்க்குலத்தை அழிக்கும் முயற்சி நடைபெற்று வந்திருக்கின்றது. வானியலும் அணுவறிவியலும் பரவிவரும் இக்காலத்து மக்கள் உணர்வுகளை வரலாற்றுப் போக்கில் மதித்து நடக்கும்படி, காலம், சூழல், செல்வம் இவற்ருல் ஒரோ வழி அமைச்சராகி இருப்பவரை வேண்டிக் கொள்கின்ருேம். பிறர் யாவரினும் தாம் மேம்பட்ட அறிவுடையார் என்று செருக்குரை பகர வேண்டா. பயிர்க்கு வேலியாக அமைந்த காரணம்பற்றி வேலி பயிரை மேய வேண்டுவதில்லை; பயிரினும் வேலி மேம்பட்டதுமில்லை. ஆட்சி யாளர் நாட்டின் காவலர்கள்; மக்கள் வலிவே அவர்களின் வலிவு. மக்கள் தமக்கு உட்பட்டவர்கள் என்ற காரணம்பற்றி உந்து வண்டி ஓட்டிபோல் எவ்வழியிலேனும் அவர்களைத் திருப்பலாம் என்பது பேதைமை! தம் போக்கை விரைவு படுத்தவும் குறைக்கவும் நிறுத்தவுமே வண்டி ஓட்டிக்குச் சிறு உரிமை வழங்கப்பட்டுளதே அன்றி, மக்கள் தம் போக்கை மதியாமல் நடப்பதற்கன்று, என்பதை ஆள்நர் எண்ணிப்பார்க்க வேண்டும்.

> எண்பதத்தான் ஓரா முறைசெய்யா மன்னவன்
> தண்பதத்தான் தானே கெடும்.

*

தென்மொழி பதிவு எண்: எம். 72

பொருளடக்கம்

சுவடி 1 ஓலை 12

தை - தி. பி. 1995.

சக்ளாவின் செருக்குரை	(ஆசிரியவுரை)	3
சமற்கிருதவாக்கம் - இலக்கணம்	(பாவாணர்)	7
எண்சுவை எண்பது	(இலக்கியம்)	15
வடநூற் கொள்கை மறுப்பு		20
கரிபால்டி	(வரலாறு)	26
பாட்டு அரங்கம்		34
இந்தி எதிர்ப்பு - அறிஞர் கருத்து வரிசை		38
செந்தொடை		40
கல்வி	(விவேகானந்தர்)	44
தமிழ்மகள் வருத்தம்	(பாடல்)	47
தமிழில் எழுத்துச் சீர்திருத்தம்		48
சப்பானியரின் வியத்தகு பழக்கங்கள்		54
நாலடியாரின் ஆசிரியர் பலரே!		60
தமிழர் யார்?		64
பாவாணர் பொருட் கொடைத் திட்டம்	(அறிக்கை)	71

மற்றும்

நகைநலம், ஆங்கில மொழியாக்கம், நூல்நிறை முதலியன

விலை 50 காசு.

மித்திரா அச்சகம், கடலூர்-2.